இப்பொழுது எங்கள் ஆடைகள் உண்மையிலேயே வெண்மையாக யிருக்கின்றன.

501 ஸ்பெஷலால் சலவை செய்யும் நம் மெல்லிய துணிகளெல்லாம் எவ்வளவு சுத்தமாயிருக்கின்றன. நீங்களே கண்டு சந்தோஷமடைவீர்கள்! 501 ஸ்பெஷல் அதிகமான சுத்திகரண சக்திவாய்ந்தது. அது அழுக்கு பூராவையும் சீக்கிரம் போக்குகிறது. அது முற்றிலும் கலப்பற்ற ஸோப்பாகையால், மெல்லியதோ சாயம் தோய்க்கப்பட்டதோவான எவ்வித ஆடைகளுக்கும் கேடிழைப்பதில்லை.

டாம்கோ விற்பனை இலாகா,
நெ. 1, வாரன் ரோட், பீமன்பேட்,
மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட். டாடாபுரம் & பம்பாய்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாமஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.

Please apply at once to:—

S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

டாக்டர்களும், நர்ஸுகளும் ஜாம்-பெக் சிபார்சு செய்து உபயோகிக்கின்றனர்

பிரபல கிருமிநாச சரும மெழுகு.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக உலகப் பிரசித்தி பெற்றது. வெட்டுக்காயம். ரணங்களுக்கு ஜாம்-பெக் உன்னத நிவாரணியாகும். தேமல், ரணம், விஷப்புண், குழிப்புண், கால் ரணம், மூலம் முதலியவற்றிற்கு டாக்டர்களாலும், நர்ஸுகளாலும் சிபார்சு செய்யப்படுகின்றது. இதன் அரிய மூலிகை சத்துக்கள் வலி, வீக்கத்தைக்குறைத்து, சீழ்வடிதலை நிறுத்தும். தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ 1. ஏஜண்டுகள்: மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

மெலிவாகவும், அழகாகவும் ஏன் இருக்கலாகாது?



வெளி அழகு அழகல்ல. உள்ளூர சுத்தமாயிருந்தால், பிரகாசமான கண்கள் அழகிய சுத்தமான மேனி தானாகவே ஏற்படும். எனவே தினசரி படுக்குமுன் இரண்டு பைல்பீன்ஸ் மாத்திரைகளைத் தவறாமல் உட்கொள்ளுங்கள். பைல்-பீன்ஸ் சுத்த தாவர சத்து, சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்திசெய்து, அனவசியமான உணவை வெளிப்படுத்திவிடும். இதனால் உள்ளூர ஆரோக்யம் ஏற்பட்டு, அழகும், சரீர மெலிவும் ஏற்படும்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1 வீதம் விற்கின்றனர்.

BILE BEANS

பைல்பீன்ஸ் ஆரோக்யமாகவும், திடமாகவும், சந்தோஷமாகவும் செய்யும்.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு. விலை ரூ. 1—12—0 — தபாற்செலவு அணா 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங்.

Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

நரையை ஒழியுங்கள்.

தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான நந்தக் கறுப்பு சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.

APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER, Coimbatore.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 45 6-12-'42 Price 2 Annas.

இயற்கையான வாஞ்சையுடன்
அடைய விரும்புதல்
குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்
தரும்
வுட்வார்ட் வைத்தியனின்
"கிரைப் வாட்டர்"
என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

சென்றவார நிகழ்ச்சிகள்

ஆங்கிலோ-இந்தியரின் உறுதி

ஆங்கிலோ-இந்தியர் சங்க பிரதம தலைவர் மிஸ்டர் அந்தோனி அலகாபாத் சங்கக்கூட்டமொன்றில் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்:—

தமது தாய் நாடாகிய இந்தியப் பெரு நாட்டைத் துண்டாடுவது கூடாது; உண்மையான ஒரு தேசிய ஸர்க்கார் ஆட்சியில் இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும். அந்த ஆட்சியில் பற்பல மைனாரிட்டி வகுப்பினரின் உரிமையும் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும். இந்தியாவிலுள்ள மைனாரிட்டிகளின் உரிமையைத் தக்கவாறு கவனிக்காவிட்டால், எந்த அரசியலும் நீடிக்க முடியாது. இந்தியாவிலுள்ள ராஜீயத் தலைவர்கள் வேண்டுமென்றே ஆங்கிலோ-இந்திய வகுப்பினரின் உரிமைகளைப் புறக்கணிக்கப் பார்க்கிறார்கள். பெரிய ராஜீய மகாநாடுகளில் இவ்வகுப்புப் பிரதிநிதிகள் கலந்து கொள்வதுமில்லை. ஆங்கிலோ-இந்திய வகுப்பு இந்தியாவில் முக்கியமான ஒரு மைனாரிட்டி வகுப்பாகும்; ஆனால் முன்னம் இவ்வகுப்பினர் செய்த தவறுக்காக இப்போது இவர்களைப் புறக்கணிப்பது கூடாது. முன்னம் தவறி நடந்ததை ஒப்புக் கொள்ளுகிறோம். உண்மையான தேசிய லக்ஷியத்துக்கு ஆங்கிலோ-இந்தியர்கள் ஆதரவு அளிக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு ராஜீயக் கட்சியோ அன்றி வகுப்போ சர்வாதிகாரம் வகிப்பதை இச்சமூகம் ஸஹிக்காது.

இந்திய அரசியல் திட்டத்தை நிர்யணயிப்பவர்கள், மைனாரிட்டி வகுப்பினரின் பொருளாதார ராஜீய உரிமைகளைக் கவனிக்க வேண்டியது அத்யாவசியமாகும். இந்தியாவின் அபிவிருத்திக்காக ஆங்கிலோ-இந்திய வகுப்பு எத்தனையோ ஊழியம் செய்திருக்கிறது. இவ்வகுப்பினரையும் சரி, மற்ற முக்கியமான மைனாரிட்டி வகுப்பினரையும் சரி, கவனிக்காது ஒதுக்கி நிறைவேற்றும் எந்த அரசியலும் நீடிக்காது, இதனால் நாட்டில் குழப்பமும் கலவரமும்தான் நேரும்.

தற்சமயம் நாட்டில் ஸஹிப்புத்தன்மையும் பரஸ்பரம் நல்லெண்ணமும்தான் வேண்டும். இம்முறையில் செய்யப்படும் ஒப்பந்தம்தான் இந்தியாவின் ஒற்றுமையை வளர்க்கும் என்றார்.

* * * *

ராஜாஜி விளக்கம்

"யுத்தம் முடிவதற்கு முன் நாட்டில் தேசிய ஸர்க்கார் இருக்கவேண்டியது அவசியம். நமது தலைவர்கள் யுத்தம் முடியும் வரை சிறையிலிருக்கலாகாது. அவர்கள் விடுதலையும் அவசியம். தேசிய ஸர்க்கார் ஏற்படுத்த லீகுடன் சமரஸம் செய்துகொள்ள வேண்டும். இதை உடனேயே செய்து கொண்டால் எல்லோரும் பயனடையலாம். தற்போதைய நிலைமை நீடித்திருப்பது ஒருவருக்கும் பிரயோஜனமில்லை" என்று ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் லயோலா காலேஜ் பொருளாதாரச் சங்கத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

காந்திஜியைச் சந்திக்க ராஜப் பிரதிநிதி அநுமதி மறுத்ததைப் பற்றியும் ராஜாஜி விரிவாகக் குறிப்பிட்டார். முயற்சியை விட்டுவிடும்படி பல நவீன சல்யர்கள் புத்திமதிகூறக் கிளம்பியிருப்பதாயும், இதைக் கவனிக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

* * * *

இந்தியாவின் சீப் ஜஸ்டிஸ்

பார்லிமெண்டு அங்கத்தினரான மிஸ்டர் வில்லியம் பாட்ரிக் ஸ்பென்ஸ் இந்தியாவின் சீப் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போது இந்திய சமஷ்டிக் கோர்ட்டு ஜட்ஜாகவுள்ள ஸர் மாரிஸ் க்வயருக்கு அடுத்த ஏப்ரல் 25-ந் தேதியோடு 65 வயது பூர்த்தியாவதால் அவர் விலகிக் கொள்கிறார்.

* * * *

ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசிக்குத் தடை

நகரில் காலரா இருந்து வருவதை முன்னிட்டு ஸ்ரீரங்கத்தில் இந்த வருஷம் வைகுண்ட ஏகாதசி உத்ஸவத்தை நடத்தக் கூடாதென்று திருச்சி ஸப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கி. பு. கோ. 144-வது பிரிவுப்படி ஒரு தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

* * * *

சிறையிலுள்ள தலைவர்கள்

சென்ற மாதம் 26-ம் தேதி காமன்ஸ்சபையில் மிஸ்டர் அமெரிக்கு கீழ்க்கண்ட கேள்விகள் விடுக்கப்பட்டன:—

தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தியத் தலைவர்களுக்கு இந்நாட்டிலுள்ள தனிப்பட்டவர்கள் கடிதமோ தந்தியோ அனுப்பலாமா?

அவர்களுக்குக் கடிதமோ, தந்தியோ அனுப்ப இந்தியத் தலைவர்கள் அனுமதிக்கப்படுகின்றனரா? அல்லது இனி அனுமதிக்கப்படுவரா?

அத்தலைவர்கள் பகிரங்கமாக அறிக்கை எதுவும் வெளியிட அனுமதிக்கப்படுவரா?

மிஸ்டர் அமெரி பின்வருமாறு பதிலளித்தார்:—

காவலில் வைக்கப்பட்ட இந்தியத் தலைவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் மட்டும், அதுவும் சொந்த விஷயங்களைப்பற்றியே கடிதப் போக்குவரத்து நடத்த அனுமதிக்கப்படுவதாகத் தெரிகிறது. தற்போதுள்ள கட்டுப்பாடுகள் எப்போது தளர்த்தப்படும் என்று நான் சொல்வதற்கில்லை.

அத்தலைவர்கள் பகிரங்கமாக அறிக்கை வெளியிட அனுமதிக்கப்படுவரா என்பது அவ்வறிக்கையின் தன்மையை பொறுத்ததெனத் தோன்றுகிறது.

பார்லிமெண்டு அங்கத்தினர்கள் காங்கிரஸ் தலைவர்களுடன் கடிதப்போக்குவரத்து நடத்தலாமா என்ற கேள்விக்கு மிஸ்டர் அமெரி "அது இந்திய ஸர்க்கார் தங்கள் உசிதப்படி முடிவு செய்யக்கூடிய விஷயம்" என்று பதிலளித்தார்.

* * * * *

மிஸ்டர் சர்ச்சிலின் ஜோஸ்யம்

மிஸ்டர் சர்ச்சில் சென்ற மாதம் 29-ந் தேதி இரவு ரேடியோவில் பேசுகையில், "நமது வாழ்வையும், நாம் உன்னதமாகக் கொண்டுள்ள அனைத்தையுமே நிர்மூலமாக்கியிருக்கக் கூடிய ஆபத்துகளை நாம் நிச்சயம் சமாளிப்போம். நாம் மேலும் மனிதவர்க்கத்தின் முன்னணியில் இருந்து கொண்டு மேற்கொண்டு சேவை செய்யக் கூடிய நிலையிலிருந்து வருவோம் என்று திண்ணமாக நம்ப

பிரதம நீதிபதியாக் நியமிக்கப்பட்டார்

திருவாங்கூர் ஹைகோர்ட் சீப் ஜட்ஜாக திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் அடுத்த வருஷாரம்பத்தில் புதிய பதவியை ஏற்பார். இந்தப் பதவியை இவர் 5 வருஷகாலம் வகிப்பார். (பி. பி. பி.)

நமக்கு வர வர அதிகமான உரிமை ஏற்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

"யுத்தம் நீண்டகாலம் நடக்காதென்றோ, வரும் ஆண்டுகள் மிகக் கொடூரமானவையாக இராதென்றோ நம்புவதற்கான எதுவும் இதுவரை ஏற்படவில்லை.

ஆசியா யுத்தத்திற்கு முன் ஐரோப்பாவில் யுத்தம் முடிவுக்கு வரலாம். அங்ஙனம் ஏற்பட்டால், நமது சக்தி முழுதையும் கொண்டு ஜப்பானுடன் யுனைடெட் ஸ்டேட்ஸும், சீனவும், ஆஸ்திரேலியாவிலும், நியுஸிலந்திலும் உள்ள நமது நெருங்கிய உறவினர்களும் நடத்தும் போராட்டத்தில் அவர்களிக்கு உதவ வேண்டும்." என்று மிஸ்டர் சர்ச்சில் கூறினார்.

"வெற்றிக்குப் பின் என்ன செய்வதென்பது பற்றி வெற்றி எய்துவதற்கு முன் நம்மிடையே சச்சரவிட்டுக் கொள்ளக் கூடாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

* * * *

ரஷ்யப்படை முற்போக்கு

ஜெனரல் ஸுகோவின் படைகள் மாஸ்கோவுக்கு வடமேற்கேயுள்ள ஜெர்மன் அரண் வரிசைகளில் ஏற்பட்ட பிளவுகள் வழியாக முன்னேறி லட்வியா எல்லைக்கு 60 மைல் தூரத்திலுள்ள 3நாவோஸோகோலினிகி என்ற முக்கிய நகரின் வாயில்களை அடைந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

* * * *

நேசப்படை பிடித்தது

மடகாஸ்கரிலிருந்து கிழக்கே 300 மைல் தூரத்தில் இருக்கும், ரீயூனியன் தீவில் பிரிட்டிஷ் துருப்புகள் இறங்கி விட்டன என்று விச்சி காலனிகள் மந்திரி அறிவிக்கிறார். இதில் ஒரு பகுதி தென்னாப்ரிக்கப் படையாகும். துருப்புகள் பாதுகாப்பு நிலையங்கள், அற்றிருந்த செயிண்ட் டென்னிஸ் என்ற நகரைக் கைப்பற்றின.

* * * *

ஜப்பான் பிடித்த தீவு

அலூஷியன் தீவுக் கூட்டத்தின் மேற்குக் கோடித் தீவான அட்டு தீவை ஜப்பானியர் திரும்பக் கைப்பற்றினர். அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் அட்டு தீவிலுள்ள எதிரி சாமான் கப்பல் ஒன்றை சென்ற மாதம் 26-ந் தேதி தாக்கிய போது அது 3-குண்டு பட்டு தீப்பற்றி எரிந்தது. இங்கு முக்கியமான கால நிலை ஆராய்ச்சிக் கூடமுள்ளது.

முஸோலினியே ஸேனாதிபதியானார்

வட ஆப்பிரிக்காவிலுள்ள இத்தாலியப் படைகளின் சேனாதிபதியான பாஸ்டிகோ அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டு விட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது.

லிபியாவில் இத்தாலிய ஸேனாதிபதி பதவியை முஸோலினியே ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

நாஜி ஆக்கிரமிப்பு

ஹிட்லரின் உத்தரவுப்படி சென்றமாதம் 27-ந் தேதி ஜெர்மன் படைகள் டூலான் துறைமுகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டன. அத்துறைமுகத்திலிருந்த பிரஞ்சுக் கப்பல்கள் அனைத்தையும் பிரஞ்சு அதிகாரிகளே மூழ்கடித்து விட்டதாக விச்சி ரேடியோ அறிவிக்கிறது.

அன்று காலை 10 மணிக்கு டூலான் துறைமுகத்தில் முழுகாத கப்பல் ஒன்றுகூட பாக்கியில்லையெனத் தெரிய வருகிறது. ஆனால் அங்கிருந்த பிரெஞ்சுக் கடற்படையில் ஒரு பாகத்தை மட்டுமே பிரஞ்சு அதிகாரிகள் நாசம் செய்தனர் என்று ஜெர்மன் அறிக்கை கூறுகிறது.

டூலானில் கரையோரமாயிருந்த பீரங்கிகள், கடற்படையின் தளவாடசாலை, வெடிமருந்துக் கிடங்குகள், எண்ணெய் டாங்கிகள் முதலியவற்றை பிரஞ்சு அதிகாரிகள் தகர்த்து விட்டதாக பிரஞ்சு ரேடியோ அறிவிக்கிறது.

(18-ம் பக்கம் பார்க்க)

முயற்சிக்கு முடிவுண்டோ?

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்
எழுதியது

ராஜிய நிலைமையைப்பற்றி எங்கும் கவலைக்குறி காணக் கிடக்கிறது. நான்கு பேர் கூடுமிடமெல்லாம் பேச்சு அதைப்பற்றித்தான். யுத்தப் போக்கில்கூட பரபரப்பு அவ்வளவு காணவில்லை. நேசக் கட்சியினர் ஜயிக்க ஆரம்பித்து விட்டனர். பின்வாங்கும் படலம் மாறிவிட்டது. தற்காப்போடு நிற்கவில்லை. முன்னேறித்தாக்க முனைந்துவிட்டனர். எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தரக்கூடிய செய்தி. இந்தியரும் சந்தோஷப்படுகின்றனர். சந்தோஷத்தோடு சற்று சந்தேகமும் தட்டுகிறது. வெற்றி வெறிகண்டால் நியாய புத்தி நிலைக்குமா என்ற சந்தேகம். சந்தேகப்பட இடமில்லை என்று யார் உறுதி கூறமுடியும்? வெற்றிச் சுவடு கண்டதும் சர்ச்சில் துள்ளிக் குதிக்கவில்லையா? விட்டுக்கொடுப்பதே வெற்றிக்கு வழியென்று சொல்லத் தயங்கும் நேசதேசங்கள் வெற்றிக்குப் பிறகு சொல்லத் துணிந்தாலும் ஏறுமா? கவலைப்படக் காரணம் அதுதான்; குஷிப்படக் காரணம் இருந்தும் கவலை விலகவில்லை.

கவலை விலக வேண்டும். தானாகத் தீர்ந்துவிடாது. முயற்சி வேண்டும். நிலைமை நம்பிக்கை அளிக்காவிட்டாலும் ராஜாஜியின் விடாமுயற்சியின் மர்மம் இதுதான். பிரிந்து கிடக்கும் சமூகங்கள் ஒன்றுபட்டால் நியாயம் வழங்க நிர்ப்பந்தம் பிறக்கும் என்பது அவருடைய திட ஸித்தாந்தம். உண்மையில் நியாயம் வழங்கப் பிரிட்டிஷாருக்கு உத்தேசம் உண்டா என்று சிலர் கேட்கின்றனர். நியாயம் வழங்குவதை மறுக்கக் காலம் இடம் தரவில்லை. ஒன்றுபடமாட்டார்கள் என்ற தைரியத்தில் ஒன்றுபட்டால் விடுவதாகச் சொல்லி வரலாம். ஒன்றுபட்டுவிட்டால் தட்டிக் கழிக்க வேறு காரணம் கற்பிக்கலாம். ஆயினும் என்ன? ஊகக்கோட்டையில் ஊக்கம் இழப்பது விவேகம் அல்ல. இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். ஒன்றுபட்டால் மக்களுக்குள்ள பலம் கூடுமா குறையுமா? கூடுவது நிச்சயம். கூடுவதால் காரியமும் கூடலாம். கூடாவிட்டால் குறையில்லை. கூட்ட முயற்சிப்பது கடமை என்கிறார் ராஜாஜி. அவருடைய முழுக்கவனமும் அதில் திரும்பி இருக்கிறது.

முஸ்லிம் லீகுடன் உறவாடுவது எளிதல்ல. காங்கிரஸ் என்றால் காந்தி என்று சொல்லுவதுண்டு. அதில் ஓரளவுதான் உண்மையுண்டு. ஆனால், லீக் என்றால் ஜின்னாவென்பது முற்றிலும் உண்மை. காரணம் அதற்கு உண்டு. ஜின்னாதான் லீகுக்கு உருவும் உயிரும் தேடிக்கொடுத்தார். அவர் ஒருவர் இல்லாவிட்டால் உருவும் குலைந்துவிடும், உயிரும் இழந்து விடும். பொருளாசை அவருக்குக் கிடையாது; பதவி மோகமும் இல்லை; அகம்பாவம் ஒன்றே அவர் ஆண்டுவரும் கோல். காலபலத்தினால் அதற்கு சர்வ வல்லமை வாய்த்தது. காங்கிரஸ் அதிகார பதவிகளைத் துறந்ததுதான் தாமதம்; சமயம் காத்து வந்த முஸ்லீம் லீக் சலசலப்புக் காட்ட ஆரம்பித்தது, எதிர்பாராத இடத்தில் ஆதரவு திரண்டது. காங்கிரஸின் தீவிர கோரிக்கைகளை மறுக்க லீக் உதவிற்று, ஜின்னா கெட்டிக்காரர். அதிகாரவர்க்கத்தின் புன்சிரிப்பில் நிதானம் இழக்கவில்லை. நிலைமையை அறிந்து நிரந்தர பலத்திற்கு வழிதேடிக்கொண்டார். காங்கிரஸைத் தாக்கும் அளவுக்கு கவர்ன்மெண்டுக்குத் துணையாய் இருந்தார். ஆனால், கவர்ன்மெண்டுடன் உறவாட முன்வரவில்லை. எவ்வளவு தூரம் எவ்வளவு காலம் கவர்ன்மெண்டின் தயவு நிலைக்கும் என்பது அவருக்குத் தெரியும். கூடவே சிதறிக்கிடக்கும் தன் சமூகத்தினருக்குக் குறியொன்று காட்டவேண்டியிருந்தது. பாகிஸ்தான் பிரகடனமாயிற்று.

பாகிஸ்தான் லக்ஷியமாகக் கொள்ளப்பட்டதேயொழிய, திட்டமாக விவரங்களுடன் இன்றளவும் வெளிவரவில்லை. இரண்டு ஜாதிக்கொள்கை; இரண்டு கூறாக நாட்டைப் பிரிப்பது; இரண்டு பாகங்களுக்கும் இடையே விளக்கமற்ற தொடர்பு—இவையெல்லாம் சந்தேகத்தைக் கிளப்பி, சஞ்சலத்தை வளர்த்ததேயொழிய நாட்டின் லக்ஷியசித்திக்கோ சமூகத்தின் லக்ஷியசித்திக்கோ வழிகாட்டவில்லை. இரு சமூகங்களுக்கும் இடையே கிளம்பிய வாய்ச்சண்டை சாக்ஷிக்காரனுக்கே உதவிற்று. இருவரும் தனித்து சுயராஜ்யம் கேட்பதற்கில்லை. இருவரும் 'சேராதவரையில் அன்னியன் வெளியேறத் தேவையில்லை. இதையும் ஜின்னா அறிவார். அறிந்தே பிடிவாதம் காட்டிவருகிறார். கருத்து என்ன? ஹிந்துக்கள் பெரும்பான்மை சமூகத்தினர்; அவர்கள் வகுத்தது சட்டம் என்பது அடங்க வேண்டும்; முதல் எண்ணம் அது. தம்பியின் சம்மதமில்லாமல் அண்ணன் பேருக்குப் பட்டா மாற்ற முடியாது; பட்டா மாற்றுமுன் அநுபோகத்தை தெளிவாக்கி விடவேண்டும்; முடிவில் தான் கேட்பது கிடைக்கும் என்ற நினைவு, அந்த கட்டம் வந்து விட்டதா? நிச்சயம் பிறக்கவில்லை. ஜின்னாவுக்கு ராஜாஜியிடம் மதிப்புண்டு. அவர் வார்த்தைக்குக் காங்கிரஸ் என்ன மதிப்புக் கொடுக்கும்? அது தெரியும் வரையில் கரையிலிருந்து குதிக்கத் தயாரில்லை. கவர்ன்மெண்டை விரோதித்துக்கொள்ளவும் துணிவு இல்லை. அவர் நிலைமை அதுதான்.

ராஜாஜி என்ன செய்வது? சாதாரண மனிதராயிருந்தால் ஆகாத காரியத்தில் மெனக்கெட மாட்டார். காரியம் முடிய வேண்டும்; முடித்து வைக்கலாம்; முயல வேண்டும் என்கிறார். மகாத்மாவைக் காண ராஜப்பிரதிநிதி அநுமதிக்க வில்லை. எதிர்பாராத ஏமாற்றம் அது. எல்லாருக்கும் ஏமாற்றம். ஜின்னாவுக்குக்கூட என்று ராஜாஜி சொல்லுகிறார். ஜின்னா அதை மறுக்கவில்லை. ஜின்னாவே வாய்விட்டுச் சொல்லியிருந்தால் நன்றாயிருந்திருக்கும்; சொல்லவில்லை. காங்கிரஸ் ஆதரவு துலங்காத வரையில் கவர்ன்மெண்டின் ஆதரவை இழக்க மனம் இல்லை போலும்! அனுமதி மறுப்பையே அஸ்திவாரமாகக்கொண்டு கிளர்ச்சிக்கு கூர் கட்டப் பார்க்கிறார் ராஜாஜி. பசை போதாது. ஸப்ரூ கோஷ்டியினர் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டலாமாவென்று யோசித்து வருகின்றனர். அவர்களிடம் மக்களுக்கு மதிப்புண்டு. ஆனால் தொடரத் தயங்குவர் செயலாளர் அல்ல; குறை அதுதான். பின் என்னதான் செய்வது? எல்லாரும் அதையே கேட்கின்றனர். கேள்வி கேட்டால் மாத்திரம் காரியம் கூடிவிடாது; கடமையும் தீர்ந்து விடாது என்கிறார் ராஜாஜி. வழி துலங்காவிட்டால் வழி காட்டுபவருக்கு வழிவிடுங்கள் என்கிறார். மனம் துடிக்கிறது அவருக்கு. சமயம் சரியக் கூடாதென்ற கவலை. விடாமல் முயற்சித்து வருகிறார். முயற்சி மதிப்புக்குரியது. பலம் கட்டினால் பலிக்கவும் கூடும். பழிப்பது சுலபம், பரிஹஸிப்பது சாமர்த்தியம் என்றும் சிலர் நினைக்கலாம். நஷ்டம் ராஜாஜியினுடையதல்ல. நாட்டுக்குத்தான் நஷ்டம். ராஜாஜி சம்பந்தப்பட்டவரையில் முயற்சியுடையோர் உண்மையில் இகழ்ச்சியடையார் என்பது போதும்.

மன்னர் தம்பதிகள்

பக்கிங்ஹாம் அரண்மனையில் ஆறும் ஜார்ஜ் மன்னரும் எலிஸபெத் ராணியும் தனிமையாக உட்கார்ந்திருக்கும் காட்சி.

சீவக சிந்தாமணி-24.

கட்டியங்காரன் வீழ்ச்சி

வ. வேணுகோபாலன் எழுதியது

ஆறு நாட்களாக இடைவிடாமல் முயன்றும் திரி பன்றியை எய்து வீழ்த்த முடியவில்லை. 'இது முடியாத காரியம்' என்று யாவரும் ஊக்கம் இழந்தனர். ஏழாம் நாள் பன்றியை எய்வதற்குச் சீவகன் புறப்பட்டான். அன்று, கட்டியங்காரன், மதனனுடன் படை சூழ அங்கு வந்திருந்தான். அரசர்கள் யானைகளின் மேல் இருந்து திரிபன்றி யந்திரத்தை எய்யும் ஒவ்வொருவரையும் பார்த்து வியந்தனர். ஒரு யானை மீது ஏறி வில்லையும் அம்பையும் தாங்கியவண்ணம் அங்கு சீவகன் தோன்றினான். சீவகனைக் கண்டதும், புலியைக் கண்ட மான்போல் கட்டியங்காரன் மனம் கலங்கினான். சீவகன் இறந்தானென்று எண்ணியிருந்த கட்டியங்காரன் அவனைக் கண்டதும் உடல் நலங்க இருந்தான். 'அநங்கமாலை நாட்டியத்தில் அகப்பட்ட புலியைச் சிறைப்பிடித்த யான் அதனை வாளுருவிவிட்டேன். அத்தப்பு என்னை இப்பொழுது வருத்துகிறது. மதனனைத் தப்பி இவன் ஓடிய தப்பும் என்னை வருத்துகிறது' என்று சிந்தை கலங்கித் தான் ஏறியிருந்த யானையின் தலையில் கையால் தட்டிக் கோபத்துடன் இருந்தான்.

யானையில் ஏறிச் சென்ற சீவகன், திரிபன்றி இருக்குமிடம் சென்றதும் கீழே இறங்கினான். தன் வில்லின் நாணைத் தெரித்தான். பன்றிகள் மூன்றும் ஒன்றாகச் சேரும் சமயத்தை நோக்கி சிறிது நின்றான். 'சீவகன், திரிபன்றியை வீழ்த்துவனோ?' என்று மன்னர் மனம் கலங்கி இருந்தனர். அப்போது சீவகன் சட்டென்று சக்கரத்தில் குதித்தான். வில்லை வளைத்து ஓர் அம்பைத் தொடுத்துப் பன்றி மீது குறி வைத்து எய்தான். உடனே மூன்று பன்றிகளோடு கட்டியங்காரனுடைய வாழ்நாளும் அற்று வீழ்ந்தன. அதைக் கண்டு எல்லாரும் ஆரவாரம் செய்தனர். சிலர் சீவகனைப் போற்றினர். சிலர் கோபித்தனர். சிலர் மனம் புழுங்கினர். கட்டியங்காரன் அறிவு கலங்கினான். உடனே கோவிந்தராசன், கட்டியங்காரனுக்கு முன் சென்று, "நம் சீவகசாமி, ஏமாங்க நாட்டின் அரசன் சச்சந்தனுடைய குமரன்—என் மருமான்—இப்போது, திரிபன்றிகளை வீழ்த்தி என் மகள் இலக்கணைக்குக் கணவன் ஆனான். இனி, பகைவரை வென்று, தன் நாட்டையும் பெறுவான்" என்றான். பின்னர், அச்செய்தியை எல்லா அரசர்களுக்கும் கூறினான். சீவகன் வரலாற்றைக் கேட்டு யாவரும் வியந்தனர். 'மேல் என்ன நிகழுமோ?' என்று அஞ்சினர்.

அப்போது ஆகாயத்தில், ஒரு யக்ஷன் தோன்றி, "சீவகன் என்னும் சிங்கம், வேலாகிய சோலையில் நிற்கும் கட்டியங்காரன் என்ற யானையின் உயிரை விழுங்கும்" என்று கூறி மறைந்தான். அதைக் கேட்டுக் கட்டியங்காரன் மனம் புழுங்கினான்; "அடா, சீவகா, மாமன் படை கொண்டு வந்தாயென்று, யான் அஞ்சுவேனோ? என் வன்மையை உன் தந்தை அறிவான்; நீ அறியாய். போரில் உன்னையும், வஞ்சனையால் என்னைக் கொல்ல எண்ணிய உன் மாமன் கோவிந்தனையும் கொல்கிறேன்" என்று வஞ்சினம் கூறினான். சூரியகாந்தம் சூரியனைக் கண்டதும் தீயைக் கக்குவதுபோல் சீவகன் வெற்றியைக் கேட்டதும் மதனன் மனம் புழுங்கினான். கட்டியங்காரன் சில விநாடிகளில் நால் வகைப் படைகளையும் தொகுத்தான். வேல் வீரராகிய கட்டியங்காரனுடைய பிள்ளைகள் நூற்றுவரும் கூடினர்.

சீவகன் பக்கத்தில், படையும், யானையும், தேரும் நான்கரைக் கச்சம், குதிரைகள் எழுநூறாயிரம்; காலாட் படை ஏழு தேவகோடி, கட்டியங்காரன் பக்கத்தில் படையும், யானையும், தேரும் ஐந்தரைக் கச்சம்; குதிரைகள் ஏழு நூறாயிரம்; காலாட்படை ஏழுதேவ கோடி.

இருவர் படையும் அணிவகுத்து நின்றன. முரசம் முழங்கின, சங்கமும், பறையும் ஆர்த்தன. பம்பையும் சிறு சின்னமும் ஒலித்தன. இவ்வோசைகளின் மிகுதியால் எவ்விடத்து ஒலியும் கடல் முழக்கத்தை ஒத்தன.

வாளும் வாளும் மின்ன, வேலும் வேலும் மாறுபட, இருவர் படையும் மோதிப் பொருதன. யானைகள் பலவேறு துண்டங்களாயின. குதிரைகள் உருத் தெரியாமல் வெட்டுப்பட்டன. வீரர்கள் ரத்தத்தைக் கக்கினர். யானையைத் தலையணையாகவும், குதிரையைக் காலணையாகவும்கொண்டு வீரர் வீழ்ந்து கிடந்தனர். வீரர்களது, மார்பிலும், வயிற்றிலும், முகத்திலும் ரத்த ஊற்றுக்கள் குமிழிவிட்டுக் கிளம்பின. வீரர்களது குடலைப்பற்றி இழுக்கும் நரிகள், சங்கிலிகளை இழுக்கும் நாய்களைப்போன்றன.

மதனன் இடிபோல் முழங்கிச் சென்று விசயன் ஏறியிருந்த யானையின் நெற்றியில் பாய்ந்தான். உடனே தன் கைவாளால் அவனை வெட்டி வீழ்த்தினான் விசயன். அதைக் கண்ட மதனன் தம்பி, மன்மதன், விசயனை எதிர்த்தான். உடனே விசயன் யானை அவனைத் தாக்கியது. அப்போது மன்மதனை வெட்டித் தள்ளினான் விசயன். புத்திசேனன் உருவிய வாளுடன் காற்றுபோல் திரிந்து கட்டியங்காரனுடைய படையைக் கலக்கி அழித்தான். குதிரையில் ஏறிப் பாய்ந்து சென்ற, நபுலன் மகதை அரசன் ஏறிய யானைமீது தன் குதிரையைப் பாய்வித்தான். மகதை மன்னன் நடுங்கிக் கண்களை இமைத்தான். அதைக் கண்டு, "போரில் கண் இமைக்கும் உன்னைக் கொல்லேன்" என்று கூறி வேறொரு யானையின்மீது பாய்ந்தான்; யானையிலிருந்த வீரன் ஆயுதம் இல்லாதவனாய் இருப்பக் கண்டு அவனோடு போர்செய்யாமல் குதிரைப்படையோடு பொருதான். கட்டியங்காரன் துணைவனான காமுகன், பதுமுகனோடு பொருது மாண்டான். காமுகன் தம்பி கோமுகன் அது கண்டு பொருனாய்ப் பதுமுகனோடு போர் செய்தான். பதுமுகன் அவனோடு வேலால் சண்டை செய்து முடிவில் அவனை வீழ்த்தினான். தேவதத்தன் மகத மன்னனோடு பொருது வென்றான்: உலோக பாலன் காம்பிலி மன்னனைத் தோல்வியுறச் செய்தான். விபுலன் வாளை வீசி போர்க்களமெங்கும் திரிந்து தன்னோடு எதிர் பொருவார் உளரோ என்று கூவிச் சென்றான். அப்போது ஒரு வீரன் வாளுடன் அவன்முன் தோன்றி "வீர, நீ எனக்கு நிகரானவன்; என்னை வெட்டுவாயாக" என்றான். அதைக்கேட்டு விபுலன், இடியொலிபோல் சிரித்து, அவனுடன் பொருதான். இருவரும் வெற்றி, தோல்வி இல்லாமல் நீண்டநேரம் எதிர்த்து நின்றனர். முடிவில் வன்மையோடு விபுலன் எறிந்த வேலால் அவ்வீரன் மாய்ந்தான்.

கட்டியங்காரனுடைய படைத் தலைவன், பூரணசேனன், "ஊழியளவும் கட்டியங்காரன் வாழ்க" என்று கூறிச் சீவன் படையைத் தாக்கினான். "கோவிந்தன் வாழ்க" என்று கூறி கோவிந்த ராசன் படைத்தலைவன் சிங்கநாதன் அவனை எதிர்த்தான். சிங்கநாதன் பூரணசேனனை வெட்டிக் கொன்றான். "நந்தட்டன் வாழ்க" என்று கூறி அவன் வீரன், கட்டியங்காரனுடைய வீரனோடு பொருதான். கட்டியங்காரன் வீரன், நந்தட்டன் வீரனால் வீரசுவர்க்கம் அடைந்தான். சீவகனுடைய தோழனான சலநிதி என்னும் வீரன் "சீவகன் பாதம் வாழ்க" என்று கூறிக் கட்டியங்காரன் யானைப் படையோடு போர் செய்தான். சல நிதியின் வீரத்தைக் கண்டு அஞ்சி, யானைக் குழாத்துடன் பகைவர் ஓடினர். "இனி, நமக்குப் போர் இல்லை" என்று கூறிச் சலநிதி திரும்பினான்.

பல குதிரைகள் பூட்டப் பெற்ற தேரில் இருந்து சீவகன் போர் செய்தான். சீவகனுக்கு உதவியாக, ஆயிரக்கணக்கான வீரர்கள் ஆயுதங்களுடன் நின்று பகைவரைத் தாக்கினர். கட்டியங்காரனும் அவன் பிள்ளைகளும் பல ஆயிரம் வீரர்களுடன் எதிர்த்து நின்று தாக்



கினர். இருவர் படையிலும் அளவில்லாத வீரர்கள் மாண்டனர். யானைகளும் குதிரைகளும் மாய்ந்தன. அம்புகள் எல்லாப் பக்கங்களிலும் மொய்த்தன. தேவாசுர யுத்தமோ, ராமாயண யுத்தமோ, பாரத யுத்தமோ என்று கூறி யாவரும் திகைத்தனர். அழகையும் அழகின்மையையும் எடுத்துக் காட்டும் கண்ணுடிபோல் வீரர்களது ஆண்மையையும் ஆண்மையின்மையையும் காட்டும் கண்ணுடியாகிய போர்க்களத்தில்கட்டியங்காரன் வீரர் அஞ்சி ஓடினர். சீவகன் அம்புகளுக்கு அஞ்சி ஓடி ஒளிந்தனன். கட்டியங்காரனுடைய மந்திரி அரிச்சந்தன் ஓடுபவரை நோக்கி, "வீரர்களே, ஓடாதீர்கள். மகளிரிடத்தல்லாமல் போரிலும் நீர் ஆடவராகவேண்டும். வீரர் இவ்வாறு ஓடினுல் ஆண்மை என்பது யாரிடம் உள்ளது? கலைமான் தன் கொம்பு ஆடிய காலத்தில் அதை அசைத்து நழுவ விடுதல்போல், நீங்களும் உடம்பைக்காக்கும் விருப்பத்தைக் கைவிட்டு உறுதியுடன் போர் செய்விராக! வீராயுள்ளவர்கள் தம்மை நம்பிய தலைவனுக்காகப் போரில் பொருது புகழைப் பரப்பிப்பொன்றுலகு சேர்வர்; புலவர்களால் பாமாலை சூட்டப் பெறுவர்; அவர்கள் புகழ் என்றும் அழியாதபடி, கல் நாட்டப்பெறுவர். ஆதலால் நீங்களும், அவற்றைப் பெறுவீர்கள்; உறுதியுடன் போர் செய்யுங்கள்" என்ருன். அவன் வார்த்தைகளைக் கேட்ட வீரர் ஊக்கம் கொண்டு சீவகன் சேனையுடன் போர் செய்தனர். வேந்தர் கிரீடங்கள் சிதறின: குடைகள் கவிழ்ந்தன; கேடயம் பிளவுபட்டன; வாளும், வேலும் முறிபட்டுச்சிதறின; வீர சுவர்க்கம் புக்கனர் வீரர்கள். பேய்க் கூட்டங்கள் ஆடின; நரிகள் பிணத்தை உண்டு ஊளையிட்டன; யானையும் குதிரையும் அங்கங்கள் முறிந்து வீழ்ந்தன; சீவகனுடைய கண்கள் சிவந்தன. புருவங்கள் வில்லைப்போல் வளைந்தன; அவன் கை வில், பிறைச்சந்திரனைப்போல் வளைந்தது.

போர்க்களமாகிய பொய்கையில் கட்டியங்காரன் பதும் வியூகம் வகுத்து நின்ருன். வாட் படை தாமரையின் புற இதழ்கள் போன்றிருந்தன. அதைச் சுற்றிய யானைகள், புல்லிதழைப் போன்று இருந்தன. அதைச் சுற்றிய அரசர் குமாரர், சிறிய இதழைப்போன்று இருந்தனர். அதைச்சுற்றிய கட்டியங்காரன் பிள்ளைகள், அக 'இதழ்களைப் போன்று விளங்கினர். கட்டியங்காரன் நடுவில் இருக்கும் 'தாமரைக் கொட்டையைப் போன்று நின்ருன். தாமரை வியூகத்தை நெருங்குகின்ற சீவகன், பவித்திரமான வண்டைப்போன்று விளங்கினன். வியூகத்தின் புறத்தில் இருக்கும் சேனைகளைக் கொன்று குவித்தான். பின்னர் வியூகத்தின் ஒவ்வொரு வரிசையையும் பிளந்து அழித்தான். அம்புகளைப் பொழிந்து சரகூடம் செய்தான். பதுமவியூகம் சிதறி அழிந்தது. கட்டியங்காரனுடைய பிள்ளைகள் நூற்றுவரும் அழிந்தனர். தனியாக நின்ற கட்டியங்காரன் சீவகனைப் பார்த்துக் கோபமுடன் கூறலானுன்:

"சீவக, நல்வினை செய்தவர், விஷத்தை உண்டாலும் அது அமுதமாகி விடும். தீவினை செய்தவர் அமுதத்தை உண்டாலும் விஷம் போல் கொன்று விடும். ஆதலால் அறிவுடையவர் 'இவன் என்னைக் கொல்லுவன்' என்றும் 'இவனை யான் கொல்லுவேன்' என்றும் நினையார். அது விதியின் செயலன்றி உன் செயல் அன்று. உன் கையில் அகப்படும் தீவினை செய்தவரைக் காப்பவர் யார்?

தீவினை செய்தவரைக் கொல்லுகின்ற நல்வினையுடையவரை அழிக்க வல்லவர் யார்? உன் கையால் என் பிள்ளைகள் நூற்றுவரும் இறந்தனர். அதனுல் சூரியனும் மாறுபட்டு குளிர்ச்சியடைவான் போலும்! நீ அவரைக் கொன்றமையால், சந்திரனும் தன் நிலை கெட்டு வெம்மை அடைவான் போலும். நெய்யும் திரியும் கெட்ட போதே விளக்கு அவிந்துவிடும். அதுபோல நல்வினை முடிந்தால் செல்வமும் அழியும்; அதைப் பிடித்து வைத்துக்கொள்ள முடியாது." என்ருன்.

கட்டியங்காரன் மொழியைக் கேட்டு, சீவகன் வியப்படைந்தான். 'கட்டியங்காரன், மிகவும் தாழ்ந்து பேசுகிருன். இவ்வாறு பேசுகையில் எப்படிக் கொல்வது' என்று ஆலோசித்தான் சீவகன். உடனே, அவனுக்குக் கோபம் உண்டாகும்படிச் சிரித்து, "கட்டியங்கார, நீ மிகவும் போருக்குப் பயந்தவன்; இவ்வாறு அஞ்சலாமா?" என்ருன். கட்டியங்காரன் அம்மொழியைக் கேட்டுக் கடுங் கோபங் கொண்டான்; "சீவக, வெற்றி கிடைப்பது விதியின் செயல்; அது யான் கூறேன், உன் கையிலுள்ள வேல் என் மீது வந்த போது, யான் அஞ்சிக் கண் இமைத்தால் நீ அஞ்சினுய்' என்று கூறிச் சிரிப்பாயாக. யான் அவ்வாறு வீரம் இழந்தால், மனைவிக்கு அஞ்சி விருந்தினரை உபசரிக்காத அற்பனுவேன்" என்று கூறிக் கையில் வில்லையும் அம்பையும் எடுத்தான். உடனே சீவகன் மகிழ்ந்து அம்பை எய்து, கட்டியங்காரன் எடுத்த வில்லையும் அம்பையும் அறுத்து வீழ்த்தினன். கட்டியங்காரன் கோபத்துடன் சீவகன் தேர் மீது பாய்ந்தான். அவன் பாய்ந்ததும், சீவகன் அம்பு அவன் மார்பில் பாய்ந்து உயிரை உண்டது. சூரியனுக்கு முன், ஒளி கெட்டுச் சந்திரன் வீழ்வது போல் பார்ப்பவர் அஞ்சும்படி கண் விழித்து, வாய் மடித்துக் கட்டியங்காரன் சீவகன் முன்னர் வீழ்ந்தான். "கட்டியங்காரன் என்னும் கலியரசு மடிந்தது" என்று யாவரும் ஆரவாரித்தனர். 'இனிப் போர்த் தொழில் ஒழிக' என்று வெற்றி முரசு கொட்டினர். வீரர்கள் ஜயகோஷம் செய்தனர். அரசர்களும் வீரர்களும் சூழ்ந்து சீவகனை வாழ்த்தினர். நூற்றுக் கணக்கான விளக்குகள் விளங்கின. நகர மக்கள் உவகையால் ஆர்த்தனர். சீவகன் கட்டியங்காரனுடைய புதல்வரை முதலில் கொன்று, பின்னர் அவனைக் கொன்ற முறைமையைக் கேட்டு விசயை மனமகிழ்ந்தாள். அரசர்கள், போர்க்களப் பாவம் நீங்கும்படிச் சீவகனுக்கு நீராட்டி மலர் தூவினர்.

* * * *

அரசர்கள் சூழ இராசமாபுரத்து அரண்மனையில் சீவகன் புகுந்தான். வீரர்கள் உள்ளே சென்று கட்டியங்காரனுடைய மனைவியரை வெளியேற்றினர். அவர்கள் கண்ணீர் பெருக, வெறு நிலத்தில் நடந்து சென்றனர். "கட்டியங்காரனுடைய பட்டத்துத் தேவி யார்?" என்ருன் சீவகன். "கட்டியங்காரனும் அவன் பிள்ளைகளும் இறந்ததைக் கேட்டு அவள் இறந்தாள்" என்று அருகிலிருந்தவர்கள் கூறினர். கட்டியங்காரன் மனைவியாருக்கு அவன் அளித்த சீவிதங்களைத் தானும் அளித்து அவர்கள் விருப்பப்படி அவரவர் மாளிகையில்சென்று வாழும்படி கட்டளையிட்டான். அவர்கள் தம் மாளிகைகளுக்குச் சென்று வாழ்ந்தனர். வீரர்களைக் கொண்டு பொன்னறை முதலியவற்றைச் சோதித்துக் காவல் அமைத்தான். அரசரும் மக்களும் புகழும்படிப் போர்க்கோலத்தை நீக்கி, புதிய ஆடைகளை அணிந்து கோவிந்தராசனையும் தாயையும் வணங்கினுன். போரில் புண்பட்ட வீரர்கள் புண்ணைக் காத்துக்கொள்க என்று கூறி கோவிந்தராசனும் அவனும் இளைப்பாறச் சென்றனர். புண்பட்ட வீரர்களும் இளைப்பாறியிருந்தனர்.

அடுத்த வாரம்:—
சீவகன்
மகுடாபிஷேகம்

காலையில் எழுந்தவுடன்

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுரு சுருப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே ★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினுல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ
அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 156

நமது
தொடர் கதை
★
கஜேந்திரநாத மித்தர் எழுதியது
★
வங்காளி மூலம்

தாய் உள்ளம்

"கோதை" மொழிபெயர்த்தது

"அப்பா, நீங்கள் ஏன் பேசவில்லை?"

ஹரகண்ட பாபு ஓர் 'ஈஸி சேரில்' சாய்ந்துகொண்டு பேபர் படித்துக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் ஒரு முக்காலி இருந்தது அதன் மீது தேயிலைப் பானம் அருந்துவதற்கான பாத்திரம், சுருட்டின் சாம்பலைத் தட்டும் கிண்ணம், பிரித்துப் பார்த்து விட்ட தபால்கள் முதலியன இருந்தன. அவருடைய பெண் கௌரி பக்கத்தில் ஒரு நாற்காலியின் கைப்பிடிச் சட்டத்தின்மீது உட்கார்ந்து அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்குப் பதினைந்து வயது இருக்கும். அவள் தன் தந்தையை நோக்கி மறுபடியும், "சரி, நீங்கள் என்னுடன் பேசமாட்டீர்கள்" என்று சொன்னுள்.

ஹரகண்ட பாபு தாம் வாசித்துக்கொண்டிருந்த பத்திரிகையைச் சற்றுத் தூக்கிப் பிடித்தார். தம்முடைய பெண்ணின் கூரிய பார்வையினின்றும் தம்மை மறைத்துக் கொள்வதற்காகவே அவ்விதம்செய்தார்போலும். கடைசியில் அவர் மிகுந்த மனச் சோர்வுடன், "நான் சொல்வதற்கு என்ன வைத்திருக்கிறீர்கள். நீங்களே தான் எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படியே நடத்துகிறீர்களே!' என்று அலுத்துக் கொண்டார்.

"அப்படியானுல் சித்தி அவள் இஷ்டப்படியே செய்துகொண்டிருக்கவேண்டுமா?" என்று கேட்டாள் அவள். அதைச் சொல்லும்போதே அவளுடைய கண்களில் நீர்த்திவலைகள் துளித்துக்கொண்டிருந்தன.

முன் கோபத்தில் தம் குமாரத்தி ஆத்திரம் அடைந்து விடுவாள் என்பதை ஹரகண்ட பாபு நன்கு அறிவார். கௌரியின் மாற்ருந்தாய் சோபாராணியும் இந்த விஷயத்தில் அவளுக்குச் சிறிதும் சளைத்தவள் அல்லள். கௌரியைக் காட்டிலும் சோபாராணி நாலைந்து வயதே மூத்தவள். பாலிய வயது; இருவர் உடலிலும் இளம் ரத்தம் ஓடியது. ஹரகண்ட பாபு அவள் பக்கத்திலோ இவள் கட்சியிலோ சேராமல் மௌனம் சாதித்துத் தனித்து விட்டது சரிதான். சோபாராணிக்குக் கொஞ்சம் பிடிவாதம் ஜாஸ்தி. அவளுடைய புருஷன் அவளைக் கிழவன் இளையாளை நடத்தும் விதம் என்று சொல்லுவார்களே, அதைப் போலவே நடத்தி வந்தார். எனினும் ஹரகண்ட பாபு நல்ல நிதானம் தெரிந்த பேர்வழி. சாதாரணமான சமயங்களில் அவர் எல்லாவற்றையும் ஒழுங்காகவே நடத்திச் செல்வர். எனினும் இப்படி வம்பு ஏற்படும் காலங்களில் மட்டும் அவரால் ஒன்றும் செய்ய இயலாது.

அன்றைத் தினம் விவகாரம் உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது. அது அவர் மகனைப்பற்றியது. அமல்குமார் அவருடைய முதல் ஸம்ஸாரகதின் பிள்ளை. அவன் வேலைக்காரியின் கையிலிருந்து பக்ஷணம் நிறைந்த தட்டைத் தட்டிக் கீழே தள்ளிவிட்டான். அவன் உடை முழுதும் பக்ஷணக் கறைப் பட்டுப் புழுதி அடைந்து அழுக்காகிவிட்டது. அதற்காகக் கோபித்துக் கொண்டு வேலைக்காரியையும் அடித்துவிட்டான். அதற்காக அவனைக் கண்டிக்க வேண்டி சோபாராணி அவனை ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டாள்.

அவன் எட்டு வயதுக்குழந்தை தான். எனினும் அவனுக்குத் தன் சித்தி என்ன செய்துவிடக் கூடும் என்ற அசட்டுத் தைரியம் இருந்தது. அதனுல் அவன் அவளை எதிர்த்துப் பார்த்தான். அவன் ஜம்பம் சாயாமல் போகவே, கத்த ஆரம்பித்துவிட்டான். கல்லும் கரைந்துபோகும் வண்ணம் அவன் இரைந்து அழுதான். சோபாராணியின் மனமும் இளகாமல் இல்லை; கௌரி குறுக்கிட்டுத் தனக்கெதிராக அவன் கட்சி சேராமல் இருந்திருந்தால் அவள் அமலனை எப்பொழுதோ விடுவித்திருப்பாள்.

கௌரி தன் தம்பியின் கட்சியில் சேர்ந்துகொண்டது மட்டுமல்லாமல், சோபாராணியையும் இதற்காகக் கண்டபடி திட்டிவிட்டாள் அவள் அளவுக்கு மிஞ்சியே போய்விட்டாள். அவ்வளவு தூரம் பேசி இருக்கக் கூடாது கௌரி இவ்விதம் செய்தது சோபாராணியின் மனத்தைக் கல்லாகிவிட்டது அவள் தன் அதிகாரத்தை நிலை நிறுத்தச் சிறிதும் தயங்கவில்லை.

கௌரி தன்னுல் ஆனவரையில் சித்தியின் மீது இல்லாததையும் பொல்லாததையும் சொன்னுள்; தன்னுடைய சகோதர வாஞ்சையைப் பிரகாசப் படுத்தியது மட்டுமல்லாமல சித்தியின் செய்கையை மாற்ருந்தாய்க் குணத்தின் விளைவு என்றே பழியும் சுமத்தி அவளை அவமானப் படுத்த முயன்ருள். இதற்காகவே தான் ஹரகண்ட பாபு இந்த விஷயத்தில் தலையிட விரும்பவில்லை. ஏதாவது செய்தால் அது தாயார் என்ற ஸ்தானத்தில் சோபாராணிக்கு உரிய அதிகாரத்துக்குக் குறைவு நேரிடும் என்பதை அவர் அறிவார்.

சோபாராணியை ஹரகண்ட பாபு இரண்டு வருஷங்களுக்கு முன்னர் மணந்து கொண்டார். அப்போது கௌரி சிறு குட்டியாக இருந்தாலும் தன் தந்தை மறு மணம் புரிந்துகொள்ளும் விஷயத்தில் தனக்கு உள்ள அறுவறுப்பைப் பலவிதாக வெளியிட்டுக் காட்டினுள். கல்யாணம் நடந்தபோதுஅவள் தன்புருஷன் வீட்டில் இருந்தாள். அவள், அவளுடைய புருஷன், மாமனுர், மாமியார் ஆகிய எல்லோரும் ஹரகண்டபாபு கல்யாணம் செய்து கொள்வதற்கு இஷ்டப்படவில்லை. அதனுல் அவர் அவளைக் கல்யாணத்துக்கு அழைத்துவரவில்லை: முயற்சி செய்யவும் இல்லை. எல்லாம் காலக்ரமத்தில் தணிந்து சரியாகப்போய் விடும் என்றே எதிர்பார்த்தார்.

அதற்குப் பிறகு இப்போது தான் கௌரி தன் பிறந்தகத்துக்கு வந்திருந்தாள். எப்படி இருந்தாலும் அவர் இரண்டாம் தரம் மணம் செய்துகொண்டு விட்டார் என்பதை அவளால் மறக்க முடியவில்லை. தன் சித்தியைத் தாழ்மைப்படுத்தி காண்பிக்க எப்போதுசமயம் கிடைக்கும் என்று காத்திருந்தாள். சிறு சம்பவங்களையும விடாமல் குத்திக் காட்டி வந்தாள். ஹரகண்ட பாபு எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதான் இருந்தார். ஆனுல் ஜாக்கிரதையாக அதில் சம்பந்தப்படாமல் ஒதுங்கி வந்தார்.

காலையில்நடந்த சம்பவம், மகன் அழுதது, பெண் எதிர்த்து வாயாடியது, ஆகியவற்றினுல் அவர் மனம் தளர்ந்துவிடவில்லை; ஏக்கம் கொள்ளவில்லை. தன் மகளைத் திருப்தி செய்யும் வழி ஏதாவது கிடைக்குமா என்பதையே மௌனமாக யோசித்து வந்தார். ஆனுல் ஒன்றும் கிடைக்கவில்லை.

அதனுல் கௌரி தன் முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டே இருந்தாள்.

காலையில் எழுந்தவுடன்

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுரு சுருப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே ★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினுல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ
அருந்துங்கள்
புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 156

6

வாடா மலர்

புதிய தொடர் கதை

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

முன் கதைச் சுருக்கம்

பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் சாத்தன்: வெளி நாடுகளுடன் வர்த்தகம் நடத்தி வந்தான் அவன். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுரையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவன். யவன தேசத்திற்கு அடிக்கடி சென்று வந்தான். அவன் பார்ப்பதற்கு வசீகரத்தோற்றம் உள்ளவன்: அலக்ஜாந்திரியாவில் அவன் ஒருத்தியைக் கண்டான்: அது முதற்கொண்டு அவனது உள்ளம் அவளிடத்தே ஈடுபட்டு விட்டது. அங்கு அண்டியோகஸ் வீட்டில் தான் கோணர்ந்த பொருளை விற்க விலை பேசுகையில் அழகு மிகுந்த அந்தோனியாவை அவன் கண்டான். இருவரும் ஒரு க்ஷணம் ஒருவரையொருவர் நன்கு நோக்கினர். வெகு சீக்கிரத்தில் இருவரிடையே அந்நியோந்நியம் பிறந்து விட்டது. அவள் ஞாபகமாகவே சாத்தன் தாயகம் திரும்பினான். அவனுக்கு அவளை எப்போது மறுபடி காண்பது என்பதே ஏக்கம்: அவளுக்கு அவன் எப்போது திரும்பி வருவான் என்பதே விசாரம். மறுமுறை காதலன் வந்து அவளைத் தமிழ் நாட்டிற்கு அழைத்து வந்துவிட்டான். இதனால் அண்டியோகசுக்கு மிகவும் கோபம்; தமிழ்ப் பூண்டை ஒழித்துவிடவும் அவனுக்கு அதிக ஆசை: படையெடுக்கவும் விரும்பினான் அவன்: பணஞ் செலவழிக்க அவன் தயங்கவில்லை: இந்த சமயத்தில் அந்தோணியா சோக்கநாதர் கல்யாண உத்சவத்தில் கலந்து கொள்ளப்போய் தனிமையில் வேதனைப்பட்டாள். அவளுக்கு இதற்கப்புறம் நோய் கண்டது. பல வைத்தியர்கள் வந்து பார்த்தனர்: உடம்பு சௌஸ்தமாகவில்லை. கடைசியில் அவ்வூர் வந்த யவன வைத்தியர் வரவழைக்கப்பட, அவர் வேறு ஊருக்குக் கொண்டுபோகப் பட்டால் குணமேற்பட வழி யுண்டு என்றார்: இந்த நிலையில் யவனர் அண்டியோகஸ் தலைமையில் தமிழ்நாட்டின்மீது படையெடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகச் செய்தி எட்டியது. இதைக் கேட்டதும் அரசன் சாத்தனை ராஜசபைக்கு வரவழைத்து அவனுக்குப் படைத் தலைமையை வழங்கினான். எதிரிப் படையும் நாட்டில் வந்திறங்க வாரம்பித்துவிட்டது. நாட்டு மக்கள் பத்திரமான பிரதேசத்திற்கு வெளியேற்றப்பட்டனர்.

இதன் பின் மேலே படியுங்கள்!

அந்தோணியாவுக்கு தலை சுழன்றது. என்ன செய்வது என்பதை அறியாமல் அவள் திகைத்து நின்றாள். பாசம் அவள் மனத்தை இருபுறங்களிலும் இழுத்து அலைத்தது. செயலற்று, உணர்வற்றுக் கல்லாய்ச் சமைந்திருந்த அவளது வெறித்த பார்வை எதையும கவனிக்கவில்லை. அவள் உள்ளம் எங்கோ வெட்ட வெளியில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அதனிடையே தோன்றிய எண்ணங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஓடி மறைந்தன.

'திடுக்'கென்று அவளைத் தூக்கி வாரிப்போட்டது. தூரத்தில் கிளம்பிய சப்தம்— முரசொலி— அவளுக்குப் புதியதன்று. அதைக் கேட்டுக் கேட்டு அவள் பழக்கப்பட்டிருக்கிறாள். ஆயினும் அன்றைத் தினம் அவளுக்குப் புதிதாகவே கேட்டது அது அவள் மனத்தேளரியும் கொள்ளியைப் போலச் சுட்டது

சூரியன் அஸ்தமித்து வெகு நேரமாகி விட்டது; ஒரு ஜாமப் பொழுதிருக்கும். ஆயினும் பால் போன்ற வெண்ணிலவு சுற்றிலும் காய்ந்துகொண்டிருந்தது. சகல ஜீவராசிகளும் அதன் இன்பத்தை அனுபவித்து ஆனந்தத்தில் மூழ்கியிருந்தன. ஆனால் அவள் துன்பப்பட்டு வாடி உள்ளம் நைந்து கிடந்தாள். அவள் மட்டுந்தானா? இல்லை, அவளைப் போல இன்னம் இரண்டொருவரும் அவ்விதமே வருந்திக் கிடந்தனர்.

தான ஒருத்திக்காக இத்தனை பேர்கள் மாண்டு மடிவதைக காண அவளுக்குப் பொறுக்கவில்லை. இதயம் உடைந்துபோயிற்று. ரத்தபாசம் பொல்லாதது. அதனை உதறித் தள்ள யாராலும் முடியாது பிறந்ததுமுதல் அவள் யாரிடையே வளர்ந்து குலவி வாழ்ந்து வந்தாளோ, அவர்களைத் தனக்காகப் பலியிட அவள் மனம் ஒருப்படவில்லை.

அன்றி. அவ்விதம அவர்களைப் பலிகொடுப்பதால் அவளுக்கு என்ன லாபம்? அவளுக்கோ தமிழ் நாட்டு வாழ்க்கை அலுத்துப் போய்விட்டது. இங்கேதான் தனியாகவே இருப்பதாக அவள் எண்ணி விட்டாள். எங்கே திரும்பினாலும் எல்லோரும் தன்னைச் சுட்டிக்காட்டி ஏதோ ரகசியம் பேசுவதாகவே அவள் உள்ளத்தில் ஓர் உணர்ச்சி ஏற்பட்டு விட்டது.

அவள் அவ்வளவையும் யாருடைய அன்பை நிலைநிறுத்துவதற்காக அனுபவித்து வந்தாளோ அந்தச் சாத்தனே அவளிடம் சலுப்புக்கொணடு விட்டானாகில் அப்பால் அவள் எதற்காக அவற்றைப் பொறுக்க வேண்டும்? தன்னிடம்முன் போலச் சாத்தன் அன்பு கொண்டிருக்கவில்லை என்ற பிரமை அவளுக்கு ஏற்பட்டு விடடது.

இல்லாவிட்டால் அவன் அன்றொரு நாள் தன்னைக் கடிந்து கொள்ள வேண்டிய் காரணம் இல்லையே என்றும் எண்ணினாள்.

சாத்தன் அந்தோணியாவை ஒரு சமயம கடிந்து கோபித்துக் கொண்டது உண்மைதான். அது அவள் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகக் கிடக்க ஆரம்பித்த புதிதில் நடந்தது எந்த வைத்தியத்தாலும் அவளுக்கு குணம்ஏற்படாமல் போகவே, அவள் படுக்கையில் புரண்டு தன் உடம்பை அலட்டிக்கொண்டாள். அவளைப் பார்க்க வந்த அரண்மனை வைத்தியரிடம் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை.

"நீ இப்படி அடம் செய்தால் உன் உடம்பு எதற்கு ஆகும்? எப்படித்தான் வைத்தியம் செய்வது? படுத்த படுக்கையாக உன்னை வைத்துக்கொண்டு எவ்வளவுநாள்தான் பணிவிடை செய்ய முடியும்?" என்று சாத்தன் கோபித்துக் கொணடான். அதை அந்தோணியா விகற்பமாக எண்ணிவிடடாள். சாத்தன் மனத்தே அடங்கிக் குமுறிய பாசத்தையும வருத்தத்தையும் அவள் உணரவில்லை. அவன் தன்னை வெறுக்கத் தலைப்பட்டான்என்றே நிச்சயித்து விட்டாள். அது அவள் இதயத்தைச் சிறுகச் சிறுக அரித்து வரலாயிற்று.

இப்போது அவள் உள்ளம் உணர்ச்சியற்ற வெறும் ஓடாகவே இருந்தது. தன் ஜீவ சக்தியை இழந்து நின்றது. இவற்றையெல்லாம் உதறித் தள்ளி மறுபடியும் தன் தேசத்து மக்களைக் கண்டு மறுபடியும் அவர்களுடன் கலந்து வாழவே ஏங்கியது.

இரவுப் பொழுது ஏறி வருவதை அவள் கொஞ்சமும் கவனிக்கவில்லை. சாத்தனும் போர்க்களத்திலிருந்து பாசறைக்குத் திரும்பி வரவில்லை. அதையும் அவள் சிந்தித்துப் பார்ககவில்லை.

தமிழ் நாட்டார் சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு போர் புரியும் வழக்கம கிடையாது. அன்றையதினம் விபரீதமாக முன்னிரவிலும் போர் நீடித்துவிட்டது. வெற்றி கிட்டும் சமயத்தில் போரை நிறுத்த யாருக்குத்தான் மனம் வரும்!

அன்றைத்தினம் பாண்டிய சேனை மிகுந்த ஆரவாரத்துடன் யுத்தம் செய்து வந்தது. ஒவ்வொரு வீரனுக்கும் போரில் தனக்குவெற்றி கிட்ட வேண்டுமஎன்ற எண்ணம் ஒன்றைத் தவிர வேறு கிடையாது. கவலையும, இல்லை.

பாண்டிய மன்னன் போருக்கு எழுந்த செய்தியை அறிவிக்கும முரசொலி கேட்டவுடனே ஒவ்வொருவனும் போர்க்களத்துக்குப் புறப்படத் தயாராயினன். குடும்பத்துக்கு ஒருவன் வீதம் தலைக்கட்டுப் போட்டு யாவரும் ஒன்றாகக் கூடிப் புறப்பட்டு அரசனை அடைந்தனர்.

ஆண் மகனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும், அவன் எந்தத் தொழிலை நடத்துபவனாக இருந்தாலும் வில், வேல, வாள் முதலிய படைக் கலங்களைத் தாங்கிப் போரிடும் பயிற்சி இருந்து வந்தது.

ஈன்றுபுறந்தருதல் தாயார்க்குக் கடன்; சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடன். வேலை வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக் கடன்; நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடன்; ஒளிறு வாளருஞ் சமமுருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக கடன்; இதுவே தமிழ் மக்களின் வாழ்க்கைத் தத்துவம். அதுமட்டுமன்று போருக்கு எழுநதால் வெற்றி கொண்டல்லாது திரும்புவதில்லை என்ற விரதத்தையும் பூலர் பூண்டிருந்தனர்.

அண்டியோகஸ் அலெக்ஜாந்திரியாவை விட்டுக் கிளம்பும் போது எதிர்ப்பு இவ்வளவு பலமாக இருக்கும் என்பதை எண்ணவில்லை. தன் முன்னோர்கள் எகிப்து நாட்டு டாலமிகளையும், ஆசிய யூதர்களையும் வெற்றி கொண்டதே போலச் சுலபமாகத் தானும் தமிழர்களை வென்று அடக்கிவிடலாம் என்றே மனப்பால் குடித்திருந்தான்.

அவன் ஆசை அழிந்தது. வெற்றியே எளிதில் கிடைப்பதாகத் தோன்றவில்லை. நாள் ஆக ஆக, அவன் மனத்தே அதைரியமும் கொஞ்சம் கொஞ்சமாக முளைத்துத் தழைத்தது. அபசகுணம் போல் அவர்கள் முதன்முதலாகக் கரையேறிய சமயத்தில் படகு கவிழ்ந்தது. அவன் மனத்தை விட்டு அகலவேயில்லை.

போரில் வெற்றி தோல்வி ஏற்படுவதற்கு அதனைத் தலைமை பூண்டு நடத்துபவன் உள்ளத்தே ஏற்படும் உணர்ச்சியே பிரதான காரணம். ஏதாவது ஓர் அற்ப காரணத்தால் அவன் மனத்தே பிரமை உண்டாகி விட்டால, அப்பால் எது நடந்தாலும் அவன் அநதக் காமாலைக் கண்ணோடேயே அதனைப்பார்ப்பான். எதைப்பார்த்தாலும் சந்தேகம் உதிக்கும்.

அன்றி, தான் போருக்கு எழுந்தது நியாயமாகுமா என்பதை அவன் ஆர அமர இருந்து யோசித்துப் பார்த்தவுடன், அவன் தமிழ் நாட்டவர்களுக்கு இழைத்த தீங்கு பன்மடங்கு பெரிதாகி அவனது மனக்கண் முன்னே காட்சியளித்தது. அவன் தமிழ்நாடு வந்து சேர்ந்து நான்கு மாத காலமாகிவிட்டது. பருவ நிலை மாறும காலமும் நெருங்கியது. காற்றுத் திசை மாறுவதற்குள் ஏதாவது ஒன்று முடியவேணடும். இல்லாவிட்டால் அவன் இங்கே அகப்பட்டுக் கொண்டு மறு வருஷம் வரையில் அவதிப்பட வேண்டும்.

இந்தக் குறுகிய காலத்திலேயே பாண்டியசேனை தங்களை படாத பாடு படுத்தியதை நினைத்து உள்ளம்கலங்கினான் அண்டியோகஸ்; அவன் உடல் சிலிர்த்தது. தமிழ் நாட்டு மக்கள் போரில் இவ்வளவு ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்களென்பதாவது, விரோதிகளை முறியடித்து வெருட்டுவதில் குஞ்சுகுழந்தைகளும், கிழவர்களும் கலந்து கொள்வார்கள்

என்பதாவது அவனுக்குத் தெரியாது.

யவனர்கள் கரையேறிய இடங்களில் பக்கத்தே காத தூரத்துக்கு ஜன சஞ்சாரமே இல்லாத பாலைவனம்போல ஆகிவிட்டது. அங்கே வாழ்ந்து வந்த அத்தனை மக்களும் எப்படி தான் தங்கள் உடமைகளைத் துறந்து வெளியேறினார்கள் என்பதைப் பார்த்து அவன் உண்மையில் வியந்தான். யவனர்களுக்கு ஆகார வசதியளிக்கக்கூடிய ஒருவனாவது அந்தப் பிரதேசத்தில் இருந்தால் தானே?

பாழடைந்த குப்பங்களையும் சேரிகளையும் கொள்ளையிட்டாலும் அவர்களுக்கு என்ன கிடைத்தது? உடைந்த சட்டிகளும் கிழிந்த துணிகளுமே; உணவுப் பொருள்களில் ஒன்றுமே கிடைக்க வில்லை. ஆற்றில் வாயால் வழிந்து தண்ணீர் ஓடும் அந்நாளில் குளம், குட்டை ஒன்றிலும் கொஞ்சம் கூடத் தண்ணீர் இல்லை. ஒன்றிரண்டு இடங்களில் பள்ளங்களிலே தேங்கியிருக்கும் தண்ணீர் வாயில் வைகக யோக்கியதை யற்றதாக இருந்தது. அழுகிய பண்டங்களைப் போட்டு ஜலத்தைக் கெடுத்து விட்டனர். நாட்டு மக்கள் தாங்கள் புறப்பட்டுப் போவதற்கு முன்னதாகவே போரில் வெற்றி கொள்வதைவிட வயிற்றுப் பசியை ஆற்றிக் கொள்வதே முக்கியமானதாகப் போய் விட்டது யவன வீரர்களுக்கு.

தமிழ் நாடு ஓர் அன்ன சத்திரம். பசிதது வந்தவர்களுக்குச் சோறு. இல்லையென்று எந்நாளும் சொன்னதில்லை; ஆனால் அதனை அவன் யாசித்துப் பெற வேண்டுமேயல்லாமல் அதிகாரத்துடன் பிடுங்கித் தினன முடியாது. அவ்விதம் செய்வதை மககள் என்றைக்கும ஒப்பமாட்டார்கள்.

அண்டியோகஸ் தன் படையைக் கடற்கரையினின்றும் கிளப்பி உள் நாட்டுக்கு நடத்திச் சென்றான். வயிற்றுப் பிணியை ஒழிக்க வேறு வழியில்லை.

சிவந்த உடல்; தோளிலிருந்து முழங்கால் வரை மறைத்து நின்ற பாவாடை போன்ற வெள்ளை உடை. தலையிலே பின்புறத்தை மறைத்து, உச்சியில் பொற்பூவைக் கொண்டதொப்பி இடது கையில் பித்தளை குமிழுடன் கூடிய கேடயம்; வலது கையில உருவிய கத்தியோ ஈட்டியோ அல்லது கோடாரியைப் போன்ற ஒரு பண்டைக் கலம்; இவ்வித அலங்காரத்துடன் அணி அணியாக யவன வீரர்கள் கிளம்பிச் சென்றதைப் பார்த்து மகிழ ஒருவரையும் காணோம்.

ஆனல் பக்கத்தே ஒருவரும் இல்லாமல் இலலை. பாண்டிய வீரர்கள் அவர்களை முன்னேறிச் செல்லாதவாறு தடுத்து வந்தனர் பாண்டிய சேனையைச் சேர்ந்தவர்களுக்குத் தனியாக அலங்காரம் ஒன்றும் இல்லை

விரிந்த மார்பு; பரந்த தோள்; திரண்டு உருண்ட அவயவங்கள்; முறுக்கிய மீசை; ரத்தம் தெரிக்கும் கண்கள்; கறுத்த உடலை ஒத்து அதே நிறத்தில் இடையில ஒட்டுச் சல்லடம்; கொண்டையில் பூமாலை; இவ்வளவுக்கும் மேலாக மேனியில் ஒரு பளபளப்பு போரில் எதிரிகள் தங்களைக் கைபபற்றிப் பிடித்தால், அவர்களிடமிருந்து தப்பிக் கொள்வதற்காகப் பாண்டிய வீரர்கள் தங்கள் உடலிலே எண்ணெயைத தேய்த்து உருவிவிட்டிருந்தார்கள்.

கொடிவழியறியாக் காட்டிலே அகப்பட்ட மான்போல நின்ற யவனர்களிடையே எங்கிருந்தோ ஓர் அம்பு வந்து விழும். அதை எய்தவனைக் கண்ணால் பார்க்க முடியாது. ஆனல் அந்த அம்பு யவனன் கண்ணைக் கொண்டு போய் விடும். அதே போலத் திடீரென்று ஒருவன் மார்பில் பாய்ந்த வேல், முதுகைத் துளைத்து விடும். இவ்விதமூலைக் கொன்றாக அவ்வப்பொழுது வந்து பாயும் கலங்களை எய்தவர்களைத் தேடப்போனாலோ அவர்கள் எங்கோ மறைந்து விடுவர்.

திடீரென்று 'முருகா, வேல் முருகா' என்ற கோஷம் வானைப் பிளக்கும். மத யானை போன்ற மறவர்கள் யவன வியூகத்தினுள் புகுந்து எதிர்ப்பட்டவர்களை வாளால் வெட்டி வீழ்த்துவர். கை கலந்த போர் நடக்கும் போது, இருதிறத்திலும மிகுந்த சேதம ஏற்படும். எனினும் மறவர்களைக் காட்டிலும் யவனர்களுக்கு நேரிட்டதே அதிகமாய் இருந்தது. மறவர்களிடையேயும காயமடைந்தவர்கள் எல்லோரும் மாண்டு போய் விடவில்லை. அவர்களுள் பலர் பிழைத்துக் கொண்டனர்.

அதற்குக் காரண பூதர்களாக இருந்தோர் பாண்டிய சேனையுடன் வந்திருந்த வீரத் தாய்மார்களும் பத்தினிகளுமேயாவர். எப்போது அன்றைப் போர் முடிந்து உலகத்தை இருள் கவ்விக்கொள்ளப்போகிறது என்று காத்திருக்கும் அப்பெண்மணிகள், சூர்யாஸ்தமனம்ஆன பிறகு தென்னை மட்டைகளையும பனங்கருக்குகளையும கொண்டு பந்தம் கட்டிக் கொளுத்திக் கொண்டு வெளிக்கிளம்புவர்; பிணக்களத்திலே திரிந்து அங்கங்கே கிடக்கும் உருவங்களைப் புரட்டிப் பரிசோதித்துப் பார்ப்பர். கை, கால் முதலிய அங்கங்களை இழந்தவர்களையும், குற்றுயிராகக் கிடந்தவர்களை வேற்றிடங்களுககு எடுத்துச் சென்று சிகிச்சை செய்வர். நாவறண்டு கிடப்போர் தாகத்தைத் தணிக்கத தண்ணீர் கொணர்நது உதவுவர்.

அடிபட்டுக்கிடந்தவர்கள் மறவர்களாயினும், யவனர்களாயினும். யாரையும் அவர்கள் புறக்கணிக்கவில்லை எனினும் யவனர்கள் அப்பெண்களின் உதவியைச் சிறிதும் பெறவில்லை. அவ்விதம் ஏற்றுக்கொள்வதைப் பெரும் அகௌரவமாகவே அண்டியோகஸ் கருதினான்.

அவ்வப்போது நேரிடும் சேதத்தால் தன் சேனை பலம் குறைந்து வருவதைக் கவனித்த அண்டியோகஸ் அங்கங்கே சிதறுண்டு கிடந்த சிறு கூட்டங்களை ஒன்று சேர்த்துத் தன்னைப் பலப்படுத்திக் கொண்டான். யாவரும் ஒன்றாகக் கூடி தாமிரவருணியின் தென்கரையில் பாடியிறங்கியிருந்தனர்.

தாங்கள் இனி அதிக நாள் தமிழ் நாட்டில் தங்கமுடியாதென்பதையும் விரைவில் ஊர் திரும்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனபதையும அறிந்த அணடியோகஸ் அதற்கான காரியங்களையும் கவனித்துக் கொண்டே வந்தான. அவன் எதனைக் குறித்து இந்தப் படையெடுப்பை மேற்கொண்டு வந்தானே அது நிறைவேறாமல் இருககையில் ஊர் திரும்ப அவன் மனம் சமமதிக்கவில்லை. தன் ஆசை கைகூடும் வரையில், எத்தகைய கஷ்ட நஷ்டம் நேரிட்டாலும் பொருட்படுத்தாமல் போரை நடத்த வேண்டும என்றே அவன விரும்பினான். ஆனல உடன் இருந்தவர்கள் அதற்கு இணங்கவில்லை. பருவ நிலை மாற்றத்துக்கு முன் ஊர் திரும்புவது என்று அவர்கள் முடிவு செய்து விட்டனர். அண்டியோகஸும் வேறு வழியில்லாமல் ஏற்பாடுகளைச் செய்தான்.

வீரம் வெல்லாத இடத்தில் வஞ்சம வென்றுவிடும். இநத உண்மையை யவனர் நன்றாக அறிந்திருந்தனர். அதைச் சாதித்து முடிப்பதிலும் யவனர் சமர்த்தர். தமிழர்கள் இயற்கைககு அது புறம்பானது, தர்மவிரோதமான காரியம எதையும் செய்ய துணியாத இவர்கள் அவ்விதம் சிந்தித்துப் பார்க்கவும்இல்லை.

அன்றைத்தினம் விடியற்காலையிலிருந்தே இரு திறத்தாரும் போருக்கு வேண்டிய ஆயத்தங்களை முமமுரமாகச் செய்து வந்தனர். ஒவ்வொருவனும் தன் கைத்திறமையைக் காட்டி அன்றைக்குப் போர் புரிந்து வெற்றியடைவது என்றே தீர்மானித்திருந்தான். ஒவ்வொருவீரனும்தனக்கு ஜயம் ஏற்பட்டுவிட்டதே என்றே கருதிக் குதூகலித்திருந்தான்.

விடிய இரண்டு நாழிகைப் பொழுதிருக்கும்பொழுது உண்டான முரசொலியைக் கேட்டு வீரர்கள் யாவரும் அன்றைய யுத்தத்துக்கு வேண்டிய படித்தங்களை அலங்கரித்துத் தயார் செய்து கொண்டனர். சூரியோதயம் ஆகி இரண்டு நாழிகைக்குப் பிறகே ரண பேரிகைகொட்டி போருக்குப் புறப்பட்டனர்.

அன்றைய தினம் பாணடிய சேனை தன் முழு பலத்தையும் கொண்டு யவனர்களைத் தாககி முறியடிப்பதாகத் தீர்மானித்திருந்தது. அவர்கள் பாடியிறங்கியிருந்த ஆற்றின்வடகரையிலிருந்துஆற்றைக கடந்துதென் கரையை அடைந்துயவனர்களைத தோற்கடித்து வெற்றி கொள்ள வேண்டும். ஆறறைக் கடக்கும் போதும், தென்கரையில் ஏறும் போதும் மறவாகளுக்குச் சிறிதும் கெடுதி ஏற்படவில்லை. அதற்கு முன்னதாகவே பாணடியர்கள் மேற்கே ஆற்றின் நடுவே அணைபோட்டு நீரை மறித்துத் தேக்கி வேறு வழியாகத திருப்பி விட்டனர்.

பாண்டிய சேனையின எழுச்சியைப் பின்வருமாறு கூறலாம், முதலில் வில்லாளிகள்; அவர்களுக்குப் பின்னால் வேல் வீரர்கள், மூன்றும் வரிசையில் வாள் வீரர்கள்; இவ்விதம் மூன்று அணியாக நின்ற காலாட்களுக்குப் பின்னரே குதிரை படைகளும் யானைபடையினரும் வந்து கொண்டிருந்தனர்.

காலாட படையே முதல் தாக்குதலை ஆரம்பித்தது. முதலில் தூரத்திலிருந்தே அம்பெய்தி, யவனர்களிடையே சிறிது கலகலப்பை ஏற்படுத்திக்கொண்டு பிறகு வேலை எறிந்து வந்தார்கள். இப்படி ஒருவர் பின் மற்றவராக ஒவ்வொரு படையும் முன் வந்து ஏககாலத்தில் யவனர்களைத் தாக்கியது.

இதன் முடிவே போரின் முடிவாகமாறியது ஆச்சரியம் அன்று மறவர்களுடைய அடியின் வேகத்தைத் தாங்காமலும் அவர்கள் பலத்தைக கண்டு பயந்தும் தங்களிடையே நேரிடும சேதத்தைக் கண்டு திகைத்தும் யவனர்களில் பலர் கலங்கிப் புறங்காட்டி ஓடத் தலைப்பட்டனர்.

அண்டியோகஸுக்கோ முதலில் ஏற்பட்ட அதைரியத்தைச் சமாளித்துக்கொண்டு அன்றைத் தினம் போரை நடத்துவது துர்லபமாக இருந்தது. எனினும் நிறுத்தவில்லை. பகற்பொழுது முடிந்தபிறகும் பாண்டிய சேனை போரை நடத்திக்கொணடே இருந்தது. வெற்றி கிட்டும் போது அதை நிறுத்த மனம் வருமா? அதனை அந்தோணியா அறிவாளோ?

இரவு ஜாமப்பொழுதுக்குப் பிறகு பாசறையில் தனியே இருக்க மனம கொள்ளாமல் சற்றே வெளியில் சென்று வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாள். சாத்தனை வீரர்கள் அங்கே தூக்கிவந்து படுககவைத்த போதும் அவள் அவவிடம் இல்லை. அப்பால் அவள் அங்கே திருமபி வரவில்லை.

சாத்தனுக்கு உணர்வு வந்த போது தன் அறையில் படுத்திருக்கக் கண்டான் அவன். பொழுது புலரும் தருணமாக இருந்தது. அவனுக்கு கண்ணையோ திறக்க முடியவில்லை. உடல் முழுதும் கனுக்கனுவாக வலி யெடுத்தது; கை கால்களில் அங்கங்கே கட்டுகள் போடப்பட்டிருந்தன.

அவன் படுக்கையினின்றும் எழுந்திருக்க முயன்றான். அவனால் கூடவில்லை; முதல் நாள் இரவுப் போரில அவனுககு அகஸ்மாத்தாக காயம் ஏற்பட்டு விட்டது. போர்களத்திலே மூர்ச்சையடைந்து வீழ்ந்த அவனை உடனிருந்தவர் அங்கே வந்து பாசறையில் வைத்துப் பணிவிடை செய்தனர். இரவு முழுதும் அந்தோணியா பக்கத்திலேயே வராமல் இருந்த விஷயத்தை அவன் அறிவானோ?

படுக்கையில் புரண்ட சாத்தனுக்குத் தலையணைப் பக்கத்தில ஏதோவொன்று உறுத்தியது, அது ஒன்றுமில்லை ஓர் ஓலைசுருள்

'அன்பா, சென்ற ஒரு வருஷகாலமாக என் உடல் நிலையையும் மன நிலையையும் தாங்கள் நன்றாக அறிவீர்கள். என் பொருட்டு உலகத்து ஜீவராசிகளிடையே இவ்வளவு உயிர்ச் சேதம் நேரிடுவதைக் காண என் ஆவி துடிக்கிறது. நான் ஒருத்தி இலலாமல் இருந்திருந்தால், இவை யாவும் ஏற்பட்டிருக்காவன்றோ? போனவை போக இனி மேலாவது அவற்றைத் தடுத்துவிட விரும்புகிறேன், திருமபத் திரும்ப யோசித்தும். வேறு எவ்விதமான முடிவும் எனக்குத் தோன்ற வில்லையாதலால், நான் இப் பரந்த உலகத்துள் மறைந்து போக நிச்சயித்து விட்டேன். என்னைத் தேடிப் பிடிக்க வீணாக முயற்சி செய்யாதீர்கள். ஆயினும் தங்கள் அன்பின் பெருக்கையும், குழந்தை உள்ளத்தையும நான் என்று மறவேன்.

தங்கள் அடியாள்
அந்தோணியா,

இதுவே அக கடிததத்தில் காணப்பட்ட செய்தி அதனை முழுதும் படிக்கச் சாத்தனால் கூடவில்லை. கணணீர் பார்வையை மறைத்தது. அவன் தலை சுழன்றது. மயக்கமுற்று அப்படியே படுக்கையில் சாய்ந்தான் சாத்தன். மறுபடியும விழித்து எழுந்த போது, சூரியன் வான வீதியில் உச்சிக்கு வந்து விட்டான். வெளியே பாண்டிய சேனை வாகை யணிந்து வெற்றி கொண்டாடிக் கொண்டிருந்தது. ஆனல் யவனர்களை அந்தப் பக்கத்திலேயே காணவில்லை. அவர்கள் இரவோடு இரவாக வெளியேறி விட்டார்கள் அந்தோணியாவும் அவர்களும் போய் விட்டார்கள்.

அப்பால் சாத்தன் அந்த யவனப் பெண் அந்தோணியாவைக் காணவில்லை. அவளை மறக்கவும் அவனால் கூடவில்லை. அவன் அவளிடம் கொண்டிருந்த காதல் வாடா மலராகவே விளங்கியது. ஆனல் அது காய்த்துக் கனியவில்லை.

பிரகாசமும் சாயையும்

★

சரத் சந்திரர் எழுதியது

(சென்றவாரத் தொடர்ச்சி)

5

கல்யாணம் செய்து கொண்டு மணப் பெண்ணை வீட்டுக்கு அழைத்துவந்தான் யக்ஞதத்தன். நோயாளி இருக்கும் வீட்டில் வேறொருவரும் இல்லாவிட்டால் அவன் எப்படி ஓடிப் போய் தண்ணீர் குடத்தைக் கட்டிக்கொள்வானோ, அதே போல் ஸுரமா புது மணப் பெண்ணைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டாள். தன்னிடமிருந்த நகைகளையெல்லாம் அவளுக்கு அணிவித்தாள். தன் பெட்டியிலிருந்து புடவைகளையெல்லாம் அவள் பெட்டியில் எடுத்து வைத்தாள். நாள் பூராவும் நாட்டுப்பெண்ணை அலங்காரம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு யக்ஞ தத்தன் முகம் சுண்டிவிட்டது. பயங்கரமான கனவை ஊகித்துக்கொள்ளலாம்; ஏனென்றால் சகிக்கமுடியாதபோது தூக்கம் கலைந்துவிடும். ஆனால் விழித்துக் கொண்டே கனவு காண்பதில் மூச்சுத்தடுமாறிப் போய்விடுகிறது. அது முடிவடைவதே இல்லை. தூக்கமும் கலைவது இல்லை. சில சமயம் இது கனவென்றும், சில சமயம் இது உண்மையென்றும் தோன்றுகிறது. பிரகாசன், சாயா இருவருக்குமே இப்படித்தான் தோன்றியது. ஒரு நாள் அவளைத் தன் அறைக்கு அழைத்து, "சாயா!" என்றான் யக்ஞதத்தன்.

"என்ன யக்ஞ அண்ணா?"

"பிரகாஷ் என்று சொல்ல மாட்டாயா?"

ஸுரமா தலை குனிந்து கொண்டு "பிரகாஷ்" என்றாள்.

யக்ஞதத்தன் இரு கைகளையும் விரித்துக்கொண்டு "வெகு நாட்களாக அருகே வரவில்லையே, வா" என்றான்.

ஸுரமா ஒருதரம் அவன் முகத்தைப் பார்த்தாள். அடுத்த கணம், "பேஷ். நல்ல வேலை செய்தேன் நான், நாட்டுப் பெண்ணை தனியாய் விட்டுவிட்டு வந்துவிட்டேனே!" என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டாள்.

கோபத்தினால் பழக்கமற்ற ஒருவரைக் கன்னத்தில் அறைந்து, அவர்களும் சாந்தமாக அதைப் பொறுத்துக்கொண்டு மன்னித்துவிட்டுச் சென்றால், அந்தச் சமயம் மனம் என்ன பாடுபடும்! அதேமாதிரி மன்னிப்புக் கிடைத்த குற்றவாளியைப்போல், அவன் மனமும் உற்சாகமிழந்தது. திரும்பத் திரும்ப தான் ஏதோ தவறு செய்துவிட்டதாகவும், தெரிந்தும் ஸுரமா அதை மன்னித்து விட்டுச் சென்றதாகவுமே அவனுக்குத் தோன்றியது.

சகல ஆபரணங்களையும் போட்டு நாட்டுப் பெண்ணை அவனருகே கொண்டுவந்து உட்கார வைப்பாள். சாயங்காலமானதும் வெளியே கதவைத் தாழிட்டுவிடுவாள். யக்ஞதத்தன் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு யோசித்துக் கொண்டிருப்பான். நாட்டுப் பெண்ணும் கொஞ்சம் கொஞ்சம் அறிந்துகொள்வாள். அவள் வயதான பெண்ணாக இல்லாவிட்டாலும், ஸ்திரீயல்லவா! சாதாரண ஸ்திரிக்குள்ள புத்தியைக்கூடக் கொடுக்காமல் கடவுள் ஒருவரையும் வஞ்சிப்பதில்லை. அவளும் இரவு முழுதும் விழித்துக்கொண்டிருப்பாள்.

கல்யாணம் நடந்து எட்டுத் தினங்கள் கூட ஆகவில்லை. இதற்குள்ளாகவே ஒரு நாள் காலையில் யக்ஞதத்தன் ஸுரமாவை அழைத்து, "ஸுரோ, நாட்டுப்பெண்ணை அழைத்துக் கொண்டு போய் அத்தைக்குக் காட்டி விட்டு வரட்டுமா?" என்றான்.

தாமோதர நதியின் அக்கரையில் இருந்தது அத்தையின் கிராமம். யக்ஞதத்தன் அத்தை வீட்டுக்குச் சென்றதும் "அத்தை, நாட்டுப்பெண் வந்திருக்கிறாள் பார்!" என்றான்.

"அடே கல்யாணம் செய்து கொண்டுவிட்டாயா? ஓஹோ! ஆயுசோடு இரு! நூறு வயசு உனக்கு! சந்திரனைப் போல் நல்ல நாட்டுப் பெண். இனி நல்ல பிள்ளையாய் குடும்பம் நடத்து அப்பா!" என்றாள் அத்தை.

"இதற்காகத்தான் ஸுரமா பலவந்தமாகக் கல்யாணம் செய்து வைத்தாள்!"

"நல்லது, ஸுரமாவா செய்து வைத்தாள்?"

"அவள் தான் செய்து வைத்தாள், ஆனால் தலை எழுத்து சரி இல்லை. இந்த நாட்டுப் பெண்ணுடன் வீட்டுக்குப் போக முடியாது."

"ஏன், ஏண்டாப்பா?"

"தெரியாதா அத்தை உனக்கு, நான் மனித கணம். இந்தப் பெண் ராக்ஷஸ கணம்; ஒன்றாய் இருந்தால் உயிரோடு இருக்க முடியாதென்று ஜோசியன் சொல்லியிருக்கிறான்."

"அப்படியாப்பா, சேதி?"

"அந்த அவசரத்திலே இதெல்லாம் பார்க்கமுடியவில்லை. இனி இவள் உன் வீட்டிலேயே இருக்கட்டும். மாதம் ஐம்பது ரூபாய் அனுப்புகிறேன். அதைக் கொண்டு உங்கள் காலக்ஷேபம் நடந்து விடாதா அத்தை?"

"ஆஹா, நடந்துவிடும். பட்டிக்காட்டில் அதிகக் கஷ்டம் ஒன்றும் இல்லை, அடே தங்கமான பெண் பெரியவளாகிவிட்டாள். ஏண்டா ஜக்கூ! ஏதாவது சாந்தி ஹோமம் செய்தால் சரியாகிவிடாதா?"

"ஆகும். நான் பட்டாச்சார்யரிடம் கேட்டுக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதற்கு உனக்குத் தகவல் கொடுக்கிறேன்."

'சரி, அப்படியேசெய், அப்பா!'

சாயங்காலம் யக்ஞதத்தன் அந்தப் பெண்ணை அருகே அழைத்து" அப்படியானால் நீ இங்கேயே இரு! என்றான்..

அவள் தலையை அசைத்து, "ஆஹா!" என்று சொல்லிவிட்டாள்.

"உனக்கு எப்பொழுது எது வேண்டுமானாலும் எனக்குச் சொல்லி அனுப்பு!"

"சரி."

"உனக்குக் கடிதம் எழுதத் தெரியுமா?"

"தெரியாது."

"பின்னே எப்படித் தகவல் தெரிவிப்பாய்?"

அந்தப்பெண் வீட்டில் வளர்த்த மான் போல் கண்களை மிரள மிரள விழித்துக் கொண்டு நின்றாள். யக்ஞதத்தன் முகம் திருப்பிச் சென்றுவிட்டான்.

அத்தை வீட்டில் நாட்டுப் பெண் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுவாள். உட்கார்ந்து கொண்டிருக்க அவளுக்குத் தெரியாது. புதிதாக இருந்தாலும், பழையவளைப்போல வீட்டு வேலைகளைச் செய்யலானாள். இரண்டொரு தினங்களில், இம்மாதிரிப் பெண் எல்லோருக்கும் கிடைத்துவிடமாட்டார்கள் என்று அத்தை தெரிந்து கொண்டாள்.

நாட்டுப் பெண் நிறைய நகை அணிந்திருந்தாள். தெருவிலுள்ளவர்கள் பார்க்க வந்தார்கள். அதில் ஒருவள், "இந்த நகைகள் யாரம்மா போட்டார்கள், உன் தந்தையா?" என்று கேட்டாள்.

"எனக்குத் தாய் தந்தையர் இல்லை. நாத்தனார் போட்டாள்."

அவளுடைய சமவயதுள்ள இரண்டு பெண்கள் அவளுக்கு சிநேகமானார்கள். பிறகு இவளைக் கிண்டிக் கிண்டி ரகசியத்தை அறிய முயற்சித்தார்கள். ஒருவள், "உன் நாத்தனார் ஒருக்கால் பெரிய பணக்காரியோ?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"நகைகள் எல்லாம் அவளுடையதா?"

"ஆமாம்!"

"அவள் அணிந்துகொள்வதில்லையா?"

"அவள் கைம்பெண், அணிவதில்லை."

"வயதென்ன இருக்கும்?"

"நம்மை விடச் சற்று பெரியவள். அவள்தான் பலவந்தமாக சகோதரனுக்கு என்னைக் கல்யாணம் செய்து வைத்தாள்."

"உன் கணவன் அவள் சொல்வதையெல்லாம் கேட்கிறான் அல்லவா?"

"ஆமாம், அவள் ஸதி-லக்ஷ்மி- எல்லோரும் அவளை விரும்புகின்றனர்."

6

மேலே அமர்ந்து ஜன்னல் வழியாகப் பார்த்தாள் ஸுரமா. யக்ஞதத்தன் வீடு திரும்பி கொண்டிருந்தான். ஆனால் கூட நாட்டுப்பெண்ணைக் காணவில்லை. அவன் உள்ளே நுழைந்ததும், "அண்ணா, மன்னியை எங்கே விட்டுவிட்டு வந்து விட்டாய்?" என்று கேட்டாள்.

"அத்தையின் வீட்டில்."

"ஏன் விட்டு விட்டு வந்தாய்?"

"இருக்கட்டும், கொஞ்சநாள் பொறுத்துப் பார்த்துக்கொள்ளலாம்."

இந்த வார்த்தை சுரீலென்று ஸுரமாவின் உள்ளத்தில் தைத்தது. இருவரும் மௌனமாக இருந்தார்கள். நண்பர்களோடு விவாதித்துக்கொண்டிருக்கும் போது திடீரென்று சண்டை வந்து விட்டால் இருவரும் மனம் நொந்து சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்து விடுவது வழக்கம். இவர்கள் இருவரும் கூடச் சிறிதுநாள் அவ்வாறே இருந்தார்கள். "ஸ்நானம் செய்து சாப்பிடு, வெகு நேரமாகிவிட்டது" என்பாள் ஸுரமா.

"உம், போகிறேன்." என்பான் யக்ஞதத்தன். இவ்வாறே சில தினங்கள் கழிந்தன.

ஒன்றாக இருந்து இம்மாதிரி எப்பொழுதும் குடும்பம் நடத்த முடியாதாகையால் மறுபடியும் சௌஜன்யம் ஏற்பட்டது. யக்ஞதத்தன் மீண்டும் அன்போடு "சாயா!" என்று அழைக்கலானான். ஆனால் சாயா இப்பொழுது அவனை 'பிரகாஷ்' என்று அழைப்பதில்லை. சில சமயம் யக்ஞதத்தன் என்றும், சில சமயம் அண்ணா என்றும் அழைத்துவந்தாள்.

ஒருநாள் ஸுரமா, "அண்ணா கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகப்போகிறதே, போய் மன்னியை அழைத்துக் கொண்டுவா" என்றாள்.

யக்ஞதத்தன், அவள் பேச்சை மறுத்து "எல்லாம் வருவாள்" என்றான். அவன் மனோபாவத்தை அறிந்து ஸுரமா பேசாமல் இருந்துவிட்டாள்.

அத்தையிடமிருந்து சிற்சில சமயம் கடிதம் வரும். அதில், 'நாட்டுப்பெண்ணுக்குமலேரியா ஜுரம்' வைத்தியம் செய்ய வேண்டும், என்று எழுதுவாள். விஷயத்தை அறிந்துகொண்டு யக்ஞதத்தன் கொஞ்சம் ரூபா அனுப்புவான். பிறகு ஒரு மாதம் வரை ஒன்றும் இருக்காது.

இப்படி இருக்கையில் திடீரென்று ஒரு நாள் 'அத்தை இறந்துவிட்டாள்' என்று கடிதம் வந்தது.

யக்ஞதத்தன் அந்த ஊருக்குச் சென்றான். போகும்போது ஸுரமா தன் தலையின் மேல் ஆணை இட்டு "மதனியை அழைத்து வரவேண்டும்!" என்று சொல்லி அனுப்பினாள்.

"ஜயம்" மொழிபெயர்த்தது

அத்தையின் காரியங்கள் ஆனதும் ஒரு நாள் மத்தியானம் யக்ஞதத்தன் தாழ்வாரத்தில் நின்றபடி வீட்டுக்குத் திரும்பி வருவதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். இடைக்கட்டில் நெற்குதிருக்கருகே பிரதுல் நின்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்தான். இருவர் கண்களும் சந்தித்தன, கை ஜாடை காட்டி அவளை அருகே அழைத்தான். அவள் அருகே வந்தாள்.

"என்ன?"

"உங்களிடம் ஒரு விஷயம் சொல்லலாமா?"

"சொல்லேன்!"

நாட்டுப் பெண் கூட்டி விழுங்கிக் கொண்டு, "எனக்கு ஏதாவது தேவையாக இருந்தால் உங்களைக் கேட்கும்படி ஒரு நாள் சொன்னீர்கள்—" என்றாள்.

"ஆமாம், ஆமாம், என்ன வேண்டும், சொல்—"

"வீட்டில் எல்லோரும் நான் பெரும் அவலக்ஷணம் என்று சொல்லுகிறார்கள். இனி என்னால் இங்கே இருக்க முடியாது"

"எங்கே இருக்கவிரும்புகிறாய்"

"கல்கத்தாவில் எந்தப் பெரிய மனிதர் வீட்டிலாவது இடம் கிடைத்தால்—எனக்கு எல்லா வேலையும் தெரியும்"

"நீ உன் வீட்டுக்குப் போகிறாயா?"

"என் வீடா? எங்கே இருக்கிறது? இனி அவர்கள் இருக்க விடுவார்களா?"

யக்ஞதத்தன் தன் கையினால் மனைவியின் முகத்தைத் தூக்கி "என் வீட்டுக்கு வருகிறாயா?" என்று கேட்டான்.

"வருகிறேன்"

"ஸுரமா உனக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறாள்."

ஸுரமாவின் பெயரைக் கேட்டதும் அவள் முகம் மலர்ந்தது. "ஜீஜீ என்னை நினைவு வைத்துக்கொண்டிருக்கிறாளா?" என்றாள்.

"ரொம்ப!"

"அப்படியானால் அழைத்துச் செல்லுங்கள்."

உலகத்தில் பிறரைப்பற்றி அபிப்பிராயம் கூறத் தெரியாத மனிதர்களும் இருக்கிறார்கள். ஆனால், கூடவே அவர்களிடம் ஒரு நல்ல குணமும் இருக்கிறது. தங்கள் விஷயத்தைப் பற்றி பிறரிடம் ஆலோசனை கேட்பதும் இல்லை. நாட்டுப் பெண் இந்த வகையைச் சேர்ந்தவள். அவள் தன விஷயத்தைத்தானே யோசிப்பாள்—பிறரைக் கேட்பதில்லை. அவள் மீண்டும், "உங்களுக்கு தீங்கு ஏற்படும், எனக்குப் பயமாக இருக்கிறது. ஆனால், நான் எங்கே இருப்பது? இல்லாவிட்டால் நான் கீழேயே இருக்கிறேன். வேலைகளைச் செய்ய கீழே எனக்குச் சௌகரியமாக இருக்கும்" என்றாள்.

"ஏன் நீ இருப்பதற்கு மேலே அறை இல்லையா?" என்றான் யக்ஞதத்தன்.

"இருக்கிறது. ஆனால், கீழே இருக்கும் அறையிலேயே நான் சௌகரியமாக இருப்பேன்!"

யக்ஞதத்தன் வேறொன்றும் கேட்கவில்லை. இவளுடைய வார்த்தைகள் என்னவோ முட்டாள்கள் பேசும் வார்த்தையாக இல்லை. 'நீ அவலக்ஷணம் இல்லை, ராக்ஷஸகணம் என்று சொல்வதெல்லாம் பொய் என்று சொல்லிவிடுவோமா' என்று பல தடவை எண்ணினான். ஆனால், பொய் சொல்ல வேண்டிய காரணம் என்ன, என்று கேட்டால் என்ன சொல்லுவது? பிறகு வீட்டுக்குச் சென்று முன் பின் இருந்த சௌஜன்யத்தோடு கூட இருக்க முடியும் என்ற நம்பிக்கையைக்கூட அல்லவா இழந்து விடுவாள் என்று எண்ணிப் பேசாமல் இருந்து விட்டான்.

7

ஸுரமா பார்த்தாள். நாட்டுப் பெண் வந்து விட்டாள், ஆத்திரத்தின் தாக்கு தலை சமாளித்துக் கொண்டு சாந்தமடைந்தாள். சாந்தமாக அன்புடன் அவளோடு வார்த்தையாடினாள். வாய்ப்பேச்சு மட்டுமல்ல; அந்தரங்கத்தோடு பேசினாள், அவளுடைய வாடிய முகம் மறுபடியும் மலர்ச்சியடைந்தது." நாட்டுப்பெண்ணே! உனக்கு அங்கே உடம்பு அசௌகரியமா?" என்று கேட்டாள்.

நாட்டுப் பெண் தலையசைத்துக்கொண்டே "அடிக்கடி ஜுரம் வருவதுண்டு!" என்றாள்.

ஸுரமா அவள் நெற்றி வியர்வையைத் துடைத்துவிட்டு, "இங்கே வைத்தியம் செய்து கொண்டால் எல்லாம் சரியாய்ப் போய் விடும்" என்றாள்.

நாட்டுப் பெண்ணுக்காகக் கீழே இருக்கும் அறை சுத்தம் செய்யப்படுகிறது என்ற விஷயம் ஸுரமாவுக்கு மத்தியானம் தெரிந்தது. அவமானத்தால் அவள் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. ஒருவாறு அதை அடக்கிக்கொண்டு யக்ஞதத்தனிடம் சென்று, "அண்ணா, நாட்டுப் பெண் கீழ் அறையிலா தூங்கப் போகிறாள்?" என்று கேட்டாள்.

யக்ஞதத்தன் புஸ்தகத்திலிருந்து தலை நிமிராமலே, "அவள் அப்படித்தானே சொன்னாள்!" என்றான்.

"நீ ஒன்றும் சொல்லமாட்டாயா?"

"நான் என்ன சொல்வது, யாருக்கு என்ன இஷ்டமோ செய்துகொள்ளட்டும்!"

லஜ்ஜையாலும் வெறுப்பாலும் ஸுரமாவினால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அவன் முன்னிலையிலேயே அழுதுவிட்டு மறுபுறம் சென்றாள். மேலே நடந்த இந்த விஷயம் கீழே எட்டவில்லை.

நாட்டுப்பெண் வீட்டு வேலையில் முனைந்திருந்தாள். நாளடைவில் ஸுரமாவின் சகல வேலைகளையும் தான் ஏற்றுக்கொண்டாள். மேலே மாத்திரம் போவதில்லை. கணவனைச் சந்திப்பதில்லை. நாளடைவில் ஸுரமாவும் மேலே போவதை விட்டுவிட்டாள். நாட்டுப் பெண் மலர்ந்த முகத்துடன் காரியம் செய்வாள். ஸுரமா பேசாமல் அருகே அமர்ந்து பார்த்துக் கொண்டிருப்பாள்: வேலை செய்வதில் எவ்வளவு சுகம் இருக்கிறது என்பதைக் கண்டாள் ஒருவள்; வேலை செய்வதால் சகல துக்கங்களும் மறந்து விடுகின்றன என்பதைக் கண்டாள் மற்றொருவள். இருவரில் ஒருவரும் அதிகமாகப் பேசுவதில்லை. ஆயினும் இருவரிடையேயும் பரஸ்பரம் அனுதாபமும் அன்பும் அதிகரித்துக்கொண்டு வந்தன.

அடிக்கடி நாட்டுப் பெண்ணுக்கு ஜுரம் வந்துவிடும். இரண்டொரு நாள் உபவாசம் இருப்பாள். தானாகச் சொஸ்தமாகி விடும். மருந்து சாப்பிட அவள் விரும்புவதும் இல்லை, சாப்பிடுவதும் இல்லை. அந்தச் சமயம் வேலைகளை வேலைக்காரிகள் செய்வார்கள். ஸுரமாவினால் முடிவதில்லை. ஆசையிருந்தாலும் அவள் சக்திக்குப் புறம்பான விஷயம்.

தங்கப் பதுமைபோல் இருந்த ஸுரமாவின் நிறம் மாறியது. பழைய காந்தி இப்பொழுது இல்லை. அந்த அழகு பூராவும் இந்த இரண்டு மாதத்திற்குள் எங்கோ மறைந்து விட்டது. நாட்டுப் பெண் சிற்சில சமயம் "ஜீஜீ, நீ ஏன் நாளுக்கு நாள் இப்படியாகிக் கொண்டு வருகிறாய்?" என்று கேட்பாள்.

"நானா? நல்லது மன்னி! உடம்பைப் பார்த்துக் கொள்வோம் என்று எங்கேயாவது வெளியே சென்றால் உனக்குக் கஷ்டமாக இருக்காதா?"

"ஆமாம், கஷ்டமாகத்தான் இருக்கும்!"

"அதனால்தான் நான் போகவில்லை."

"சரி, ஜீஜீ, நீ போக வேண்டாம். இங்கே இருந்தபடியே ஏதாவது மருந்து சாப்பிடு, சரியாகப் போய்விடும்." என்றாள் பிரதுல். அன்பின் மிகுதியால் ஸுரமா அவள் நெற்றியில் முத்தமிட்டாள்.

ஒரு நாள் ஸுரமா யக்ஞதத்தனுக்காக தட்டு தயாரித்துக் கொண்டிருந்தாள். யக்ஞதத்தன் வாடிய முகத்துடன் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் தலை நிமிர்ந்ததும் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு, "இறந்து விட்டால் நல்லது என்று தோன்றுகிறது." என்றான்.

"ஏன்?" என்றாள் ஸுரமா. அவள் கண்களில் தண்ணீர் வந்து விட்டது.

"பயமாக இருக்கிறது. இன்னும் எவ்வளவு நாள் இந்த உயிரைச் சுமந்து கொண்டிருக்க வேண்டுமோ!"

துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததும் காட்டு விலங்குகள் பூமியை விட்டு வானத்துக்கு ஓடப் பிரயத்தனப்படுகின்றன, ஆனால் முடிவதில்லை. வேறு வழியின்றி பூமியிலேயே விழுந்து அதைத் தழுவிப் பிராணனை விடுகின்றன. ஸுரமாவும் துடிதுடித்து முதலில் வானத்தைப் பார்த்தாள். பிறகு அதைப் போலவே பூமியில் வீழ்ந்து அழலானாள். "யக்ஞ அண்ணா! மன்னித்துக் கொள்: நான் உன் சத்துரு. என்னை வேறு எங்கேயாவது அனுப்பிவிடு, நீ சுகமடைவாய்!" என்றாள்.

வேலைக்காரி வந்து விடப் போகிறாளோ என்ற பயத்தினால் யக்ஞதத்தன் கையைப் பிடித்து அவளைத் தூக்கினான். அன்புடன் அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே 'சீச்சீ! இதென்ன சிறுபிள்ளைத் தனம்?' என்றான். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ஸுரமா சட்டென்று தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

8

இதன் பிறகு ஒரு நாள் ஸுரமா மதனியைத் தன்னருகே அழைத்து, அமரிக்கையாக, "ஏன் மன்னி, அண்ணா உன்னை என்றாவது ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டாள்.

பிரதுல் சகஜமான பாவத்துடன் "என்ன சொல்லப் போகிறீர்?" என்றாள்.

"அப்படியானால் நீ ஏன் அவனிடம் செல்வதில்லை? உனக்குச் செல்ல இஷ்டமில்லையா?"

நாட்டுப் பெண்ணுக்கு முதலில் வெட்கமாக இருந்தது. பிறகு தலை குனிந்து கொண்டு "இஷ்டமில்லாமல் என்ன ஜீஜீ. ஆனால் போகமுடியவில்லையே!" என்றாள்.

"ஏன் அம்மா?"

"உனக்கு ஞாபகமில்லையா?"

"இல்லையே!"

"அடே ஒருக்கால் நீ மறந்திருப்பாய். நான் ராக்ஷஸகணம், அவர் மனித கணம் அல்லவா!"

"யார் சொன்னார்கள்?"

"அவர்தான் அத்தையிடம் சொன்னார். அதனால் தான்—"

ஸுரமாவுக்கு மயிர் கூச்செறிந்தது. "இது பொய் அம்மா!" என்றாள்.

"பொய்யா?" விரிந்த கண்களுடன் அவள் ஸுரமாவின் முகத்தைப் பார்த்தாள். ஸுரமாவின் உடல் நடுங்கியது. அடிக்கடி மயிர் கூச்செறிந்தது, அவள் "பிரதுல். இது பொய் அம்மா முழுப்பொய்!" என்றாள்.

"நான் நம்பவில்லை. அவர் பொய் சொல்வாரா?"

நரையை ஒழியுங்கள்.
தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தந்தக் கறுப்பு சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.
APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER,
Coimbatore.



மதனமஞ்சரி
மாத்திரைகள்
மூலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாதுகேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாதுவிருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்

ஸுரமாவினால் பொறுக்க முடியவில்லை, அவள் மதனியை தன் இரு கைகளாலும் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழலானாள். "நாட்டுப் பெண்ணே, நான் மகா பாதகி!" என்றாள்.

நாட்டுப் பெண் தன்னை விடுவித்துக் கொண்டு, மெதுவாக "ஏன் அக்கா?" என்றாள்.

"ஐயோ! அதை இப்பொழுது கேட்காதே. நான் சொல்ல முடியாது!"

* * * *

புயலைப் போல் ஸுரமா யக்ஞதத்தன் அறைக்கு வந்தாள் "மன்னியை இந்த மாதிரியா ஏமாற்றுகிறாய்? அடாடா! எப்படிப்பட்ட பொய்யன் நீ!" என்றாள்.

யக்ஞதத்தன் இடிந்து போனான்.

"ஸுரோ, இதென்ன?"

"ரொம்ப கெட்டிக்காரன் தான் நீ! சீச்சி. வெட்கக்கரமாக இல்லையா, உனக்கு?"

யக்ஞதத்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பேசாமல் கடும் சொற்களைக் கேட்டுக்கொண்டான்.

"என்ன நினைத்துக் கொண்டு கல்யாணம் செய்து கொண்டாய்? என்ன நினைத்துக் கொண்டு அவளை விட்டுவிட்டு வந்தாய்? எனக்காகவா? என் முகத்தைப் பார்த்து இந்தமாதிரி ஏமாற்றி வருகிறாயா?"

"ஸுரமா, உனக்குப் பைத்தியமா என்ன?"

"நானா பைத்தியம்? உன்னை விட எனக்குப் புத்தி அதிகம் இருக்கிறது. என்னை வேறு எங்கேயாவது அனுப்பிவிடு." என்று சொல்லும் போதே அவள் கண்கள் வரண்டன. "இனி ஒரு நாள் கூட நான் இங்கே இருக்க முடியாது!" என்றாள்.

யக்ஞதத்தன் உரக்கச் சத்தமிட்டு "என்ன சொல்லுகிறாய் நீ?" என்றான்.

"நீ பொய்யன், மோசக்காரன் என்று சொல்லுகிறேன்!"

நிமிஷத்திற்குள் யக்ஞதத்தனின் மூளைக்குள் தீப்பற்றியதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. காரணமில்லாமல் அவன் உயிர் அவனை விட்டு வெளியே வந்து அவனைப் போரிட அழைப்பதைப் போல் இருந்தது. அவன் சுய புத்தியை இழந்து மேஜை மேல் இருந்த தடித்த ரூல் தடியை எடுத்து, உரக்கச் சத்தமிட்டு, "நான் அயோக்கியன்! மோசக்காரன்! நான் பொய்யன்! இதோ அதற்குப் பிராயச்சித்தம் செய்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே தன் முழு பலத்தோடும் ஓங்கி ஸுரமாவை ஓர் அடி அடித்தான்.

மண்டை உடைந்து ரத்தம் பெருகியது. ஸுரமா உடைந்த குரலில், "ஐயோ, அம்மா!" என்றாள். பிறகு மூர்ச்சையடைந்து தரையில் வீழ்ந்தாள். யக்ஞதத்தன் அவளைப் பார்த்தான். தன் முகம் பூராவும் ரத்தம் வழிவதையும் கண்டான். கண்ணின் மேல் ரத்தம் வழிந்ததால் பார்வை மங்கலாகத் தெரிந்தது. அவன் வெறி கொண்டவனைப் போல் "இனி என்ன?" என்றான். இதற்குள் பின்னாலிருந்து யாரோ வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள். திரும்பிப் பார்த்தான். மனைவி அழுது கொண்டே, "நீ வந்து விட்டாயா?" என்றாள். அவள் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு அவனும் மூர்ச்சையானான்.

ஸுரமா வேகமாக மேலே ஓடி வருவதைக் கண்டு, பிரதுல் ஆச்சரியமும் சந்தேகமும் கொண்டாள். ஆகையால் பேசாமல் அவருக்குப் பின்னால் வந்து கதவருகே மறைந்து நின்றிருந்தாள். சகல விஷயங்களையும் கேட்டாள். எல்லாவற்றையும் பார்த்தாள். அநேக உண்மைகள் அவள் மனதிற்கு ஸூரிய வெளிச்சத்தைப் போல் ஸ்பஷ்டமாக விளங்கின. அவள் மார்பும் படபடவென்று அடித்துக் கொண்டது. கண்கள் பஞ்சடைந்தன. தன்னைச் சமாளித்துக் கொண்டு இந்த ஆபத்துக் காலத்தில் கணவனைத் தன் மடியில் எடுத்துக் கொண்டாள்.

9

ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு நினைவு வந்த போது, "அண்ணாக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள் ஸுரமா.

"சௌகரியமாக இருக்கிறது!" என்றாள் வேலைக்காரி.

"நான் பார்த்துவிட்டு வரட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே ஸுரமா எழுந்தாள். ஆனால் படுத்துவிட்டாள்.

"நீ ரொம்பப் பலவீனமாய் இருக்கிறாய் அம்மா, ஜுரம் வேறு வந்திருக்கிறது. எழுந்திருக்காதே, டாக்டர் சொல்லி இருக்கிறார்!" என்றாள்.

யக்ஞதத்தன் பார்க்க வருவான், மதனி வருவாள், என்று எதிர்பார்த்தாள் ஸுரமா. ஒரு நாள், இரண்டு நாள், என்று ஒரு வாரம் கழிந்தது. ஒருவரும் வரவில்லை. யாரும் தகவலும் சொல்லவில்லை.

ஜுரம் நின்றுவிட்டது. ஆனால் பலவீனம் அதிகமாக இருந்தது. எழுந்திருக்க முயற்சித்தால் எழுந்திருக்கலாம். ஆனால் அபிமானத்தினால் எழுந்திருக்க மனம் வரவில்லை. அவள் தன் மனத்திற்குள் தேம்பித் தேம்பி அழலானாள். கண்களைத் துடைத்துக்கொண்டு தன்னுடைய பிரகாசன் சீயா. இவர்களின் கதையை நினைக்கலானாள்.

தீவிரமான ஒளியையும் ஆழ்ந்த சாயையையும் வைத்துக் கொண்டு அவர்கள் விளையாட்டை ஆரம்பித்தார்கள். இப்பொழுது பிரகாசம் அணைந்துகொண்டிருக்கிறது. மத்தியான சூரியன் மேற்கே சாய்ந்துவிட்டான். ஆகையால் ஆழ்ந்த சாயை ஸ்பஷ்டமற்று விகாரமாகப்பிரேதத்தைப்போல் ஆகிவிட்டது. இப்பொழுது அந்தச் சாயை அறியாத ஒரு அந்தகாரத்தில் சென்று ஒடுங்கிவிட மெள்ள மெள்ள நழுவிக்கொண்டிருந்தது. அழுதுகொண்டே ஸுரமா தூங்கிவிட்டாள்.

உடம்பில் தன் சுடு கரங்களை வைத்து யாரோ, "ஜீஜி!" என்றழைத்தார்கள்.

ஸுரமா எழுந்து உட்கார்ந்தாள். "இதென்ன மன்னி?" என்று கேட்டாள்.

அவள் கண்கள் சிவந்திருந்தது. முகம் வரண்டு போயிருந்தது. உதடுகள் கறுத்திருந்தன. ஸுரமா மறுபடியும் "ஏண்டி பிரதுல், என்ன ஆயிற்று உனக்கு?" என்று கேட்டாள்.

"என்ன ஆயிற்று எனக்கு? நீ என்னை இந்த வீட்டுக்கு அழைத்து வந்தாய். ஆகையால் உன்னிடம் சொல்லிக்கொள்ள வந்திருக்கிறேன். ஜீஜி! எனக்கு விடை கொடு, நான் போகிறேன்!" என்றாள்.

"ஏன் அம்மா? எங்கே போகப் போகிறாய்?"

பிரதுல் ஸுரமாவின் பாதங்களில் தலை வைத்து தரையில் படுத்து நமஸ்காரம் செய்தாள்.

ஸுரமா பார்த்தாள். நாட்டுப்பெண்ணின் உடல் நெருப்பு போல் கொதித்தது. "இதென்ன உனக்கு நல்ல ஜுரம் வந்திருக்கிறதே?" என்றாள். இதற்குள் வேலைக்காரி கூவிக்கொண்டே ஓடி வந்தாள். "ஜீ ஜீ! நாட்டுப் பெண் எங்கே? அடியம்மா! ஜுர வேகத்தில் ஓடிவந்து விட்டாள். இன்று எட்டு நாட்களாக பிரக்ஞையற்றுக் கிடந்தாள். அம்மா! எப்படி வந்தாள் இங்கே?" என்றாள்.

"எட்டு நாட்களாக ஜுரமா? டாக்டர் வந்து பார்த்தாரா?"

"ஒருவரும் இல்லை அம்மா! முந்தாநாள் காலையில் கூட நாட்டுப்பெண் குழாயடியில் அரை மணி நேரம் தலையை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். எவ்வளவோ தடுத்தேன். கேட்கவில்லை." என்றாள்.

* * * *

சாயங்காலம் ஸுரமா யக்ஞதத்தன் அறைக்குச் சென்று அழுதுகொண்டே, "அண்ணா! மன்னி இனிப் பிழைப்பது கடினம்!" என்றாள்.

"பிழைப்பது கடினமா? என்ன ஆயிற்று?"

"என் அறைக்கு வந்துபார். அண்ணா! இனி அவள் பிழைப்பது கடினம்."

இரண்டொரு டாக்டர்கள் வந்து, "பலமான ஜன்னி பிறந்திருக்கிறது" என்றார்கள். இரவு பூராவும் வீணாகச் சிரமப்பட்டு விட்டு காலையில் சென்றார்கள்.

இரவு பூராவும் யக்ஞதத்தன் மனைவியின் தலைமாட்டருகே உட்கார்ந்திருந்தான். பலதடவை அவள் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு சென்றார். ஆனால் பிரதுலால் அறிந்து கொள்ள முடியவில்லை.

டாக்டர்கள் சென்ற பிறகு யக்ஞதத்தன் அழலானான். "பிரதுல், ஒரு தரம் கண் திறந்து பார், ஒரு தரம் சொல், மன்னித்து விட்டேனென்று!" என்று கதறினான்.

ஸுரமா காலருகே அமர்ந்து புடவைத் தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டு விளக்கமற்ற குரலில் "மன்னி. ஏன் இம்மாதிரி தண்டனை அளித்துவிட்டுச் செல்கிறாய்?" என்றாள்.

ஆனால் யார் பேசுகிறார்கள்? மானாவமானம், ஆதரவு, அனாதரவு இவைகளைச் சட்டை செய்யாமல் இவ்வுலகை விட்டு அனந்தத்தில் சென்று கலந்து விட்டாள் பிரதுல் குமாரி.

* * * * *

"அண்ணா எங்கே?" என்றாள் ஸுரமா.

"நேற்று எங்கோ மேற்கே சென்றார்!" என்றாள் வேலைக்காரி.

"எப்பொழுது வருவார்?"

"தெரியாது, அநேகமாக சமீபத்தில் வர மாட்டார்!"

"நான் எங்கே இருப்பது?"

"உனக்கு வேண்டிய மட்டும் பணம் கொடுக்கும்படி குமாஸ்தாவிடம் சொல்லி இருக்கிறார். உனக்கு எங்கே இஷ்டமோ அங்கே இருக்கலாம்!"

ஸுரமா ஆகாசத்தைப் பார்த்து "கண்டேன் உலகத்தின் பிரகாசம் அணைந்து விட்டது. சூரியன் இல்லை, சந்திரன் இல்லை; ஒரு நக்ஷத்திரம் கூடத் தென்படவில்லை. அக்கம் பக்கம் பார்த்தேன். ஸ்பஷ்டமற்ற அந்தச் சாயை கூடத் தென்படவில்லை. எங்கே சென்று விட்டது அது? நாற் புறமும் கோர அந்தகாரமாக இருக்கிறது. ஹிருதயம் நின்று விடும்போல் இருக்கிறது. கண்கள் ஒளி மங்குகின்றன. விழிகள் நின்று விட்டன.!" என்று கதறினாள்.

"ஜீ ஜீ!" என்று அழைத்தாள் வேலைக்காரி. ஸுரமா மேலே பார்த்துக்கொண்டே "யக்ஞ அண்ணா!" என்றாள். பிறகு மெள்ளக் கீழே சாய்ந்தாள்.

ரூ. 10,000 பெறுமான கடியாரங்கள் இலவசம்.

கலா டெல் (ரிஜிஸ்டர்ட், உபயோகித்தால் பல கேசங்களும் கறுப்பாக மாறி, பிறகு எப்பொழுதுமே கறுப்பாக இருந்துவரும். எமது ஸ்வாமியால் அறிவிக்கப்பட்டது. மூளைக்குச் சிறந்த டானிக் கண் பார்வையை சீர்படுத்தி, மண்டையை குளிர்ச்சியாக வைத்திருக்கும். பாட்டில் விலை ரூ. 1-15-0. மூன்று பாட்டில்கள் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய் மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கை கடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும் அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும். குறிப்பு: சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)

(EAB)

பேனா-சிநேகிதம்

சிறு கதை

★

'வஸந்தமாலிகா' எழுதியது

"மாடியில் ஒரு அறை வாடகைக்கு விடப்படும். வாடகைக்கு ரூ. 15/–" என்று எழுதின ஒரு போர்டை வாசலில் மாட்டிவிட்டு லீலாவின் தாயார் பெருமூச்செறிந்தாள். "சட்டென்று யாராவது வருகிறார்களோ, அல்லது மாதக் கணக்காய் காலியாகக் கிடக்கப் போகிறதோ?" என்று அவள் யோசனையிலாழ்ந்தாள். அதே சமயம் லீலா ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு ஓடி வந்தாள். "அம்மா, அந்த 'டு லெட்' போர்டை எடுத்து விடலாம். பாம்பேயிலிருந்து என் பேனா சிநேகிதி நாளைக்கு சாயங்திரம் இங்கே வரப் போகிறாளாம். 15 ரூபாயில் ஒரு தனி ரூம் வேண்டுமென்று எழுதியிருக்கிறாள். நம்ம மாடி ரூமையே கொடுத்து விட்டால் போகிறது. போர்டை எடுத்து விடு" என்று ஒரே மூச்சில் சொன்னாள். ஆனால் லீலாவின் தாயார் "பேனாவும்மாச்சு, சிநேகிதியுமாச்சு! எல்லாம் வந்தன்னிக்கு நிச்சயம். நாளைக்கு அவள் வந்தவுடனே போர்டை எடுத்து விடுகிறேன் போ!" என்றாள்.

லீலாவுக்குத் தகப்பனார் கிடையாது. அவளுக்கு ஒரு அண்ணன் இருந்தான். ஏதோ கொஞ்சம் சொத்தை வைத்துக் கொண்டு, வீட்டையும் வைத்துக் கொண்டு இந்த இரு குழந்தைகளுடன் லீலாவின் தாயார் காலக்ஷேபம் செய்து வந்தாள். லீலாவுக்கு வயது பதினேழு இருக்கும். எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியாயிற்று. கலியாணம் ஆக வேண்டும்.

லீலாவுக்கு கணக்கில்லாத பேனா-சிநேகிதிகள். உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் அவளுக்குக் கடிதங்கள் வரும். தபால் ஸ்டாம்பு செலவுக்கே மாதம் பத்து ரூபா ஆகிவிடும். வரும் கடிதங்களைப் படிப்பதற்கும் அவற்றிற்குப் பதில் எழுதுவதற்கும் அவளுக்குப் போது சரியாகி விடும்.

தன் பேனா சிநேகிதிகளுக்குள் அவளுக்கு மிக மிகப் பிடித்தவள் பாம்பே சிநேகிதி வஸந்திதான். அவள் கடிதங்கள் 7, 8 பக்கங்களுக்குக் குறையாமலிருக்கும். லீலா அவற்றைப் பத்து தரமாவது திருப்பித் திருப்பிப் படிப்பாள். கடிதங்கள் அவ்வளவு ரஸமாயும் ஸ்வாரஸ்யமாயும் இருக்கும். அப்பேர்ப்பட்ட சிநேகிதியிடமிருந்து மறு நாள் மாலை வருவதாகக் கடிதம் வந்தால், லீலாவின் ஆனந்தத்திற்கு கேட்பானேன்! ஆனந்த மிகுதியினால் உடல் பூரித்துப் போய் கால் கீழே பரவாமல் வீட்டில் அங்கும் இங்கும் சுற்றினாள். நாற்காலி மேஜை யெல்லாம் துடை துடையென்று துடைத்தாள். துளிக்கூட அழுக்காகாத மேஜைத் துணி, ஜன்னல் திரை, கதவுத் திரை, எல்லாவற்றையும் எடுத்து விட்டு புதிதாகப் போட்டாள். பித்தளை ப்ளவர் வேஸ்களை பாலிஷ் போட்டுத் தேய்த்து கண்கள் கூசும்படி பளபளப்பாக்கி வைத்தாள். பெட்டியைத்திறந்து சிநேகிதியின் போட்டோவை எடுத்துப்பார்த்தாள். போட்டோவில் சிநேகிதி வெகு அழகாயிருந்தாள். வெகு நாகரீகமான உடை உடுத்தியிருந்தாள். நாளைக்கு அவளை அழைக்கப் போகும் போது தானும் அதே மாதிரி நாகரீகமாக உடை உடுத்த வேண்டுமென்று லீலா சங்கல்பம் செய்துகொண்டாள். பீரோவைத் திறந்து அடுக்கடுக்காக அடுக்கி வைத்திருந்த புடவைகளை எடுத்துக் கீழே போட்டாள். நாளைக்கு எதைக் கட்டிக் கொள்வது? என்று வெகு நேரம் யோசனை செய்து பார்த்தாள். கடைசியில் வெளியில் கட்டிக் கொண்டு போவதற்கு ஒன்று கூட நல்லதாயில்லை என்று அலுத்துக்கொண்டாள்.

இந்த சமயத்தில் லீலாவின் மூத்த சகோதரன் மனோஹரன் "புடவைக்கடை இங்கே எங்கே வந்தது?" என்று கேட்டுக்கொண்டே வந்தான். லீலா மிகுந்த குதூஹலத்துடன் "மனோ! நாளைக்கு பாம்பேயிலிருந்து என் பேனா-சிநேகிதி வருகிறாள். அவளை அழைக்க நாளைக்கு ரயிலுக்குப் போக வேண்டும். அப்பொழுது என்ன புடவை கட்டிக்கொண்டு போவது என்று தெரியவில்லை. அதுதான் முழிக்கிறேன்" என்றாள். 'பூ இவ்வளவு தானா! உன்னை யாரோ பெண் பார்க்க வருகிறார்களாக்கும் என்றல்லவா நினைத்தேன்!" என்றான் மனோஹரன். "பரிகாசம் இருக்கட்டும். நாளையிலிருந்து நீ ரொம்ப ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் தெரியுமா? உன் அறைக்கு எதிர் அறையில் தான் அவள் இருக்கப் போகிறாள். நீ உன் ரூமுக்குப் போகும் போதெல்லாம் சத்தம் போடாமல் ஜாக்கிரதையாகப் போக வேண்டும். தொண்டையைக் கிழித்துக்கொண்டு ஸினிமா பாட்டுப் பாடக்கூடாது. சிநேகிதர்களை அழைத்துக்கொண்டு போய் கலாட்டா பண்ணக் கூடாது. நீ உன் ரூமுக்குள் நுழைந்தவுடன் கதவைச்சாத்திக் கொள்ள வேண்டும். நீ கதவைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தால் அவளுக்கு கஷ்டமாயிருந்தாலும் இருக்கும்..." மனோஹரனுக்கு இதற்குமேல் தாங்க முடியவில்லை. விழுந்து விழுந்து சிரித்தான். "ஏதேது உன் சிநேகிதி வந்தால் நான் கோஷா ஸ்திரீயாக மாற வேண்டும் போலிருக்கிறதே!" என்றான். லீலாவும் சிரித்துக்கொண்டே "கேலி இருக்கட்டும். நான் சொன்னதையெல்லாம் ஜாக்கிரதையாக ஞாபகம் வைத்துக் கொள்!" என்று எச்சரித்தாள். "ராணியம்மாள் சொல்படியே" என்றான் மனோஹர். அவனுக்குத் தங்கைமேல் அசாத்தியப் பிரியம்.

மறுநாள் மாலை லீலா நீல மேக வர்ணத்தில் புடவை கட்டிக்கொண்டிருந்தாள். நல்ல நீலத்தில் வெகு நாகரீகமாகத் தைத்திருந்த ஜாக்கெட். தலையில் நீல வனஜாம்பரம். கைகளில் நீல நிறத்தில் கண்ணாடி வளையல்கள். கால்களில் அதே நிறத்தில் "ஷூஸ்" கண்ணாடி. முன் நின்று தன் சிருங்காரத்தைப் பரிசீலனை செய்து பார்த்தாள். முகத்தில் தவழ்ந்த புன்முறுவல் அவள் மனத் திருப்தியை அறிவித்தது.

ஒரு ரிக்ஷாவில் ஏறிக் கொண்டு பேனா—சிநேகிதி வஸந்தியை அழைத்து வருவதற்காக ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டாள். கையில் காகிதத்தினால் செய்த ஒரு ரோஜாப்பூ வைத்திருந்தாள். இதே மாதிரி ஒரு காகித ரோஜாப்பூ அவள் சிநேகிதியும் ரயில் ஸ்டேஷனுக்குள் வரும் போது கையில் வைத்துக்கொள்வதாக எழுதியிருந்தாள். ஸ்டேஷனில், கூட்டத்தில் இவர்கள் ஒருவருக்கொருவர் எளிதில் அடையாளம் கண்டுபிடித்துக் கொள்வதற்காக இந்த ஏற்பாடு.

லீலா ஸ்டேஷனையடைந்து பாம்பே வண்டி வந்து நிற்கும் பிளாட்பாரத்திற்குப் போனாள். அவள் மனம் அளவற்ற ஆவலுடன் திக் திக்கென்று அடித்துக்கொண்டது......மணியாகி விட்டது. பாம்பே வண்டி பெரிய சத்தம் போட்டுக் கொண்டு குப் குப் வென்று வந்தது. ஸ்டேஷனெங்கும் பரபரப்பு. சிநேகிதி வஸந்தியைத் தேடிக்கொண்டு லீலா வண்டி வண்டியாகப் பார்த்துக்கொண்டு போனாள். ஒரு வண்டியிலும் ரோஜாப் பூ வைத்திருக்கும் நவநாகரீக நங்கையைக் காணோம். ஒரு வேளை தான் ஒரு பக்கம் பார்த்துக்கொண்டிருக்கும்போது அவள், இன்னொரு பக்கம் இறங்கியிருப்பாளோ என்று நினைத்துக் கொண்டு பிளாட்பாரத்தை மேலும் கீழுமாகப் பார்த்தாள்.

இந்த சமயத்தில் 'நாங்கள் தான் மிஸ் லீலாவோ!" என்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. லீலா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் எதிரே கம்பீரத்தோற்றமுடைய ஒரு யுவன் நின்று கொண்டிருந்தான். அவன் கையிலும் ஒரு காகித் ரோஜாப்பூ இருந்தது. லீலா ஒரு நிமிஷம் திகைத்து நின்றாள். "பிறகு நீங்கள் யார்?" என்று கேட்டாள். அவன் சிரித்துக்கொண்டே "நான் தான் வஸந்தி!" என்றான். லீலா ஒன்றும் புரியாமல் "என்ன?" என்று கேட்டாள். அந்த வாலிபன் அவள் அழகை அள்ளிப் பருகுவதைப்போல் அவளையே உற்றுப்பார்த்துவிட்டு பெருமூச்சு விட்டான். லீலா, மறுபடியும் "நீங்கள் சொல்வதொன்றும் புரிய வில்லையே!" என்றுகேட்டாள். அந்த யுவன் மிகவும் வணக்கத்துடன் "மிஸ் லீலா, என்னை நீங்கள் தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நான்தான் வஸந்தி என்று பெயர் வைத்துக் கொண்டு கடிதங்கள் எழுதிவந்தேன். உங்களுக்கு நான் அனுப்பிய படம் என் தங்கையினுடையது. நான் செய்தது என்னவோ தப்புதான். ஆனால் உங்கள் கடிதங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. உண்மையைச் சொன்னால் எங்கே கடிதம் எழுதுவதை நிறுத்தி விடுவீர்களோ என்று பயந்து கொண்டு நான் வஸந்தி என்று பெண் பெயர் வைத்து எழுதிக் கொண்டு வந்தேன். இந்த சிறு பிசகிற்காக என்னை நீங்கள் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?" என்றான்.

ஆனால் லீலாவுக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. பேனா சிநேகிதி வரப் போகிறாள் வரப்போகிறாள் என்று வீட்டில் என்ன அமர்க்களப்படுத்தினாள்! அண்ணாவை வேறு, "அப்படியிருக்கவேண்டும், இப்படி நடந்து கொள்ள வேண்டும். என்றெல்லாம் சட்ட திட்டம் போட்டாள்! இப்பொழுது எல்லாம் வீண்! இவ்வளவு சிரமப்பட்டு நாஸுக்காய் ட்ரஸ் பண்ணிக்கொண்டது வீண்! உண்மை தெரிந்தால் அண்ணா வேறு கேலி பண்ணித் தீர்த்து விடுவான். லீலாவுக்குத் துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. கோபமும் துக்கமும் நெஞ்சை யடைக்க. பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தாள். அதற்குள் அந்த வாலிபன் "நாளை சாயந்திரம் உங்களை சாவகாசமாக வந்து பார்க்கிறேன்!" என்றான். லீலா பல்லை நெறித்துக்கொண்டு "உங்களை ஒருத்தரும் இங்கே அழைக்கவில்லை!" என்று சொல்லிவிட்டு திரும்பிக் கூடப் பாராமல் விர்ரென்று நடந்து போய் ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொண்டாள். அந்த வாலிபன் சிறிது வாடிய முகத்துடன் ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டான்.

லீலாவின் தாயாரும் அவள் அண்ணன் மனோஹரனும் அவள் வரவை வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். லீலா ரிக்ஷாவை விட்டு இறங்கியவுடன் "சிநேகிதி எங்கே?" என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டார்கள். லீலாவுக்கு ரொம்ப கஷ்டமாய்ப் போய்விட்டது. நடந்த சமாசாரம் ஒன்றையும் சொல்லாமல் "ஏதாவது உடம்புக்கு வந்து விட்டதோ என்னமோ, என் சிநேகிதி வரவில்லை" என்றாள். "அப்பா, கவலை தீர்ந்தது, நான் இனிமேல் சினிமாப்பாட்டுப் பாடலாமோ, இல்லையோ?" என்று மனோஹரன் கேலி பண்ண ஆரம்பித்தான். லீலா

அவனை மிகவும் பரிதாபமாகப் பார்த்தாள். அவன் கேலியை நிறுத்திக்கொண்டான்.

லீலா மாடிக்குப் போனாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்தது. வாடகைக்கு விடுவதாக இருந்த அறையில் தான் ஸென்ட்ரல் ஸ்டேஷனில் சந்தித்த அதே வாலிபன் கால்மேல் கால் போட்டுக்கொண்டு ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு பேப்பர் படித்துக்கொண்டிருந்தான். அவன் இவளைப் பார்த்தவுடன் புன்னகை புரிந்து விட்டு பேப்பரால் முகத்தை மூடிக்கொண்டான். ஆனால் அவன் தோள்கள் மேலும் கீழும் ஆடியதிலிருந்து அவன் குலுங்கக் குலுங்கச் சிரித்தானென்று தெரிய வந்தது.

லீலா விடுவிடுவென்று கீழே இறங்கினாள். அம்மாவிடம் போய் "அது யாரது மாடியறையில் இருக்கிறது?" என்று இரைந்தாள். "ஓ அந்தப் பையனா, அவன் பாம்பேலே டாக்டராம். இந்த ஊருக்கு எதோ ஸ்பெஷலாய்ப் படிக்கிறதற்கு வந்திருக்கிறானாம். ஒரு வாரம்தான் இருப்பானாம். இந்த ஒரு வாரத்திற்கே பதினைந்து ரூபாய் கொடுக்கிறேன் என்று சொன்னான. ரொம்பவும் வினயமாகவும் மரியாதையாகவும் பேசுகிறான். நல்ல பிள்ளையாக இருக்கிறான்." என்றாள். லீலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "சித்த நாழிக்குள் ரொம்ப மரியாதையெல்லாம் கண்டுவிட்டாயாக்கும். முன் பின் தெரியாதவனை சட்டென்று குடி வைத்து விட்டாயே. என் சிநேகிதி இன்றைக்கு வந்திருந்தால் எங்கே இருப்பாள்?" என்று கத்தினாள். "என்னத்திற்கு இப்படிக் கத்துகிறாய்? இந்தப் பிள்ளை இன்னும் ஒரு வாரம தானே இருக்கப் போகிறான். உன் சிநேகிதி வந்தால் நம்மோடு ஒரு வாரம் வைத்துக் கொண்டிருந்துவிட்டு பிறகு தனி அறை கொடுத்துவிடலாமென்றுதான் இவனுக்குச் சரியென்று சொன்னேன். பாவம், இவனுக்கு உடம்புக்கூட சரியாயில்லையாம். கிளப்பில் சாப்பிட்டால் உடம்புக்கு ஒத்துக்காகதாம். தன்னை ஒரு பிள்ளைமாதிரி நினைத்துக் கொண்டு நாம் சாப்பிடும் சாதத்தில் தனக்கும் கொஞ்சம் போட்டுவிட வேண்டும் என்று கெஞ்சினான். பாவமாயிருந்தது. ஆகட்டும் என்று சொல்லி விட்டேன்" என்றாள் லீலாவின் தாயார்; லீலாவுக்குக் கோபம் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. "என்ன அநியாயம்! இதென்ன கிளப்பென்று நினைத்துக் கொண்டானே! சாதம் போடு என்று கேட்பதற்கு அவனுக்கு என்ன துணிச்சல்! என்ன தைரியம்! நீயும் சரியென்று சொல்லி விட்டாயே. அதைச் சொல்லு! கஷ்டம் கஷ்டம்!" என்று இரைந்தாள். இவள் இப்படி எள்ளுருண்டை மாதிரி எதற்காகக் குதிக்கிறாள் என்று ஆச்சரியப்பட்டாள் அவள் தாயார். ரயில்வே ஸ்டேஷனில் நடந்த விஷயம், பாவம், அவளுக்கு எப்படித் தெரியும்!

இந்தத் துணிச்சலான வாலிபனை எப்படியாவது வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டாள் லீலா. ஸ்டேஷனில் முதலில் சந்தித்தபொழுது வஸந்தகுமார் (அதுதான் அந்த வாலிபன்பெயர்) தன்னை விழுங்குபவன் போல் பெருமூச்சு விட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது. ஆகையினால் தன்னிடம் அவன் எப்படியும் "ஓங்கமிங்க" என்று வருவான். அப்பொழுது ஒரு சரியான "டோஸ்" கொடுத்து விரட்டி விடலாம் என்று நினைத்துக்கொண்டாள். "ஓங்கமிங்க" என்று வருவதற்கு அவனுக்கு எவ்வளவோ சந்தர்ப்பங்களும் கொடுத்தாள். ஆனால் வஸந்தகுமார் அந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கவேயில்லை. அவள் நின்ற இடத்தில் கூட அவன் நிற்க மாட்டான்.

லீலா இப்பொழுது வேறு வழிகளைப்பற்றித் தீவிரமாய் ஆலோசிக்கத் தொடங்கினாள்.

இரவு பத்து மணியிருக்கும். எல்லோரும் படுக்கைக்குப்போகும் சமயம் லீலா மனோஹரன் அறைக்குப் போனாள். அவன் அப்பொழுதுதான் படுக்கை விரித்துக்கொண்டிருந்தான். லீலா அவனிடம் போய் "மனோ, எனக்குத் தூக்கமே வரலை, ஏதாவதுஸினிமாப்பாட்டு ரெண்டு நல்லதா பாடேன் கேட்கிறேன்!" என்றாள். மனோஹர் அவளை கொட்டை கொட்டையாக விழித்துப் பார்த்தான். தான் பாடக்கிளம்பினால் காதை பொத்திக்கொண்டு ஓடிப்போகிறவள் இன்றைக்குப் பத்து மணிக்குமேல் வலியவந்து பாட்டுப்பாடு என்றால் அவனுக்கு ஆச்சரியமாயிருக்காதா? "என்னடா முழிக்கிறே! வேண்டாம் வேண்டாமென்றால் கத்துவாய், இன்றைக்கு நானே வந்து பாடு என்றால் ரொம்ப ராங்கி பண்ணிக்கொள்கிறாயே! "என்றாள் லீலா" ராங்கி ஒன்றுமில்லை லீலா, எதிர்த்த அறையில் வஸந்தகுமார் ஏதோ பரீக்ஷைக்காகப் படித்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுதுபத்து மணிக்கு மேல் திடீரென்று தான் பாட ஆரம்பித்தால் அவர் சண்டைக்கு வரமாட்டாரா? நீயே சொல்லு!" என்றான் அவன். லீலா ரொம்ப கோபத்துடன் 'நம்ப வீட்டில் நாம் பாடுவதற்கு யாருடா சண்டைக்கு வருகிறது, நீ ஹார்மோனியம் வாசித்துக் கொண்டு ஜோராய்ப் பாடு. நான் வராந்தாவில் நின்றுகொண்டு ஆனந்தமாய்க் கேட்கிறேன்! சண்டைக்கு வருகிறவர்களைப் பார்க்கலாம்!" என்று சத்தம் போட்டு சொல்லிவிட்டு வராந்தாவிற்குப் போனாள். எதிர்த்த அறையிலிருப்பவர் சண்டைக்கு வரமாட்டாரா என்று தானே அவள் ஜபம் செய்து கொண்டிருந்தாள்!

மனோஹர் ஹார்மோனியம் வாசித்துக்கொண்டு பாட (?) ஆரம்பித்தான். லீலா கண்ணை மூடிக்கொண்டு மிகுந்த பொறுமையுடன் பாட்டை ரஸித்துக் கொண்டிருந்தாள். ஐந்து நிமிஷம் கழித்து இன்னொரு கர்ணகடூரமான குரல் மனோஹரன் குரலுடன் சேர்ந்து கேட்டது! லீலா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்: உள்ளே மனோஹரனும் வஸந்த குமாரரும் ஒரு 'டூவெட்' பாட்டை வெகு ஆனந்தமாக மாறிமாறி பாடிக்கொண்டிருந்தார்கள்! லீலாவால் ஸஹிக்க முடியவேயில்லை: விழுந்தடித்துக்கொண்டு கீழே ஓடினாள். அவளுக்கு ஒரே எரிச்சலாய் வந்தது.

மறுநாள் காலை மனோஹரனும் வஸந்தகுமாரும் ஒன்றாகக் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். லீலாவின் தாயார் அவர்களுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். லீலா மெதுவாக அவள் பக்கம் போய் "அம்மா, உனக்கு ஆபரேஷன் பண்ணினாரே அந்த டாக்டரை நான் நேற்று பார்த்தேன். நீ உடம்பு ஒன்றுமில்லாமலிருக்கிறாயா?" என்று அவர் விசாரித்தார் என்று புளுகினாள். வஸந்தகுமார் "ஆபரேஷனா? உங்களுக்கா?" என்று கேட்டான். அவ்வளவுதான் லீலாவின் தாயார் தன் ஆபரேஷன் புராணத்தை ஆரம்பித்து விட்டாள். மனோஹர்மெதுவாக நழுவினான். ஆபரேஷனைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் தன் தாயார் இப்போதைக்கு ஓயமாட்டாள் என்று லீலாவுக்கு நன்றாகத் தெரியும். இந்த ஆபரேஷன் வர்ணனையிலிருந்து தப்ப வழியில்லாமல் வஸந்தகுமார் திண்டாடட்டும் என்று தான் அவள் தன் தாயாருக்கு ஆபரேஷனைப் பற்றி ஞாபகப்படுத்தினாள்.

ஆனால் வஸந்தகுமார் அவள் சொல்வதையெல்லாம் ரொம்ப கவனத்துடன் கேட்டான். "ஆஹா! ஆச்சரியமான ஆபரேஷன். இன்னொருதரம் தயவு செய்து முதலிலிருந்து சொல்லுங்கள்!" என்று மறுபடியும் சொல்லச் சொல்லி கேட்டுக் கொண்டிருந்தான்! லீலாவின் தாயாருக்கு அவன்மேல் ரொம்பப் பிரியம் ஏற்பட்டுவிட்டது. 'பெரியவர்களின் வார்த்தையை, எவ்வளவு கவனமாகக் கேட்கிறான்! தங்கமான பிள்ளை. பார்ப்பதற்கும் லக்ஷணமாயிருக்கிறான். பாம்பேயில் நல்ல வேலையிலிருக்கிறான். என்ன, லீலா, நீ என்ன சொல்கிறாய்?" என்றாள் அவள் லீலாவைப்பார்த்து. லீலாவோ முகத்தைக் கோணிக்கொண்டாள்.

அன்று இரவு பதினொரு மணி இருக்கும். வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். லீலாவையும் வஸந்தகுமாரையும் தவிர வஸந்த குமார் ஏதோ படித்துக் கொண்டிருந்தான். லீலா அவனை மட்டந்தட்ட வழியில்லையா என்று ஏங்கிக்கொண்டிருந்தாள். அவளுக்கு படுக்கையே கொள்ளவில்லை. மெள்ள எழுந்திருந்து மாடிப்பக்கம்சென்றாள். வஸந்தகுமார் ஒரு பெரிய புத்தகத்தை வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருந்தான். லீலா மெதுவாகக் கீழே இறங்கி மெயின் ஸ்விட்சை 'ஆப்' பண்ணி அவன் ரூமிலிருந்து விளக்கை அணைத்துவிட்டாள். பிறகு பூனைபோல்நடந்து போய் அவன அறைப் பக்கம் நின்று கொண்டாள். இருட்டில் அவன் தட்டுத்தடுமாறும் சத்தம் அவளுக்கு நன்றாய்க் கேட்டது. அவளுக்கு ரொம்ப சந்தோஷம்! ஆனால் திடீரென்று அவன் எதன் மேலேயோ பலமாக முட்டிக்கொண்டதுபோல் சத்தம் கேட்டது. பிறகு இரண்டு விநாடிகளுக்கு முனகல் சப்தம் கேட்டது. அப்புறம் ஒரே நிசப்தம்.

லீலாவுக்கு இப்பொழுது ஒரே திகிலாய்ப்போய்விட்டது. 'இருட்டில் எதன் மேலேயாவது பலமாக மோதிக்கொண்டு மூர்ச்சை போட்டுவிட்டாரோ! மோதிக்கொண்டதில் எங்காவது பெரிய காயம் பட்டு ரத்தம் கொட்டிக் கொண்டிருக்கிறதோ என்னவோ? உடனே ஏதாவது செய்யாவிட்டால் ஏதாவது அபாயம் நேரிட்டுவிடுமோ, என்னமோ!" இப்படியெல்லாம் லீலாவின் எண்ணங்கள் தாறுமாறாய் ஓடின. அவள் உடம்பெல்லாம் ஒரே வியர்வையாய் வியர்த்தது. என்னசெய்வதென்றறியாமல் கைகளைப் பிசைந்து கொண்டாள். 'அம்மாவை எழுப்பலாமா? எழுப்பினாலும் தன் அசட்டுக் காரியத்தை எப்படி சொல்வது? உள்ளே இருக்கிறவர் பிழைத்திருக்கிறாரா, இல்லையா என்றுகூடத் தெரியவில்லையே!' லீலா கொஞ்சநேரம் விசித்து விசித்து அழுதாள். வஸந்தகுமாருக்கு ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே யென்று ஒரு தெய்வம் விடாமல் வேண்டிக்கொண்டாள். அவள் பிரார்த்தனை தெய்வத்தின் காதில் விழுந்ததோ என்னவோ. உள்ளே வஸந்தகுமார் முனகும் சப்தம் கேட்டது. ஆசாமி உயிரோடுதானிருக்கிறான் என்று தெரிந்ததும் லீலாவுக்குப் பிராணன் வந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளே அவன் நடமாடும் சத்தம் கேட்டது, லீலாவின் பயம் பறந்து, தைரியம் வந்தது.

கீழே இறங்கிப்போய் படுக்கையில் படுத்துக்கொண்டு அவள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினாள். தான் அசட்டுத்தனமாக விளக்கைக் கப்போக, பாவம், வஸந்த குமார் எதன்மேல் மோதிக்கொண்டாரோ! என்று கவலைப்பட்டாள் விளக்கைப்போட்டு அவன் அறையில் என்ன செய்கிறான் என்று பார்க்க அவளுக்கு ஆவல். ஆனால் தன் தாயார் விழித்துக்கொண்டு தான்மாடிக்குப் போவதைப் பார்த்துவிட்டால் என்ன செய்வதென்று பயந்துகொண்டு பேசாமலிருந்துவிட்டாள். தான் இதுவரையில் செய்ததெல்லாம் ரொம்ப ரொம்ப அசட்டுக்காரியம் என்று அவளுக்குத் தோன்றிற்று. "அவர் மேல் தன் கோபம் கொள்ள அவரென்ன அப்படி தப்பு செய்துவிட்டார்? வஸந்தகுமார் என்பதற்குப பதிலாக வஸந்தி என்று பெயர் வைத்துக்கொண்டு கடிதங்கள் எழுதிவந்தார். அவ்வளவு தானே! அதற்குக் கூடத் தான் என்னை மிகவும் வணக்கமாய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஆஹா! அந்தக் கடிதங்கள் தான் எவ்வளவு ஸ்வாரஸ்யமாக விருந்தன. ஹூம்... அவருக்குத் தான் என்ன? பார்ப்பதற்கு அழகாயிருக்கிறார். எல்லோரிடமும் வினயமாகவும்

பிரியமாகவும் நடந்து கொள்கிறார். இவ்வளவு நல்லவரிடம் போய் நான் என் அசட்டுத்தனமெல்லாம் காட்டி விட்டேன்! ஹூம்—" இதே மாதிரி எண்ணங்களில் அன்று இரவு கழிந்தது.

மறுநாள் பொழுது விடிந்ததோ இல்லையோ, லீலா வஸந்த குமாரின் அறைக்கு எதிரே போய் நின்றுகொண்டு அவன் கதவை எப்போது திறக்கப்போகிறானே என்று ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் வஸந்தகுமார் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான் அவன் தலையில் ஒரு பெரிய கட்டு கட்டியிருந்தது. லீலா ஏதோ கேட்பதற்காக வாயெடுத்தாள், ஆனால் வஸந்த குமாரே அதற்குள் "நேற்று ராத்திரி தான் மும்முரமாகப் படித்துக்கொண்டிருந்ததில் மணி ஆனதே தெரியவில்லை, ரொம்ப நாழிகை ஆகி விட்டது என்று தெரிந்திருந்தால். தானே விளக்கணைத்திருப்பேன். மெனக்கட்டு கீழே போய் விளக்கணைக்கும் சிரமத்தை தங்களுக்குக் கொடுத்திருக்கமாட்டேன்! மன்னிக்கவேண்டும்! "என்றான் சிரித்துக்கொண்டே. லீலாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "நான் தான் விளக்கணைத்தேன் என்று உங்களுக்கு எப்படித்தெரியும்?" என்று கேட்டாள் "தெரியாமலென்ன என் அறையில் ஒரு கண்ணாடி மாட்டியிருக்கிற தல்லவா! நீங்கள் என் அறைப் பக்கம் வந்தது அதில் நன்றாகத்தெரிந்தது. பிறகு நீங்கள் இறங்கிப் போய் மெயின் ஸ்விட்சை 'ஆப்' பண்ணின சத்தம் எனக்கு நன்றாகக் கேட்டது" என்றான் அவன். லீலா மிகவும் வணக்கமாக "தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். இருட்டில் உங்களுக்கு ஏதாவது காயம் 'பட்டதோ?" என்று கேட்டாள். "ஓ அதுவா ... விளக்கணைந்து போனவுடன் படுத்துக்கொள்ளலாம் என்று போனேன், இருட்டில் கட்டில் முனையில்போய் மோதிக்கொண்டேன். கொஞ்சம் காயம்பட்டு ரத்தம் வந்தது. பிறகு எனக்கு ஒன்றுமே தெரியாது. மூர்ச்சைபோட்டு விழுந்து விட்டேன் போலிருக்கிறது. எனக்கு விழிப்பு வந்தவுடன் கையிலகப்பட்ட துணியை எடுத்து காயத்திற்கு பாண்டேஜ கட்டிக் கொண்டேன் நல்ல வேளையாக கட்டில் முனையில் முட்டிக்கொண்டேன். அங்கே ஒரு ஆணி இருக்கிறது. அதில் முட்டிக்கொண்டிருந்தால் கண்ணே போயிருக்கும்" என்றான். லீலாவுக்குக் கண்களில்ஜலம் வந்து விட்டது. "நான் தெரியாமல் செய்து விட்டேன் தயவு செய்து என்னை மன்னியுங்கள். இதை அம்மா, அண்ணா ஒருவரிடமும் சொல்லக் கூடாது. அவர்கள் தலையில் என்ன கட்டு என்று கேட்டால் ஏதாவது சமாதானம் சொல்லி விடுங்கள். உண்மையைச் சொல்லிவிடாதீர்கள்! உங்களுக்கு ரொம்ப புண்யம் உண்டு!" என்று கெஞ்சினாள். வஸந்தகுமார் சிரித்துக்கொண்டே சரியென்று தலையாட்டினான்.

தலையில் பட்ட அடியின் அதிர்ச்சியால்வஸந்த குமாருக்கு ஜுரம் வந்தது. லீலாவும் அவள் தாயாரும் அவனுக்கு சைத்யோபசாரம் செய்தார்கள். முக்கியமாக லீலா விழுந்து விழுந்து உபசாரம் செய்தாள். 2, 3 நாள் ஜுரம் அடித்தது. இதற்குள் லீலா வஸந்தகுமாருடன் எவ்வளவோ சிநேகிதமாகி விட்டாள். அவனுடன் பேசுவதில் லீலாவுக்கு ஒரு தனி ஆனந்தம் ஏற்பட்டது. அவன் ரொம்ப வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவான்: லீலாவுக்குச் சிரித்து சிரித்து வயிறு புண் ஆகிவிடும். அவனுடன் பேசுவதற்கு எப்பொழுது சமயம் வாய்க்கும் என்று எதிர்பார்த்திருப்பாள். அல்லும் பகலும் அவளுக்கு அவன் நினைவாகவே ஆகிவிட்டது. தன் மனப் போக்கைக் கண்டு அவளே ஆச்சரியப்பட்டுக் கொண்டாள்.

பௌர்ணமி; லீலா மாடி வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள். பூர்ண சந்திரனின் வெள்ளிக் கிரணங்கள் அவள் பெரு மூச்சு விடுவதை நன்றாகக் காட்டின. ஆமாம்! அவள் வஸந்தகுமாரை நினைத்து நினைத்துத் தான் அப்படி பெருமூச்சு விட்டாள். அவனுடைய மனநிலையை அவளால் அறிய முடியவேயில்லை. அவளுடன் அவன் வெகு சாதாரணமாகப் பழகினான். மிகவும் அன்பாகவும், பிரியமாகவும் மரியாதையாகவும் பேசினான். ஆனால் அதற்கு மேல் அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஒரு வேளை அவனுக்குக் கலியாணமாகியிருந்தால்... அல்லது நிச்சயமாகியிருந்தால்...... இப்படியெல்லாம் நினைத்த போது அவளுக்குப் பகீர் என்றது.

"மிஸ் லீலா, எனக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டதே உனக்குத் தெரியுமோ? இதோ, பத்திரிகைகூட அச்சடித்தாகிவிட்டதுபார். நீ என்கலியாணத்திற்கு அவசியம் வர வேண்டும்! என்ன?" என்று சொல்லிக் கொண்டே வஸந்தகுமார் அவள் பக்கம் வந்தான்: லீலா இன்பக் கனவுகள் மனக் கோட்டைகள் எல்லாம் ஒரே விநாடியில் தகர்ந்து போயின. கடைசியில் தான் எண்ணியது சரியாய்ப் போயிற்றே என்று நினைத்த போது அவளுக்குத் துக்கம் நெஞ்சைப் பிளந்தது. இருந்தாலும் ரொம்ப சிரமப்பட்டு முகத்தில் புன்னகையை வர வழைத்துக் கொண்டு "ஓகோ, உங்களுக்குக் கலியாணமா? ரொம்ப சந்தோஷம்! அவசியம் வருகிறேன்!" என்றாள். "கலியாணப் பத்திரிகையைப் படிக்க வேண்டாமா? படித்துப் பார்" என்று சொல்லிக் கொண்டே பத்திரிகையை அவள்கையில் வைத்து விட்டு அவளுக்கு ரொம்ப பக்கத்தில் போய் நின்று கொண்டான் வஸந்த குமார். லீலாவுக்குக் கோபம் கோபமாய் வந்தது. கைகள் நடு நடுங்க பத்திரிகையைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். அதில் மணமகன் பெயர் வஸந்தகுமார், மணமகள் பெயர் லீலா என்று போட்டிருந்தது! கீழே அவள் சகோதரன் பெயரும் போட்டிருந்தது! ஆமாம். அது சந்தேகமில்லாமல் அவளுடைய சொந்தக் கலியாணப் பத்திரிகைதான்! லீலாவின் ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவேயில்லை. அவள் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. இருந்தாலும் அவள் வஸந்த குமாரரைப் பார்த்து ரொம்ப கோபத்துடன். "இதென்ன அநியாயம்! பெரியவர்களை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? பத்திரிகை அச்சடித்துவிட்டால் எல்லாம் முடிந்துவிட்டது என்று அர்த்தமா?" என்று கேட்டாள். வஸந்தகுமார் புன்முறுவலுடன் "அவர்களையெல்லாம் கேட்டாய் விட்டது. உங்கம்மாவும் அண்ணாவும் நீ சரியென்றால் தங்களுக்கு ஒரு ஆக்ஷேபனையுமில்லை என்று சொல்லி விட்டார்கள். அதனால் தான் நான் அவ்வளவு தைரியமாக பத்திரிகை அச்சடித்தேன்!" என்றான். லீலாவுக்கு இப்பொழுது கொஞ்சம் ரோஷமாயிருந்தது. "ஓகோ! உங்களுக்கு அவ்வளவு தைரியமா? நான் இப்பொழுது கலியாணம் செய்து கொள்ளமாட்டேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வீர்களாம்?" என்றாள். வஸந்தகுமார் அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு "எங்கே, சொல்லேன் பார்ப்போம்!" என்றான். லீலா தன் பிரேமை நிறைந்த கண்களால் அவனுக்கு பதிலளித்தாள்.

மறுநாள் காலை வஸந்தகுமார் தன் தாயார் தகப்பனருக்கு இந்த சுப சமாசாரத்தைத் தெரிவிப்பதற்காக பம்பாய்க்குப் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தான்: ரயிலேறியாகி விட்டது. அவன் தலையில் இன்னும் கட்டு கட்டியிருந்தது; பலத்த காயமோ என்னமோ? வழியனுப்புவதற்கு லீலா ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள். ரயில் புறப்பட நேரமாயிற்று. லீலா வஸந்தகுமாரைத். தலையில் பட்ட காயத்தை ஜாக்கிரதையாகப் பார்த்து, மருந்து தவறாமல் போட்டுக் கொள்ளும்படி புத்திமதி கூறினாள். அவன் சரி சரி யென்று தலையாட்டினான். ஆனால் ரயில் ஸ்டேஷனை விட்டு கொஞ்சதூரம் போனதோ இல்லையோ, வஸந்த குமார் ஒரு விசித்திரமான காரியம் செய்தான். தலையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்து ஜன்னல் வழியாக விட்டெறிந்தான். ஆமாம்! இனிமேல் எதற்காக அது வேண்டும்! அந்தக் கட்டு, ஜுரம் எல்லாம் லீலாவின் அனுதாபத்தையும் அன்பையும் பெறுவதற்காக அவன் போட்ட வேஷம் தானே!

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

உங்களுக்கு

மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்

உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்:

சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.

154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

உமது குழந்தை ஈரல் குலைகட்டி பெருத்திருந்தால்

எவ்வித வைத்திய முறையினாலும் குணப்படுத்த முடியாதிருந்த இக்குலைநோய், ஓர் அற்புத ஆராய்ச்சி முறையினால் வைத்தியத் திறந்த கட்டுப்பட்டு, சென்ற 36 வருஷங்களாக பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை காப்பாற்றியுள்ளது. இந்தியா பூராவிலுள்ள வைத்திய நிபுணர்களால் போற்றப்பட்டது.

ஜம்மியின்

லிவர் க்யூர்

உபயோகியுங்கள்.

ஈரல் குலைகட்டி முதலியவைகளுக்கு இது ஒரு அற்புத நிவாரணி.

எல்லா மருந்துஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ், மைலாபூர் — மதராஸ்.

சப் ஆபீஸ்: கும்பகோணம். பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சினாப்பள்ளி, விஜயநகரம்.

எறும்பின் வாழ்க்கை விசித்திரம்

எறும்புகளில் சுமார் ஆயிரம் விதங்கள் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு வகுப்புக்கும் பழக்க வழக்கங்கள் வெவ்வேறு விதமானது. நம் தேசத்தில் சுமார் முப்பது விதங்கள் உள. எறும்பின் சராசரி ஆயுள் ஏழு வருஷங்கள் முதல் பதினைந்து வருஷங்கள் வரை சொல்லலாம். வேலை செய்யும் எறும்புகள் சுமார் ஏழு அல்லது எட்டு வருஷங்கள் வரை ஜீவித்திருக்கும். 'ராணி' எறும்புகள் சுமார் பதினைந்து வருஷங்கள் வரை உயிருடன் இருக்கின்றன.

ஒரு எறும்புக் கூட்டத்தில் சின்ன எறும்புகள், ஆண் எறும்புகள், வேலைக்கார எறும்புகள், 'ராணி' எறும்புகள் முதலியவை இருக்கின்றன. 'ராணி' எறும்புகள் ஒன்றோ அல்லது அதற்கு மேம்பட்டோ இருக்கின்றன. ஆண் எறும்புகள் வேலை செய்வதில்லை. பெண் எறும்புகள் சகலமான வேலைகளும் செய்கின்றன. அவையே 'வேலைக்கார' எறும்புகள் எனப்படும்.

ராணி எறும்புகளும் வேலை செய்வதில்லை. அது ஒரு தடவை ஆண் எறும்புடன் கூடிய பிறகு பறப்பதில்லை. தன் இறக்கைகளை உதிர்த்து விட்டுப் புற்றுக்குள்ளேயே இருக்கும். பிறகு தான் அது ராணியாவது. வேலைக்கார எறும்புகளும் ஆண் எறும்புகளும் அடிக்கடி ராணி எறும்புகளைப் பார்த்து மகிழும். அவளைப்பார்ப்பதும் அவைகளுக்கு ஓர் சந்தோஷம். வேலைக்கார எறும்புகள் அவ்வப்பொழுது முட்டையிடும் சமயங்களைத்தவிர, எப்போதும் வேலை செய்துகொண்டே இருக்கும். சிறிய எறும்புகள் வேலை செய்வதற்கு வெளியே வரா. புற்றுக்குள்ளேயே சுத்தம் செய்வது, எறும்பு முட்டைகளைக்காப்பது, எறும்புக் குஞ்சுகளைப் பராமரிப்பது, முதலான வேலைகளைச் செய்யும். எறும்புக் குஞ்சுகள் வயதுக் கிரமமாகப் பிரிக்கப்பட்டு வளர்க்கப்படும். எறும்புப் புற்றுக்குள் பார்க்க நேர்ந்தால், ஒரு நேர்த்தியான பள்ளிக்கூடம் போலவே தோற்றமளிக்கும்.

வித்தியாசத்தின் தன்மை

எறும்புகளுள் ஒன்றுக்கொன்று வித்தியாசம் உண்டு. ஆனால் இது அநேகமாய் அவைகளின் வகுப்பையாவது வயதையாவது பொறுத்ததல்ல. அவை செய்யும் வேலையைப் பொறுத்ததே. சில எறும்புகள் போர் வீரர்'களாக இருக்கின்றன. இவைகளுக்கு முக்கியமாகப் பெரிய தலைகளும் உறுதியான தாடைகளும் காணப்படும். இவை ஊர்ந்து போவதைப் பார்த்தால் ஒரு படை அணி வகுத்துச் செல்வதைப் போல் இருக்கும். அவ்வளவு ஒழுங்கு! இந்த எறும்புப் படை அணி வகுத்துச் செல்லும்போது. சில, வரிசையில் போகாமல் சேனபதி போல் பார்வையிட்டுக்கொண்டு பக்கத்தில் செல்லும்.

'ராணி' எறும்புகளே தாயெறும்புகளாகவும் இருக்கின்றன.

ஒரு சமயம் ஒரு எறும்புக்கூட்டத்தைபொதுக்காட்சிஒன்றுக்கு எடுத்துச் செல்லுகையில் ராணி எறும்பு நசுக்கப்பட்டு இறந்தது. உடனே மற்ற எறும்புகள் அதைச் சுற்றிச் சுற்றி வந்து தங்கள் துக்கத்தை யாற்றிவிட்டுப் பிறகு அதைத் தங்கள் புற்றுக்கு எடுத்துச் சென்றன. அங்கேயே ஒரு வாரம் வரையில் இறந்த தங்கள் தலைவியைச் சுற்றி உட்கார்ந்திருந்தன ஒருக்கால் தங்கள் ராணியின் சென்ற உயிர் மீண்டும் வரும் என்ற நிராசை போலும்!

அவற்றின் சுபாவம்

ஒரு எறும்புக் கூட்டத்தில் சுமார் ஆயிரக்கணக்கான எறும்புகள் உண்டு. ஒரு சிலவற்றில் கிட்டத்தட்ட 5,00,000 எறும்புகள் கூட இருக்கின்றனவாம்.

எறும்புகள் ஒற்றுமைக்குப் பெயர் போனவை. ஒரு கூட்டத்தைச் சார்ந்த எறும்புகள் என்ன நேரிடினும் ஒன்றோடொன்று சண்டையிடாது. அற்ப சமாசாரங்களில் பகையை வளர்க்கும் மனித வர்க்கத்துக்கோர் அரிய பாடம்; ஆனால் விரோத பாவத்தில் அவை மனிதனுக்குச் சற்றும் தாழ்ந்தவையல்ல. ஒரே இனத்தைச் சேர்ந்ததானாலும், வேறு கூட்டத்தைச் சார்ந்த எறும்பானால், ஒன்றையொன்று உக்கிரகமாகத் தாக்கும். இதனால் எறும்புகள் ஒன்றையொன்று அடையாளமாய்த் தெரிந்துகொள்கின்றனவென்பது புலப்படுகிறது. இதற்கு ஒரு பரிக்ஷை வைக்கப்பட்டது. ஒரு புற்றை ஒரு வருஷத்திற்கு மேல் இரண்டாகத் தடுத்து வைக்கப்பட்டது. பிறகு தடுப்பை நீக்கின பின்பும், இரு பக்கத்தில் இருந்த எறும்புகளும் அடையாளங்கொண்டு தன் இனத்துடன் சேர்ந்தன. இதே பரிக்ஷையை வேறொரு கூட்டத்தின் எறும்புகளைக் கொண்டு செய்ததில், ஒரு வருஷ காலத்திற்குப் பிறகும், ஒன்றையொன்று தெரிந்து கொண்டு தாக்க ஆரம்பித்தன.

இவை ஒன்றையொன்று அறிந்துகொள்வதற்கு காரணம் இவைகளுக்கிடையில் ஏதாவது குறிச் சொல் வழங்கலாமென்று உத்தேசிக்கப்பட்டது. எறும்புகள் ஒரு சாரியில் போய்க் கொண்டிருக்கையில், அதே சாரியில் வரும் எறும்புகளுடன் ஏதோ பேசுவதுபோல் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். இதுதான் அவைகளின் குறிச் சொல்லாயிருக்கலாமென்று ஊகிக்கப்பட்டது. ஆனால் மற்றொரு பரிக்ஷையில் இதுவல்லவென்று தெரிய வந்தது. போதை கொடுத்ததில், அது அவைகளின் உயிருக்கே அபத்தாய் முடிந்தது. மற்றுமோர் சோதனை நடத்தப்பட்டது. சில எறும்புகளை ஒரு கூட்டத்தினின்றும், வேறு சில எறும்புகளை மற்றுமோர் கூட்டத்தினின்றும் எடுத்து போதை தரும் திராவகத்தில் போட்டேன். ஒவ்வொரு கூட்டத்தின் எறும்புகளுக்கும் அடையாளம் செய்திருந்தேன். அவை ஆழ்ந்த மயக்கமடைந்தன. பிறகு அவைகளை எடுத்து ஒரு பலகையில் போட்டு சுற்றியிருந்த பள்ளத்தில் தண்ணீர் நிரப்பிவிட்டேன். இது எறும்பு புற்றுக்கருகில் வைக்கப்பட்டிருந்தது. சிறிது நேரத்தில் முதற் கூட்டத்தைச் சேர்ந்த சில எறும்புகள் வந்து மயக்கமடைந்திருந்த எறும்புகளை அருகில் சென்று பார்த்துத் தன் கூட்டாளிகளைமட்டும் தூக்கிக் கொண்டு தங்கள் புற்றுக்குள் சென்று விட்டன. வேறொரு கூட்டத்தைச் சேர்ந்த எறும்புகளை (மயக்க மடைந்திருந்தவை)த் தூக்கிச்சூழ்ந்திருந்த தண்ணீரில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டன. இதிலிருந்து அவை ஒன்றையொன்று அறிவதற்குக் குறிச்சொல் ஏதும் அவசியமில்லையென்று தெரிகிறது.

உயர்தர ஒற்றுமை

எறும்புகள் சிரமதசையிலும் ஒன்றுக்கொன்று உபகாரம் செய்துகொள்ளும். சில மிருகங்கள் (ஓநாய் முதலியன) தன் கூட்டாளி காயமடைந்தால், தன் இனத்துடன் சேர்த்துக் கொள்ளா. ஆனால் எறும்புகள் தங்கள் இனத்தார் காயமடைந்தால், பத்திரமாக அவைகட்குச் சிகிச்சை செய்யும்: அவை ஒற்றுமையிலிருந்து சிறிதேனும் வழுவுவதில்லை.

ஒரு தடவை, ஒரு எறும்பு புற்றுக்கு வெளியே சிறிது தூரத்தில் காயமடைந்து கிடந்தது. மற்றொரு எறும்பு ஆகாரம் தேடுவதற்கு வெளியில் வந்தது. தன் கூட்டாளியின் நிலையைப்பார்த்து அதனிடம் விரைந்து சென்று அதைத்தன் புற்றுக்குள்ளெடுத்துச் சென்று சிகிச்சை செய்தது. சில நாட்கள்வரை காயமடைந்த எறும்பு வெளியே வரவில்லை. ஒருநாள் அது வெளியே வந்தபோது மற்றொருகூட்டத்தைச்சேர்ந்த எறும்பொன்று இதைத் தாக்கிவிட்டது. இது அப்பால் செல்லக்கூடாமல் கிடந்தது. இதைத் தாண்டிப் பல எறும்புகள் சென்றன. ஒன்றும் உதவிக்கு வரவில்லை. இதன் கூட்டத்தைச் சேர்ந்தவொரு எறும்பு வந்து இதைத் தூக்கிதன் புற்றுக்குள் சென்றது.

ஒரு பரிக்ஷை

ஒரு எறும்பு எங்கேயாவது ஆகாரத்தைக் கண்டால், வெகு சீக்கிரத்தில் அவ்விடத்தில் பல எறும்புகள் கூடி விடுவதைப் பார்க்கிறோம். அவை தானே அங்கு வருகின்றனவா, அல்லது இது போய் அழைத்து வருகிறதா? இதற்கும் ஓர் சோதனை நடத்தப்பட்டது. ஒரு நாள் அன்று மழைக் காலமானதால், எல்லா எறும்புகளும் புற்றுக்குள்ளே இருந்தன. ஒன்று மட்டும் ஆகாரம் தேடும் வகையில் புற்றுக்கு வெளியே சுமார் ஆறடி தூரத்தில் திரிந்துகொண்டிருந்தது ஓர் இறந்துபோன வீட்டிற்பூச்சியை ஒரு மரத்துண்டில் ஒட்டிவைத்தேன். எறும்பின் கண்களில் இது பட்டவுடன் இதன் அருகில் வந்து எடுத்துப்போக சுமார் இருபது நிமிஷங்கள் பலவாறு முயற்சித்தும் முடியவில்லை. சுற்றிச் சுற்றி வந்தது. அங்குமிங்கும் அலைந்து விட்டு மீண்டும் இரையினிடத்தில் வந்து முயற்சித்தது; பலனில்லை. உடனே அது தன் புற்றை நோக்கி விரைந்து சென்றது. சில விநாடிகளில் பத்து அல்லது பதினைந்து எறும்புகள் முதற்சென்ற எறும்பைப் பின்பற்றி ஆகாரத்தை நோக்கிவந்தன. எல்லாம் ஆகாரத்தைத் தூக்கிக்கொண்டு செல்ல, முதலெறும்பு மட்டும் உதவிசெய்யாமல் பின் பற்றிற்று. தன் கூட்டத்தாருக்கு ஆகாரம் தேடிக்கொடுத்த பெருமையோ என்னவோ!

'ராணி' எறும்பு

எறும்புகளில் மற்றொரு வகை 'அடிமை' எறும்புகள் என்பன. இவை ஒரு புற்றிலிருந்து மற்றொரு புற்றுக்கு 'ஜாகை' மாற்றும். கடைசியாக தங்கள் 'ராணி'யையும் தூக்கிக் கொண்டுப் புதுவீட்டிற்குசேர்க்கும். ராணி எறும்புகளின் ஒரு விசித்திரமான சுபாவம் என்னவென்றால், அவை தங்கள் எதிரில் ஆகாரம் வைக்கப்பட்டிருந்தால் கூட உண்ணாது. 'அடிமை' எடுத்துவாயில் ஊட்டினால் தான் உண்ணும். இல்லாவிட்டால் பட்டினியால் இறந்தாலும் இறக்குமே தவிர, ஆகாரத்தைக் தானே உண்ணாது. அடிமைகள் சேவை செய்தால் இந்த எறும்புகள் நன்றாக வளர்கின்றன.

ஒரு எறும்புபுற்றைக் கலைத்துவிட்டால் அவை ஒளிந்து கொள்வதற்காக இங்குமங்கும் அலைகின்றன. இவ்விதம் ஒரு தடவை செய்ததில், எறும்புகள் மற்றொரு பத்திரமான இடத்தைத்தேடித் தாறுமாறாக அலைந்தன. ஒரு எறும்புமட்டும் இடத்தைத் தேடிப் பிடித்துவிட்டது. ஆனால் அது அங்கே அதிக நேரம் தங்கவில்லை. உடனே வெளியே வந்து தன் இனத்தாரைத் தேடிற்று; எதிரில் ஒரு எறும்பு வந்ததைப் பார்த்து, அதைத் தூக்கிக்கொண்டு புற்றுக்குள் சென்றது பிறகு இரண்டுமாக வெளியே வந்து அங்கு காணப்பட்ட மற்றும் இரு எறும்புகளைத் தூக்கிச் சென்றன. அவையனைத்தும்

(அடுத்த பக்கம் பார்க்க)

ஸ்ரீமதி ஜானகி
எழுதியது

எறும்பின் வாழ்க்கை விசித்திரம்

(முன் பக்கத்தொடர்ச்சி)

வெளியே வந்து மற்றும் சில எறும்புகளை தூக்கிச் சென்றன. அக்கூட்டத்தைச் சேர்ந்த எறும்புகள் எல்லாம் உள்ளே சேரும் வரை இதே மாதிரி நடந்தது. பிறகு தாங்கள் முதலில் வசித்த புற்றிலிருந்து ஆகாரத்தையெல்லாம் புது வீட்டிற்கு, அப்புறப்படுத்தின. அவைகளிடையிருக்கும் ஒற்றுமை எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்!

முக்கிய ஆகாரம்

அநேகமாய் ஒரு எறும்புகளின் குடும்பத்தில் எறும்புகள் மாத்திரம் வசிப்பதில்லை. நாம் நம் உபயோகத்திற்காக, ஆடு, மாடு, கோழி முதலியவற்றை வளர்ப்பது போல் அவைகளும் சில ஜந்துக்களை வளர்க்கின்றன. அவற்றில் முக்யமானவை 'ஆபைட்ஸ்' என்பன. சில எறும்புகள் இவைகளை இலைகளிலும், புற்களிலும் இருத்தி வளர்க்கும். மற்றும் சில தம் புற்றுக்குள்ளேயே வளர்க்கின்றன. இவை அநேகமாய்க் கிழங்குகளைத் தின்று ஜீவிக்கும். நமக்கு எப்படி பசுவினிடத்திலிருந்து பால் கிடைக்கிறதோ, அதே மாதிரி எறும்புகள் இந்த அபைட்ஸிலிருந்து ஒரு வித்த் தேனைக் கறக்கின்றன. எறும்புகளுக்கு இது ஒரு முக்கிய ஆகாரம். எறும்புகள் இவைகளின் முட்டைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துப் பிறகு குஞ்சுகளை பராமரிக்கின்றன. வேறு சில ஜந்துக்களும் எறும்புகளால் வளர்க்கப்படுகின்றன. சில எப்பொழுதும் புற்றுக்குள்ளேயே, அதாவது பூமிக்கடியிலேயே வசிப்பதால் தம் பார்வையை இழந்து குருடாகிவிடுகின்றன.

எவ்விதத்திலும் எறும்புகள் மனிதவர்க்கத்துக்கு மேம்பட்டதாகவே இருக்கின்றன. அவைகளின் ஊக்கம், ஞாபகசக்தி, சோம்பலின்மை, ஒற்றுமை முதலிய எல்லா நற்குணங்களும் நமக்குப் பாடம் கற்பிக்க வல்லதாகவேயிருக்கின்றன. நம் வாழ்க்கையில் எறும்பின் குணங்களை ஸ்வீகரித்துக் காரியங்கள் செய்தால் மனித உலகத்தில் நிறுவப்பட்டிருக்கும் "சோம்பலம்பலங்கள்" பெறும் பாலும் விடுதலை யடையும்.

சம்பாஷணைக் கதை

ஜால வித்தை

பிரேம் சந்த் எழுதியது

"நீ ஏன் அவனுக்குக் கடிதம் எழுதினாய்?" என்று நீலா கேட்டாள்.

"எவனுக்கு?" என்றாள் மீனா.

"அவனுக்குத்தான்"

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே"

"உனக்கு எப்படியடி புரியும்! என்னை அவமானப்படுத்திவிட்டது போதாதென்று. தெருத் தெருவாக என் பெயரைச் சொல்லி முரசு அடிக்கிறானே, அவனோடு உறவு கொண்டாடுவது உனக்குத் தகுமா?"

"நீ சொல்வது தப்பு"

"நீ அவனுக்குக் கடிதமே எழுதவில்லையா?"

"அடியோடு இல்லை"

"அப்படியானால் நான் சொன்னது தப்பு; என்னை மன்னித்துவிடு. நீ என் தங்கையாக இல்லாமலிருந்தால் இந்தக் கேள்வியைக்கூட உன்னிடம் கேட்டிருக்கமாட்டேன்"

"நான் யாருக்கும் கடிதம் எழுதவில்லை"

"இதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது."

"நீ ஏன் லேசாகச் சிரிக்கிறாய்?"

"நானா?"

"ஆமாம், நீ தான்."

"நான் கொஞ்சங்கூடச் சிரிக்கவில்லையே."

"எனக்கு என்ன, கண் குருடா?"

"நீயாக வேண்டுமென்றே இப்படிச் சொல்லுகிறாய்."

"நீ ஏன் சிரித்தாய்? சொல்லு."

"உண்மையாகச் சொல்லுகிறேன்; நான் அடியோடு சிரிக்கவே இல்லையே."

"நான் என் கண்ணால் பார்த்தேனே!"

"சரி அப்படியானால் உனக்கு நம்பிக்கையுண்டாகும்படி நான் எப்படிச் சொல்வது?"

"நீ என் கண்களில் மண்ணைத் தூவுகிறாய்!"

"சரி. சிரித்தேன். அவ்வளவு தானே! நீ என்ன என் தலையை வாங்கிவிடுவாய்?"

"பிறரைப் பார்த்துச் சிரிப்பதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"நீலா, உன் காலில் விழுகிறேன். நீ என்னை விட்டால் போதும். நான் அடியோடு சிரிக்கவே இல்லை."

"எனக்கும் தெரியும். நான் அப்படிப்பட்ட அடிமுட்டாள் இல்லை."

"நீ கெட்டிக்காரி என்பது எனக்குத் தெரியும்."

"நீ என்னை எப்போதும் பொய் சொல்லுபவன் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறாய்."

"நீ இன்று காலையில் எழுந்திருக்கும்போது யார் முகத்தில்

"உன் முகத்தில்தான்"

"நீ எனக்குக் கொஞ்சம் விஷம் கொடுத்துவிடுவது தானே"

"ஆமாம், நான் தான் கொலைகாரியாயிற்றே"

"நான் அப்படிச் சொல்லவில்லையே"

"இன்னும் எப்படிச் சொல்ல வேண்டு மென்கிறாய்? தமுக்கு அடித்துச் சொல்லவேண்டும் என்கிறாயோ? ஆமாம்; நான் கொலைகாரிதான். மதம் பிடித்தவள்தான், திரிதான். நீ எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடம். சீதை, சாவித்திரி. இப்போதாவது உனக்குச் சந்தோஷந் தானே?"

"சரி சொல்லிவிடுகிறேன்: நான் அவருக்குக் கடிதம் எழுதினேன், அதைப்பற்றி உனக்கு என்ன? நீ யார் அதைப்பற்றி என்னைக் கேட்க?"

"நீ எழுதியது நல்லதுதான்; நான் உன்னைக் கேட்டேனே, அதுதான் வாஸ்தவத்தில் என் முட்டாள்த்தனம்"

கா. ஸ்ரீ. ஸ்ரீ.
மொழிபெயர்ப்பது

"என் இஷ்டம், எனக்குப் பிரியமானவர்களுக்கு நான் கடிதம் எழுதுகிறேன்; இஷ்டப்பட்டவர்களோடு பேசுகிறேன். நீ யார் என்னைத் தடுப்பதற்கு? நீ நாள் தவறாமல் கட்டுக் கட்டாகக் கடுதாசிகள் எழுதுகிறாயே, உன்னை நான் ஏதாவது எப்போதாவது கேட்டது உண்டா?"

"நீதான் வெட்கம், மானம் என்பதையே காற்றில் பறக்க விட்டு விட்டாயே, என்ன இஷ்டமோ செய். உனக்கு உரிமை உண்டு."

"அப்படியா! நீ எப்போதிலிருந்து நாணமும் மடமும், அச்சமும் பயிர்ப்பும் உள்ளவளாகி விட்டாயடி? அம்மாவிடம் முறையிடலாமென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. இங்கே யாரும் அதைப்பற்றிச் சட்டை செய்பவர்கள் இல்லை, நான் அவருக்குக் கடிதமும் எழுதினேன்; பார்க்கில் போய்ச் சந்திக்கவும் சந்தித்தேன்; நேரில் பேசவும் பேசினேன் போய் எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லு, தாத்தாவிடம் சொலலு; ஊர் முற்றுங் கூடச்சொல்லிவிடு."

"விதைத்தவன் அறுப்பான். யாரிடந்தானாகட்டும், நான் எதற்காகப் போய்ச் சொல்ல வேண்டும்?"

"ஓஹோ! அடி தைரியக்

புளிக்கின்றன' என்று சொல்லி விடுவதுதானே; அதற்கு ஏன் இவ்வளவு பயந்து சாகிறாய்?"

"நீ என்ன சொன்னாலும் அதுவே சரி."

"உனக்கு உள்ளம் கொதிக்கிறது.?"

"கொதிக்கிறது, உன் தலை!"

"கொஞ்சம் அழு, பார்க்கலாம்!"

"நீதான் அழுவாய், நான் எதற்கு அழ வேண்டும்!"

"எனக்கு அவர் ஒரு கைக்கடிகாரம் பரிசு அளித்திருக்கிறார்; காண்பிக்கட்டுமா?"

"நீயே பத்திரமாக வைத்துக் கொள். அதைப் பார்ப்பதால் என் கண் எரிச்சல் தீர்ந்து விடாது."

"நான் கேட்கிறேன்: நீ ஏன் இப்படிக் கொள்ளியாக இருக்கிறாய்?"

"நான் உன்னைக் கண்டு பொறாமைப் பட்டால் என் கண்கள் குருடாகி விடும்."

"என்னைப் பார்த்து நீ மன எரிச்சல் படப்பட, நானும் உன்னைச் சீண்டிக்கொண்டே இருப்பேன்."

"நான் எரிச்சல் படவே இல்லையே"

"உன் எரிச்சல்தான் ஸ்பஷ்டமாகத் தெரிகிறதே."

"சரி, நிச்சயதார்த்தம் எப்போது?"

"எரிச்சல் பட்டுச் செத்துப் போ."

"உனக்குத் தாலி கட்டுவதைப் பார்த்துவிட்டு அல்லவா சாக வேண்டும்?"

"தாலி கட்டிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை உனக்குத்தான்."

"அப்படியா! தாலி இல்லாமலா கல்யாணம் நடக்கும்?"

"அந்த மூடப் பழக்கங்கள் எல்லாம் உன்னோடு இருக்கட்டும். எனக்குக் காதல் ஒன்றே போதும்."

"அப்படியானால் உண்மையாகவே நீ தாலி கட்டிக்கொள்ளப் போவதில்லையா? ஊரார் ஏதாவது......"

"எனக்கு யாரிடமும் பயம் இல்லை."

"ஓ! அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாயா! அப்படி இருக்கும் போது, நீ அவனுக்குக்கடிதம் எழுதவில்லையென்று முதலில் ஏன் சாதனை செய்தாய். வாதாடினாய்?"

"என் மனசிலுள்ள அந்தரங்கத்தைப் பிறருக்கு எதற்காகச் சொல்லவேண்டும்?"

"நான் உன்னை ஒன்றும் கேட்கவே இல்லையே; நீயாகத் தானே எல்லாவற்றையும் உளறிக் கொட்டினாய்."

"நீ ஏன் சிரித்தாய்?"

"அந்தப் பாவி என்னை ஏமாற்றிக் கெடுத்ததுபோல் உன்னையும் கெடுப்பானே! என்னைப் போலவே உன்னையும் ஊர் முழுதும் தூற்றுவானே! அப்புறம் நீயும் என்னைப் போலவே அவன் பெயரைச் சொல்லி அழுவாயே—என்பதற்காகவே சிரித்தேன்."

"உன்னிடம் அவருக்குக் காதல் இருக்க வில்லை."

"என்னிடத்திலா! யார் சொன்னது? என் கால்களில் அவன் தலைவைத்து அழுதான்; 'நீ இல்லாவிட்டால் நான் செத்துப்

இறப்பேன்' என்று சொன்னான்,"

"உண்மையாகவா சொன்னார்.?"

"முற்றும் உண்மையாக."

"என்னிடமும் அவர் இதைத் தான் சொல்லுகிறார்."

"உண்மையாகவா?"

"சத்தியமாக."

"இப்போது தான் அவன் இரை தூவுகிறான் போலிருக்கிறது என்றல்லவா நான் நினைத்துக்கொண்டிருந்தேன்!"

"அவன் வாஸ்தவத்தில்......"

"பெருத்த வேட்டைக்காரன் தான்."

மீனா தலையில் கை வைத்த வண்ணம் சிந்தையில் மூழ்கு

சோபாராணியோ பிறகு அமலனை விடுவித்துவிட்டு கௌரியையும் சாந்தப்படுத்தி ராஜி செய்துகொள்வதற்கு அரும்பாடுபட்டு பார்த்தாள். ஆனால் கௌரியோ சமாதானம் என்ற பேச்சுக்குச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. சித்தியுடன் பேசவும் மறுத்துவிட்டாள்.

எது எப்படியிருந்தாலும் கௌரி அன்றைத் தினமே தன் கணவனுக்கு இங்கே நடந்தவற்றை விவரமாக எழுதி அனுப்பிவிட்டாள். மறு நாள் அவள் புருஷனும் வந்துவிட்டான். கௌரியும் தன் புருஷனுடன் அன்றைக்கே புக்ககம் போய்விடவேண்டுமென்று வற்புறுத்தினாள். ஹரகண்டபாபு வகையொன்றும் அறியாமல் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

புறப்படுவதற்குச் சிறிது நேரத்துக்கு முன்னதாகக் கௌரி தன் தம்பி அமலனையும் உடன் அழைத்துச் செல்வதாகத் தந்தையிடம் தெரிவித்தாள். மாப்பிள்ளையும் அதை ஆமோதித்துப் பேசினார். ஹரகண்டபாபுவினால் அந்த வேண்டுகோளை மறுக்க முடியவில்லை; தடுத்தால் ஒருகால் அவர்கள் கோபித்துக்கொண்டுபோய் விடுவார்களோ என்றும எண்ணினார் போலும். அமலனும் ஏதோ கொஞ்ச நாள் தன் தமக்கையுடன் போய்வரட்டும் என்று எண்ணி அனுப்பிவிட்டார்.

கௌரி பிறந்தகம் வந்து தங்கியிருந்த சிறிது காலத்துக்குள்ளே சோபாராணி தன் வாழ்க்கையின் மற்றோர் அம்சத்தை அறிந்து கொண்டாள். மேலே சொன்ன சம்பவத்துக்கு முன்னதாகப் பல தடவைகளில் அவள் அமலனைக் கண்டித்திருக்கிறாள். ஆனால் இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டதில்லை. இந்தத் தடவை ஏற்பட்ட நிகழ்ச்சியினின்றும் அவள்தான் அந்தக் குடும்பத்துக்கு எப்படியும் புறம்பானவளே என்ற பாவம் ஏற்பட்டது. என்ன இருந்தாலும் தன்னை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவளாக எவரும் மதிக்கவில்லை என்றே அவள் எண்ணினாள்.

கௌரி அவளுடன் பேசுவதற்கே தயாராக இல்லை. அமல் எப்போதும் தன் தமக்கையின் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு அவளையே சுற்றிவந்தான். சோபாராணியின் புருஷர் ஹரகண்ட பாபுவும் அவளுடன் வழக்கம்போல தாராளமாகப் பழகவில்லை. மிகுந்த வெட்கத்துடன் ஒதுங்கி நின்றார். ஒருகால் அவர் தம் குமாரத்திக்குப் பயந்து அவ்விதம் இருந்தார் போலும். நிசப்தம் குடிகொண்டிருந்த அந்த வீட்டில் அவளுக்கு ஆறுதல் கூறுவதற்கு ஒருவரும் இல்லை.

இந்தச் சமயத்தில் இருந்ததைப்போல வீடு எப்பொழுதும் நிசப்தமாக இருந்ததில்லை யென்றே அவள் எண்ணினாள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் ஒன்று சேர்ந்து அவளுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்த முயன்று வந்தார்கள் என்றும், அந்தக் குடும்பத்தில் தான் வகிக்கவேண்டிய பொறுப்பை அவர்கள் ஒவ்வொருவருடைய தயவையும் பொறுத்தாகும் என்றும் அவளுக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று. 'வெற்றியடைந்துவிட்டோம்' என்ற முகமலர்ச்சியுடன் கௌரி தன் தம்பி அமலனை அழைத்துக்கொண்டு புக்ககம் போகப் புறப்பட்டபொழுது, அவளுக்கு ஏற்பட்ட மனவேதனை எந்தக் காலத்திலும் உண்டானதில்லை. அவள் உள்ளம் வெடித்துவிடும்போலாகிவிட்டது.

* * *

நாட்கள் சென்றன: ஆனால் கௌரியோ அமலனோ யாரும் திரும்பிவரவில்லை. வீட்டில் விஷமம் செய்யக் குழந்தை அமலன் இல்லாமல் அது வெறிச்சென்று கிடந்தது. ஹரகண்டபாபுவுக்கும் நிசப்தம் கொண்ட அந்த வீட்டில் இருக்கையே கொள்ளவில்லை. அவர் வாழ்க்கையில் ஒரு சூன்யம் ஏற்பட்டது. அதனால் அவர் கொஞ்ச நாட்களுக்கெல்லாம் அமலனை அழைத்துவர ஆள் அனுப்பினார். ஆனால் திரும்பி வந்துவிட்டான். குழந்தையின் க்ஷேமத்தைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாமென்று தன் தந்தைக்குத் தெரிவித்துச் சிறிது காலம் கழித்து அனுப்புவதாகப் பதில் அனுப்பிவிட்டாள் கௌரி.

அமலகுமாரன் இல்லாமல் ஹரகண்டபாபுவுக்குத் தினசரி வாழ்க்கை சலித்துவிட்டது. அவரால பொறுக்க முடியவில்லை. ஆகவே இன்னும் சில தினங்கள் கழித்த பிறகு அவர் உடனே குழந்தையை அனுப்பிவைக்கும்படிக் கௌரிக்குக் கடிதம் எழுதினார், அந்தக் கடிதத்துக்குப் பதில் வந்தது. ஆனால் அமலகுமாரன் வரவில்லை. தன்னுடைய பதிலில் குழந்தை சவுக்யமாக இருக்கிறான் என்றும், அவன் ஊருக்கு வருவதற்கு இஷ்டப்படவில்லை என்றும் கௌரி, எழுதியிருந்தாள். 'பலராமபுரத்துக்குப் போ' என்று சொன்னால் அவன் உடனே அழ ஆரம்பித்து விடுகிறானாம். 'அவன் தன்னுடைய சொந்த வீட்டுக்குத் திரும்பிவர வேண்டியது அவசியம் தான். ஆயினும் சிறிது காலமாவது அவன் இஷ்டப்படி இங்கேயே இருக்க முடியாதா? அன்றி தன் பெண்ணை நம்பிக் குழந்தை அமலனை அவளிடம் ஒப்பித்துவைக்க முடியாதா?'' என்றும் தந்தையைக் கேட்டிருந்தாள் கௌரி.

தன் பெண் தனக்கு இவ்விதம் எழுதியதும் அதில் தொனித்து நின்ற கொடூரமான குற்றச்சாட்டும் ஹரகண்ட பாபுவின் உள்ளத்தில் அம்பு போல் தைத்தன. ஆயினும் அவர் தம மனத்தை ஏதோ ஒரு விதமாகச் சமாதானப் படுத்திக்கொள்ள முயன்றார்.

''உண்மைதான்! கௌரி குற்றம் கூறுவதற்கும காரணங்கள் இல்லாமல் இல்லை. அவர்களுடைய தாயார் இல்லை. தமக்கையும் தம்பியும் சேர்ந்து இருந்தால் ஒருவரை ஒருவர் பார்த்து ஏதோ ஆறுதல் அடையக்கூடும். அவளைப் பிரிந்திருப்பது என்னால் சகிக்க முடியாததாகும். எவ்விதமாயினும் அவர்கள் சௌக்யமாக இருந்தால், அதுவே எனக்குச் சந்தோஷத்தை அளிக்காதா?''—இவ்விதம் எண்ணினார் அவர்.

அவர் அவ்விதம் நினைத்ததற்கு ஒரு முக்யமான காரணமும் உண்டு. சோபாராணியே அமலனைப்பற்றிக் கவலை கொள்வதாகச் சிறிதும் காட்டிக்கொள்ளவில்லை. அமலனைத் திரும்ப அழைத்து வரவேணடுமென்று ஒரு தடவையாவது அவள் சொல்லாமல் பல நாட்கள் கழிந்துவிட்டன. இவ்விதம் அவள் அலக்ஷியமாக இருக்கும்போது அமலனைக் கூட்டி வருவதற்கு என்ன அவசரம் வந்துவிட்டது என்றும் எண்ணினார், சோபாராணியோ தன் மனத்துள் என்ன எண்ணியிருந்தாலும், அதைப் பிறர் அறிந்துகொள்ளும்படிச் சிறிதும் காட்டிக்கொள்ளவில்லை. அவள் அந்தவிதமாகத் தன்னைக் கட்டுப்படுத்தியிருந்தால், கௌரியுடன் அவன் புறப்பட்டுப் போன பிறகு அவன் அருகில் இல்லாமையை அறிந்து ஏங்கியபடி அவள் எப்பொழுதும் வாடியதில்லை. அவள் அமலனைப் பெரிதும் விரும்பினாள். அவனை எப்படியும் தன் பக்கத்திலேயே நிறுத்திக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று எண்ணினாள். அவனில்லாதவாழ்க்கை அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஆயினும் தான் எவ்வளவுதான் அவர்கள்மீது பிரியமாக இருந்தாலும் அவர்கள் தன்னைத் தங்கள் மனுஷியாகவோ, தங்களுக்கு வேணடியவளாகவோ கருத மாட்டார்கள் என்பதை நன்றாக அறிந்துகொண்டுவிட்டாள். அதனால் எதற்காக அவர்களுக்கு ஆதிக்யம் கொடுதது அவர்களை உயர்த்திவைப்பது என்றே அவள் எண்ணினாள். அவளுடைய புருஷர், தம்குமாரத்தியின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டுப் பயப்படவேண்டும். ஆனால் அதைப்பற்றி அவளுக்கு என்ன? அவள் ஏன் பயப்பட வேண்டும்? வாஸ்தவமாக இந்தக் குடும்பம பெண்ணுக்கோ மாப்பிள்ளைக்கோ பாத்தியப்பட்டதன்று. அவளுக்கே சொந்தமானது. ஆகவே எப்படியும்அவளே அதை நடத்திவரவேண்டும்.

உடனே அவள் தன் சோம்பலை விட்டொழித்தாள். குடும்பக் காரியங்களைக் கவனிப்பதில் இரட்டிப்பு மடங்கு ஆர்வம் காட்டி எல்லாவற்றையும் ஒழுங்கு செய்தாள். இவ்விதம் ஸதா குடும்பத் தொல்லையில் உழன்று வந்ததால் அவள மனத்தில் இருந்த சோகம் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிட்டது. ஹரகண்டபாபு மனத்துக்குள்ளே அனுபவித்துவந்த துயரத்தின் அளவையும அவள் அறிந்தாள். அதனால் அவருக்கு அதைப்பற்றிய நினைவே உண்டாகாமல் இருக்கும்படியாக நடந்துகொண்டாள். தன்னை மறந்தும தவறி ஒன்றையும் சொல்லிவிடவில்லை.

மனத்துயரத்துக்குக் காலமே கை கண்ட மருந்து: அந்தப் புண்ணை, நாளாக ஆகத்தான் ஆற்றி மறக்க முடியும் அது அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவள தன் கணவர் விருப்பத்தைக் குறிப்பால் அறிந்து அவர் வாய் திறப்பதற்கு முன்னரே செய்து முடித்து, அவர் மனத்தைக் களிப்பித்து வந்தாள். அவருக்குப் பணிவிடை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தாள். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர் தம் குமாரன் அருகில இல்லாத குறையை உணராதவாறு அவரை நடத்தி வந்தாள்.

சோபாராணியின் திட சித்தத்தையும் அவள் அதனை நடத்திச் செல்வதையும் ஹரகண்டபாபு கவனியாமல் இல்லை. அவரது கூரிய திருஷ்டியினின்றும் அவை தப்ப முடியுமா? அவரும் இளகிய மனசு உடையவர் அதனால் அவள் உண்மையுடன் தம்மை நேசித்து, ஆச்ரயித்துப் பணிவிடை செய்வதைக் கண்ட அவர் உள்ளம் கரைந்தது. அவளுடைய காதலின் வசப்பட்டு அந்த ஆனந்தத்தில் மூழ்கித் திளைத்துவந்தார்.

இவ்விதமாக சோபாராணி தன்னைச் சுற்றிப் பலமான அரண் ஒன்றை எழுப்பிக்கொண்டாள். ஆனால் அவள் தன் மூத்தாள் பிள்ளையை நடத்திய விதத்தைப் பற்றி அதைவிடப் பலமான அபவாதம் ஊரில் மூண்டது. சோபாராணி ஒரு பெரிய மாயக்காரி. அவள் தன மந்திரக் கோலால் கௌரியையும் அமலனையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டாள். இப்போது அவள் அந்தக் கோலைக் கொண்டு தன் புருஷனை ஓர் ஆட்டுக் குட்டியாக ஆக்கிவிட முயன்று வருகிறாள்' என்ற வதந்தி ஊரில் பரவ ஆரம்பித்தது.

அது அவள் காதுக்கு எட்டுவதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. முதலில் அவள் அதை அலட்சியமாக எண்ணினாள். அதைப்பற்றிய பேச்சை எடுப்பவர்களிடம் 'அது எப்படி அசம்பாவிதமானது' என்பதை அழுத்தந்திருத்தமாக ஆக்ஷேபித்துக் கூறித் தன் கட்சியை விளக்குவாள். ஆனால் யாரும் அவளுடைய ஆக்ஷேபனைகளை மதிக்கவில்லை.

அந்த ஊரில் 'பாச்சு அம்மா' (பாச்சுவின் தாயார்) என்றவள் ஒருத்தி இருந்தாள். அவள சோபாராணிக்குஎட்டின உறவு; எவ்விதத்திலும் சோபாராணியின் தயவை எதிர்பார்த்துக் காலம் தள்ளுபவள். ஒரு நாள் அவள் சோபாராணியிடம் பின்வருமாறு சொன்னாள்:

''ஊரில் உள்ள வதந்தியை ஆதாரமற்றது என்று உன்னால் அடியோடு மறுக்க முடியுமா? நீ தாய் உள்ளம் கொண்டவளாக இருந்தால் அமலனை அவனுடைய ஜன்மநக்ஷத்திரம், பிறந்தநாள் வரப்போகும் வாரத்திலேயே வீட்டை விட்டுப் போவதற்குச் சம்மதித்திருப்பாயா? மறுபடியும் அவன் புறப்பட்டுப்போய் இப்போது ஒரு வருஷமாகப் போகிறதே. இதற்கிடையில் அவனைத் திரும்பவும் அழைத்து வரவேண்டுமென்று ஒரு தடவையாவது நீ சொன்னதாக யாரும் கேட்கவில்லை, இந்த வீடு, இதில் உள்ள சாமான்கள் சொத்துக்கள் யாவும் அவனுக்குச் சொந்தமானவை. அப்படியிருக்கத் தன்னுடைய வீட்டினின்றும துரத்தப்பட்டவனுடைய துரதிர்ஷ்டம ஏப்படிப் பட்டதாக இருக்கவேண்டும்? உன்னுடைய கையை அண்டியே நான் வாழ்ந்து வருகிறேன். நான் வேணடுமானால் உனக்கு விரோதமாக எதையும் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் எல்லோரும் அப்படி யிருப்பார்களா? அவர்களை கட்டுப்படுத்தத்தான் முடியுமா? உன்னுடைய நடத்தை வெட்கக் கேடானதுதான் என்பதை நான் சொல்லவே வேண்டியிருக்கிறது. ஆமாம், உன்னுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாக ஹரகண்டபாபு ஒன்றும் செய்யமாட்டார்; ஆனால பாவம் அவர் வெகுளி; தங்கமான மனிதர்: யாருக்கும் சொல்லாமல் மனதுக்குள்ளே எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ? நான் ஒன்று சொல்லுகிறேன்; அதிலிருந்தே நீ எல்லாவற்றையும் அறிந்துகொளளலாம். அன்றைக்கு அவர் தம் பெண்ணையும் பிள்ளையையும் பார்க்கக் கௌரியின் புக்ககம் சென்றிருந்தாரே—எல்லாம் உனக்குத் தெரியாமல் தானே...''

இதைக் கேட்டவுடன் சோபாராணிக்குத் தாங்க முடியாத துக்கம், வெட்கம், ஆத்திரம், அழுகை, கோபம் எல்லாம் கலந்து வந்து அவளை அமுக்கின. அவள் உள்ளம் குமுறியது. எனினும் அவள் அவற்றை வெளிக்குக் காட்டாமல் அடக்கிக்கொண்டாள்.

(தொடரும்)

சித்திரமும் சிருங்காரமும்

படத் தொழில்

க்வாஜா அஹமத் அப்பாஸ் "மோஷன் பிக்சர் மாகஸின்" என்ற பத்திரிகையில் ஒரு ரஸமான கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் முக்கிய பகுதிகள் அடியில் பிரசுரமாகின்றன.

"ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருக்கிறது. யுத்தம் நடக்கும்போது ஜனநாயகம் தன்னைத்தானே பரிகசித்துக் கொள்ள முடியும். ஆனால் சர்வாதிகாரிகள் அப்படியல்ல; அவர்களுக்குச் சிரிப்பு என்பதே கிடையாது. சிரிக்க அவர்களுக்குப் பயம்; பிறர் உடனே அவர்களைப் பார்த்து சிரிக்க ஆரம்பித்துவிடுவார்களோ என்பதே அதற்குக் காரணம் சர்வாதிகாரிகள் வசப்பட்டநாடுகளில் யுத்தகாலத்தில் கலைகள் அபிவிருத்தியடையாமல் இருப்பதற்கும் இதுவே காரணமாகும்: ஆனால் ஜனநாயக தேசங்களில் இம்மாதிரி இல்லை, எங்கு பார்த்தாலும் ஒரே கலவரமாயிருக்கும்போது அவர்களுக்குக் கலைகள்தான் உத்சாகத்தை யூட்டுகின்றன.

இந்த யுத்தம் ஆரம்பித்த பிறகும், ஜனநாயக நாடுகளில் கலை வளர்ச்சி அதிகமாக இருக்கிறதைப் பலரும் அறிவர். முக்கியமாகச் சலனப் படங்களின் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. ஸோவியத் ருஷ்யாவில் அநேக படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. செய்திப் படங்கள் தவிர கதைப்படங்களும் பல அங்கு வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் "மாஸ்கோவுக்கான சண்டை" என்ற படம் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நாஜி விமானங்கள் கொடிய நோக்கத்துடன் மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தபோதும் ஸோவியத் டைரக்டர்கள் சும்மா இருக்கவில்லை; மாக்ஸிம் கோர்க்கி என்ற பிரபல நவீன கர்த்தரைப்பற்றிய படமொன்றை அவர்கள் தயாரித்துக் கொண்டிருந்தனர்.

ஹாலிவுட்டிலும் இங்கிலாந்திலும் கூட இதே மாதிரி மனநிலையைக்காணலாம். அன்றாட சம்பவங்களைச் சித்திரித்துக் காட்ட அங்கெல்லாம் செய்யப்பட்டுவரும் முயற்சி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. "படையெடுப்புக்காரர்கள்" "சுதேசத்தில்" "இன்றிரவின் குறி" ஆகிய படங்கள் காலப்போக்கின் அறிகுறியாய் விளங்குகின்றன.

இந்தியா விஷயம் என்ன? யுத்தம் ஆரம்பித்தவுடன் இந்தியாவில் படத்தொழில் மறைந்துவிடும் என்றனர் சிலர். ஜப்பானும் அமெரிக்காவும் யுத்தத்தில் இறங்கிய பின், பிலிம் அதிகம் கிடைக்காமல் போய்விட்டது பெரிய கவலைக்கிடமாகியது. ஆகவே ஸ்டுடியோக்கள் மூடப்பட்டு, நடிகர்கள் தொழிலிலிருந்து விடுபட்டு விடுவார்கள் என்றெல்லாம் பலர் எதிர்பார்த்தனர்.

இப்போதைய நிலைமையைப் பரிசீலிக்கும் போது இத்தகைய மனோபாவம் வீணானது என்பதும் அது அநாவசியமாய் தன்னம்பிக்கையின்மை காரணமாய் உதித்தது என்றும் புலனாகின்றது. நம் நாட்டிலும் தொழிலுக்கு ஒரு வித ஹானியும் இதுவரை ஏற்படவில்லை. ஏதோ வழக்கம் போல் நடந்து கொண்டிருக்கிறதே தவிர. வேறு ஒன்றுமில்லை.

இவற்றிலிருந்தெல்லாம் நாம் ஒரு உண்மையை மட்டும் நிச்சயம் கண்டு கொள்ளலாம். அதாவது யுத்தமானாலும் சரி, சமாதானமானாலும் சரி, ஜனங்கள் வேண்டுவது பொழுதுபோக்குதான்! ஆகவே படக் கம்பெனிகளில் பங்கு விலை ஏறிக் கொண்டே போகிறது.

என்னைப் போன்றவர்களுக்கு இத்தொழிலின் செல்வ நிலையைப் பற்றி சிரத்தை தோன்றுவதில்லை. இதன் ரஸிப்புத் தன்மையும் அபிவிருத்தி மார்க்கமும் தான் எனக்குப் பிரதானமாம் இந்த விஷயங்கள் பற்றியும் இந்த யுத்தம் நமக்கு சாதகமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்குக் காரணம் என்ன?

பிலிம் அதிகம் அகப்படாததால், படங்களின் நீளத்தைக் குறைத்து விடும்படி ஸர்க்கார் உத்திரவிட வேண்டியதாயிற்று. 11000 அடி நீளத்திற்கு அதிகமாகப் போகக்கூடாது என்றனர் அதிகாரிகள். இதுவரை இந்தியப் படத்தொழிலின் முன்னேற்றத்தில் சிரத்தைகொண்ட ஒவ்வொருவரும் இதைத்தான் பிரதானமாக வற்புறுத்தி வந்திருக்கின்றனர். இந்த அதி அவசியமான சீர்திருத்தம் தோன்ற, இந்த யுத்தம்தான் உதவியது? எந்தப்படமானாலும் சரி, அது 14000 அடி நீளம் இருந்தால் எவர் தான் அதைப் பொறுமையுடன் பார்ப்பார்? அதிக நீளமாகப் போவதால் அநாவசிய காட்சிகளும், சந்தர்ப்ப விரோத

டைரோன்பவரும் ஜார்ஜ் ஸண்டர்ஸும்
"ஸன் அப் ப்யூரி" என்ற 20-ம் செஞ்சுரி பாக்ஸ் படத்தில் ஒரு காட்சி.

சோப் விலைகள்

அடியிற்கண்ட பிரபல சோப்புகளுக்கும், மற்ற பொருள்களுக்கும் ரயில் வசதியுள்ளதும், அதிக சுங்க வரி சமஸ்தான வரிகள் வசூலிக்கப்படாததுமான இடங்களில், தற்காலத்தில் நியாயமாக கொடுக்கவேண்டிய விலைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஸன்லைட் சோப்	பெரிய பெட்டி	5 அணா - 5½ அணா
,,	சிறிய பெட்டி	1¾ ,,
லைப்பாய் ஸோப்	பெரிய பெட்டி	6 அணா - 6½ அணா
,,	சிறிய பெட்டி	1½ ,,
லக்ஸ் டாய்லெட் சோப்	பெரிய ஸைஸ்	4 ,,
,,	சிறிய சைஸ்	1¼ ,,
லைப்பாய் டாய்லெட் சோப்	பெரிய சைஸ்	4 ,,
லக்ஸ்	பெரிய பாக்கெட்	12 ,,
,,	மத்திய சைஸ்	6 ,,
,,	சிறிய பாக்கெட்	3 ,,
விம்	பெரிய டின்	12 ,,
,,	மத்தியதர டின்	7 ,,
"காலேஜ் எம்ப்ரஸ் பேல்" சோப்	பார் 1-க்கு	6 அணா - 6½ அணா
"காலேஜ் அவுல் ஒயிப் பிரண்டு" சோப்	பார் 1-க்கு	14 ,,
"காலேஜ் வீல்" பார் சோப்	பார் 1-க்கு	10½ ,,

பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக பிரசுரிக்கப் படுகிறது.

லிவர் பிரதர்ஸ்
(இந்தியா) லிமிடெட்.

குறிப்பு:—இந்த விளம்பரம் 1942-௵ நவம்பர்௴ 30௳யிலிருந்து, மறு பிரசுரம் வரை, அமுலுக்கு வரும்.

L. Com. 16-169 TM

மான சங்கீதமும், அந்தப் படத்தை பாழ்படுத்துகின்றன. இனி வரும் படங்களில் பாட்டுகளும் உயர்தரமாக இருப்பதுடன் அவசியமில்லாத காட்சிகள் இடம் பெறமாட்டா: கதையும் குறுகிப்போய் ரஸிப்பூட்டும்.

இந்த ஸர்க்கார் கட்டுப்பாடு காரணமாக, சிறிய படங்கள், நாட்டிலும் அதிகம் பரவும், செய்திப் படங்கள், நிகழ்ச்சிக்குறிப்புகள், பிரயாணப் படங்கள், வாழ்க்கைச் சித்திரங்கள் ஆகியவை மூலம்தான் பொதுஜனங்களின் கல்வி அபிவிருத்தி ஏற்படும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கும் இதனால் அதிக வசதி ஏற்படும். நம் நாட்டில் எல்லா படங்களும் அதிகம் நீண்டு விட்டதால், சிறிய படங்களின் உதயத்திற்கே இடமில்லாது போய் விட்டது. மூன்று மணி நேரத்திற்கு ஒரே படத்தைக்காட்ட முடியும்போது ஒரு சினிமா சொந்தக்காரர் ஏன் சிறிய படங்களைக் காட்ட விரும்புவார்! சிறிய படங்களைக் காட்டவும் அவருக்கு அவகாசம் இருப்பதில்லை தற்போதைய நிலையில், ஸர்க்கார் உத்திரவு இந்த நிலையை மாற்றி வைக்க உதவியிருக்கிறது.

இந்த யுத்தம் சிறிய படங்களின் அபிவிருத்திக்கு அதிக ஆக்கமளித்திருக்கிறது. தற்சமயம் இந்திய பாஷைகளில் இந்திய மக்களுக்காக ஸர்க்காரே படம் பிடிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். யுத்தப் பிரசாரம் படத் தொழிலில் ஸர்க்காரையும் ஈடுபடுத்தியிருக்கிறது; "பிலிம் அட்வைஸரி போர்ட்", 'மிலிடரி பிலிம் யூனிட்" ஆகியவை தோன்றியதற்கு இதுவே காரணம். இவர்கள் தயாரித்த படங்களில் பெரும்பாலானவை பிரசார பூர்வமானவையாயினும் சில குறிப்புக்குரியவை. க்ரிப்ஸ் சம்பாஷணைகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட படம் சிலாகிக்கத்தக்கதாகும். இந்திய பிலிம் அட்வைஸரி போர்ட் இப்போது பிரசார சம்பந்தமற்ற சில படங்களைத் தயாரித்து வருகின்றனர். "இந்திய பத்திரிகைத் தொழில் சரித்திரம்", பிரபல இந்திய விஞ்ஞானிகளது வாழ்க்கை வரலாறுகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் அவர்கள் படம் பிடிக்கத் திட்டமிட்டுள்ளனர். அதனால் பலருக்குத் தொழிலில் பயிற்சி ஏற்படுவதுடன் யுத்தம் முடிந்த பின் சிறிய படங்களில் அதிகருசி வளரவும் வழி காண முடியும். ருசி தட்டி விட்டால், அப்புறம் அதை மறக்க படிக்க முடியாது.

இந்த யுத்தத்தினால் நம் தொழிலுக்கு விளைந்த நான்காவது நன்மை இதுதான்: இப்போது நாம் ருஷ்யாவில் தயாராகும் படங்களைப் பார்ப்பது சாத்தியமாக்கப்பட்டிருக்கிறது. இதுவரை ருஷ்யப் படங்களை விலக்கி வைத்திருந்தனர். "புரொபஸர் மம்லாக்", "எதிரிப் படையின் பின் வரிசையில்" என்ற இரண்டு உயர்தரமான ருஷ்யப் படங்களை நாம் இப்போது பார்த்தோம். பலசம்பவப் படங்களையும் நாம் இதுவரை கண்டுள்ளோம். ருஷ்யப் படங்களைப் பார்ப்பதால் தொழிலுக்கு நன்மைதான் கிட்டுகிறது.

உற்பத்திவிஷயத்திலும் இவை நமக்கு உதவுகின்றன. இதுவரை நாம் ஹாலிவுட்டைப் பின்பற்றி பார்த்தோம்: அங்குபோல் நம்மிடம் வசதிகள் இல்லை. ருஷ்யப் படங்களில் அதிகப் பணச் செலவு கிடையாது: பிரபல நடிகர் நடிகைகள் இருப்பதில்லை. உயர்தரமான ஜோடிப்புகள் கூட இல்லை. ஆனால் மிகவும் எளிய முறையில் பார்ப்பவருக்கு உணர்ச்சி யூட்டும் விதத்தில் அவை அமைந்திருக்கின்றன. ஆகவே நாம் இவை மூலம் கற்றறிய வேண்டியது அதிகம்: நாம் பலனடைந்தால், இந்த யுத்தம் பலனளித்ததாகும்.

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும்சரி, சூடுகாரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம்அதிகமாக ஏறுவிடினும், மயிர் உதிர்வதுமட்டும் தவறுவதேயில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சைசெய்து தடுக்காமலிருந்துவிட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்தபிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரைப்பங்கு கால்பங்காகக் குறைத்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசிபாக எல்லாப்பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச்சிறந்தது என்று தெரிய வந்தால், கேசவர்த்தினியைமுதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்தி செய்வது அழகுபடுத்துவது. விலை அணா 12 மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்பெயினின் முஸ்தீப்பு

கானரி தீவுகள், ஸ்பானிய, மொராக்கோ, பாலியாரிக் தீவுகள் இவற்றிலுள்ள தனது படைகளை ஸ்பெயின் வலுப்படுத்தியிருப்பதாக கோயரிங்கின் பத்திரிகையான "நாஷனல் ஸீடங்" கூறுகிறது.

ஸ்பெயினில் ராணுவத்தை ஓரளவு திரட்டுவதென்ற உத்தரவுப்படி 1939, 1940, 1941 இவ்வாண்டுகளில் பதிவு செய் செய்யப்பட்ட அனைவரும் ராணுவத்தில் சேரவேண்டுமென உத்தரவிடப்பட்டிருப்பதாக மாட்ரிட்டிலிருந்து வந்த ஒரு செய்தி கூறுகிறது.

நமக்குத் தோல்வி இல்லை

பீல்ட்மார்ஷல் ஸ்மட்ஸ் சென்ற மாதம் 26-ந் தேதி ஜிப்ரால்டரில் வட ஆப்பிரிக்காவிலுள்ள நேசப் படை ஸேனாதிபதி ஜெனரல் இஸன் ஹோவருடன் சம்பாஷித்தார். அவர் கடற்படைத் தலைவர் ஆண்டுரூஸ் கன்னிங்ஹாமையும் கண்டு பேசினார். அன்று நிருபர் கூட்டத்தில் அவர் கூறியதாவது,—நாம் வெற்றியடையும் மார்க்கத்தில் இருக்கிறோம் என்ற நம்பிக்கையை ஜனங்களிடம் உண்டு பண்ண நான் தயாராயில்லை. ஆனால், தோல்வி நமக்கு இல்லை என்று கூறுவேன். நான் இங்கிலாந்திலிருந்து நல்ல அபிப்பிராயங்களுடன் திரும்பி வருகிறேன். பிரிட்டிஷ் யுத்த தளவாடங்கள் உற்பத்தி நமக்கு அனுகூலமாகவே இருக்கின்றது. நேச நாட்டுத் தலைவர்களான, சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின் எல்லோரும் கீர்த்தி வாய்ந்தவர்கள். யுத்த ஆரம்பத்தில், ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவது எளிதான காரியமாக இருந்தது. ஆனால் ஹிட்லரும் - முஸோலினியும் நேசநாட்டுத் தலைவர்களுக்கு நிகரில்லை.

அட்டைப் படம்

★

பிரபல நடிகை
ஹஸ்னு பனு.

இறம்



லைசென்ஸ் தேவையில்லை

ஆடோமாடிக் ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும பயமுறுத்த ஆடோமாடிக் ரிபீடர் எவ்விதத் தொந்தரவுமின்றி 6 முறை சுடலாம. உண்மை ரிவால்வரைபபோல் சப்தம் கேட்கும. சுடுமபொழுது நெருப்பு தெரியும். தீங்கான விலங்குகள் பறவைகளை விரடட உபயோகமானது. அவசரத்திற்குஒவ்வொரு வீட்டிலும இருக்கவேண்டும். லைஸென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4/4/-35 ரவைகள் இலவசம். நெ. 8888 ரூ. 5/8/- 45 ரவை இலவசம். நெ. 9999 ரூ. 6/12/- 55 ரவை இலவசம். அதிகப்படி 400 ரவை ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. -/12/- ஆயில் ரூ. 1/12/- தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இலவசம்:— ஒரு தோலா லண்டன நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக் கடியாரம். ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கபபடும். சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினால், 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3 தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ்.

இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன எழுதுங்கள்.

LONDON C. COMPANY,
Post Box No. 165 (S.M.M.) LAHORE (India)
(EAB)

***

• சிறுவர் கதை

★

அக்பரும் மந்திரியும்

★

ரத்னு பாய்
எழுதியது

***

பல நூற்றாண்டுகளுக்கு முன் அக்பர் சக்கரவர்த்தி வேட்டையின் நிமித்தம் வனத்திற்குச் சென்றார். அப்போது தன் வேலையாட்களின் மூலம் தனக்குப் பிரியமான வீணையை எடுத்து வரும்படிக் கூறிச் சென்றார். அவ்வண்ணமே வீணையை ஆட்களும் கொண்டு வர, அரசர் வேட்டையாடி முடிந்தவுடன் ஒரு மரத்தடியில் அவ் வீணையை வர வழைத்து, அதில் தன் மனதை எங்கும் சிதற விடாதபடி வீணையின் நாதத்தில் மூழ்கி, தன்னையும் மறந்து காதுக்கினிய பல கீதங்களை பாடிக் கொண்டிருந்தார்.

இதை ஒரு குடியானவன் மறைவிலிருந்து பார்த்து, அதில் அவனும் மூழ்கினான். மூழ்கியவன் தெளிய வழியில்லாமல் அரசன் பாடுவதை அக்குடியானவன் அறியாமல் தானும் பாட ஆரம்பித்தான். ஆனால் அரசன் இதை அறிந்தானில்லை.

வெகு நேரமாய் அரசன் பாடி முடித்தும் குடியானவன் நிறுத்தவில்லை. அக்பரை விட அவன் அதில் ஆழ்ந்து விட்டதால் அதை எப்படி விட முடியும்?

சிறிது நேரம் அக்குரலை அப்போது தான் அக்பர் உற்று கேட்டார். தன்னைவிட வெகு திறமையாகப் பாடுபவன் யார் என்று அறிய ஆவல் கொண்டார். அடுத்த நிமிஷம் அரசன் பாடும்போது மதிப்பில்லாமல் எதிர்த்துப் பாடுபவனை சும்மா விடக் கூடாது என்று மூர்க்க குணம் தோன்றி, உடனே ஆட்களை விட்டு, அக்குரல் வரும் திக்கை நோக்கிச் சென்று அவனை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ஆட்களும் துரிதமாகச்சென்று பாடும் குடியானவனை நிறுத்தி அரசன் அழைப்பைக் கூறிஅழைத்துவந்தனர்.

அவன் ஒரு தட்சிணைத் தவணுகக்காணப்பட்ட அக்பருக்கு மேலும் கோபத்தைத் தூண்டியது. உடனே அவனை சிறைப்படுத்த உத்தரவிட்டார். அவனை ஆட்கள் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றபோது அங்கு அக்பருக்கு மந்திரிகளில் ஒருவராகிய கபூர்ஸாஹிப் என்பவர் இவன் சிறைப்பட்ட காரணம் யாதென ஆட்களையும், அப் பாடகனையும் கண்டு கேட்டார்.

"அக்பரின் பாட்டில் நான் ஆழ்ந்து அவருடன் நானும் மறைவிடமாகப் பாடியபடியால் சிறை தண்டனை கிடைத்தது" என்று பாடகன் கூறினான். இதைக்கேட்ட கபூர் சாஹேபுக்கு மனம் தாளவில்லை. ஆனாலும் அரசன் உத்திரவானபடியால் அவனை சிறைக்கு அனுப்பிவிட்டார்.

அக்பரும் வனத்தை விட்டு தன் வீடு திரும்பினார். தன்னை மதியாமல் நடந்த கைதி குடியானவனுக்கு இன்னும் எம்மாதிரியான கடுமையான் தண்டனை கொடுப்பது என்னும் யோசனையே அவரை மிக வாட்டிற்று.

ஒரு நாள் அக்பர் சக்ரவர்த்தி, தன் மந்திரிமார்களில் ஒருவராகிய கபூர் ஸாஹேபின் வீட்டு வழியே போய்க்கொண்டிருந்தார். சமயத்தை எதிர்பார்த்திருந்த கபூர் அரசன் வருவதை அறிந்து தன் வீட்டின் தெருத் திண்ணையின் கம்பத்தில் தன் ஒரே புத்ரனை குழந்தையைக் கட்டிவிட்டு அடிப்பதற்காக சாட்டை எடுத்து வந்து அரசன் தெருவின் மத்தியில் வரும்போது குழந்தையை அடிப்பதுபோல் சாட்டையை ஓங்கினார்.

இதைக் கண்ட அக்பர் சக்ரவர்த்தி, "மந்திரி ஒன்றும் அறியாக் குழந்தையை சாட்டை கொண்டு அடிப்பது தர்மமல்ல. அடிப்பதை நிறுத்து. அவன் மீது என்ன குற்றம்.? அதை முதலில் என்னிடம் சொல்" என்றார்.

கபூர், "மஹாராஜ்! இவனை குழந்தையாச்சே என்றெண்ணி இவனைத் தூக்கி என் மார்பில் அணைத்து முத்தம் தந்தால் என்னை உதைக்கவும், முகத்தில் காரி துப்பவும் முற்பட்டான். ஆதலால் இவனுக்கு இது தான் தண்டனை" என்று கூறிக்கொண்டே மறுபடியும் ஓங்கினார் சாட்டையை கபூர்.

அக்பர், "பலே அறியாக் குழந்தை. அதிலும் தான் பெற்றச் செல்வம். தன்னிடம் ஆடக் கொடுத்து வைப்பதுடன் இவனை இப்படி அடிக்க மூடனும் துணியமாட்டான்" என்றார்.

கபூர், "இது இருக்கட்டும். அரசனுக்குத் தன் பிள்ளையும் உலகில் உள்ளவர்களும் ஒன்று என்பது சாஸ்திரமும், தர்ம அரசாங்கத்தின் அம்சமுமாகும். அப்படி இருக்க கவிகற்ற குடியைக்கைதியாக்குவதுமட்டும் நியாயமா?" என்றார்:

தன் தவறை உணர்ந்த அக்பர் சக்ரவர்த்தி உடனே அக்குடியானவனை விடுதலை செய்து அவனை தன் ஆஸ்தான வித்வானாக நியமித்தார்.

வாசனை கூந்தல் தைலம், சுண்ணாம்பு வாசனை, தாம்பூல மாத்திரை. இவை 3 புட்டியும் தபால் செலவுடன் ரூ. 1-2-0.

'சிசு ரக்ஷணி' இசிவு, இளம்பிள்ளை வாதம், வயிற்றுக் கட்டி இவற்றின் பாதுகாப்பும், பரிகாரமும் கைகண்ட ஸித்தௌஷதம். தபால் செலவுடன் புட்டி ரூ. 2—14—0.

(முன் பணம் மணியார்டர் செய்யவும்)

எனது 3-வயது குழந்தையின் வயிற்றுக்கட்டி ஒரே புட்டி 'சிசு ரக்ஷணி'யால் பூராவும் குணமாயிற்று.

வி. ராமசந்திரன், பல்லாரி.

ஏ. எஸ். டெபோ,
76, கொன்னூர் ஹைரோட்,
பெரம்பூர், மதராஸ்.

நரஸுஸ் டீ, காபி

மிக உயர்ந்தவை

ஏனெனில்
குணத்திலும்,
தரத்திலும், நறுமணத்திலும் அவை நிகரற்றவை.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNK-14TH

FREE

EARN Rs. TEN PER-DAY. You can easily earn Rs. 10 - per day without any investment in your spare time. No labour. No secrecy. Thousands have been benefitted. Ask for samples. Full particulars sent FREE.

LONDON C. COMPANY.
P. B. 165 S.M.M. LAHORE.

(EAB)